விசுவாசியின் வாழ்வில்

தடைகள்

S. வான்மதி B.Sc., B.L.,

இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் அன்பின் வாழ்த்துக்கள்

ஏறக்குறைய 7 ஆண்டுகளாக பல இடங்களிலிருந்து சேகரித்த சுமார் 200 ஆண்டுகளுக்கு முன்பு வரை அச்சடிக்கப்பட்ட, ஆரோக்கிய உபதேசங்கள் அடங்கிய, கிறிஸ்தவ ஆவிக்குரிய புத்தகங்களை, பல மணி நேரம் கொடுத்து, பல இலட்சங்கள் செலவு செய்து மின் நூல்களாக (E-Books) இலவசமாக (மத்தேயு 10:8) உங்கள் கரங்களில் கொடுப்பதற்கு, அற்பரும் நீசருமான எங்களை பயன்படுத்தின உன்னத தேவனுக்கே சகல கனமும் மகிமையும் துதியும் உரித்தாவதாக. இதைப் போன்ற இன்னும் ஆயிரக்கணக்கான புத்தகங்களை தரவிறக்கம் (Download) செய்ய எங்களுடைய இணையதளத்தை சொடுக்கவும்/பார்க்கவும்: www.WordOfGod.in

95 சதவீத புத்தகங்கள் அச்சில் இல்லாதவைகளும், காப்புரிமை முடிந்தவைகளுமே. மீதமுள்ள புத்தகங்கள், நல்ல உபதேசங்களை கொண்டிருப்பதால், முடிந்தவரை ஆசிரியரின் உரிமையோடு மின்-நூலாக, இலவசமாக வெளியிடுகிறோம். ஒருவேளை உங்களுடைய புத்தகம் இப்படி இலவசமாக மின்-நூல் (E-Book) வடிவில் வரக்கூடாது என்று நினைத்தீர்களானால், தயவு செய்து எங்களை மன்னித்துக்கொள்ளுங்கள். எங்களுடைய WhatsApp எண்ணிற்கோ, மின் அஞ்சலிலோ (Email) எங்களுக்கு தெரியப்படுத்துங்கள். உடனடியாக எங்களுடைய இணைய-தளத்திலிருந்து எடுத்துவிடுகிறோம்.

WhatsApp/SMS: +91 90 190 490 70 / +91 7676 50 5599

Email: wordofgod@wordofgod.in

Wishing you in the mighty name of Jesus Christ

We had collected several thousands of old Tamil Spiritual Books which are rich in Sound Doctrines across various places of India for 7 years. Some of them are more than 200 years old books. We have spent millions of hours and money in scanning them and coverting them to E-Books. The work is still in progress. These E-books are published completely free of cost (Matt 10:8) forever. We give all the praise and glory to God for giving this wonderful opportunity to server Him. You can download thousands of similar Tamil Christian E-books from our website www.WordOfGod.in completely free of cost at any time.

95% of these E-Books are not being printed now and their copyrights are already expired. The remaining books are sent as E-Books mostly with the permission from the Authors. If you feel that your books should not be published as E-Book freely, kindly execuse and forgive us. Please let us know the book details by WhatsApp or Email we will remove them from our website.

WhatsApp/SMS: +91 90 190 490 70 / +91 7676 50 5599

Email: wordofgod@wordofgod.in

விசுவாசியின் வாழ்வில் தடைகள்

ஆசிரியர்

சகோதரி **S.வான்மதி** B.Sc., B.L.,

செல்லம் கிளினிக்

42/1, மேற்கு போயஸ் ரோடு, (இளங்கோ சாலை),

தேனாம்பேட்டை, சென்னை - 600 018

தொலைபேசி: 24357357, 2435 3258

First Edition : 2010
Author : S. Vanmathi B.Sc. B.L.,
Copyright : Author
Price : Rs.25/-

All rights reserved

Contents / cover may not be reproduced in whole or in part in any from without the express written consent of the author.

Printed by

Mass Typlographic, Chennai - 18
044 - 421 73887, 900 324 2003

பொருளடக்கம்

I. தேவனை யாராலும் தடை செய்ய முடியாது............ 6

II. தம்முடைய ஜனத்திற்கு
தேவன் விதித்திருக்கும் தடைகள்........................ 12

1. விக்கிரக ஆராதனைக்குத் தடை........................ 15

2. அவிசுவாசிகளோடு ஐக்கியத்திற்குத் தடை................ 18

3. எப்படியும் வாழத்தடை.. 25

4. எப்படியும் பேசத்தடை.. 34

5. எல்லாவற்றையும் அனுபவிக்கத் தடை........................ 39

III. தேவ ஜனத்திற்கு எதிராய் 'சத்துரு'
கொண்டு வரும் தடைகள்.. 44

1. வாக்குத்தத்தம் நிறைவேறாதது போல் தடைகள்..........46

2. பூமிக்குரிய ஆசீர்வாதங்களில் தடைகள்........................ 50

3. ஆவிக்குரிய காரியங்களில் தடைகள்........................ 56

IV. தடைகளை நீக்கும் தேவன்

1. நமக்கு முன்பாய் நடக்கிறார்.. 65

2. தடைகளை அகற்றுகிறார்.. 68

3. வாசல் வழியாய் உட்பிரவேசிக்கச் செய்கிறார்............ 70

V. சத்துரு கொண்டுவரும்
தடை நீங்கத் தேவையானது

1. விசுவாசம்.. 73

2. கர்த்தரிடமிருந்து வரும் ஆலோசனை........................ 79

3. முறுமுறுத்தல் கூடாது.. 85

4. துதித்தல்.. 88

5. பொறுமை.. 92

Assembly of God Church

E17, 18, Anna Nagar East, Chennai - 600 102.

சர்வ வல்லமையுள்ள தேவனால் கூடாதது ஒன்றுமில்லை. கர்த்தர் உங்களுக்காக அந்தத் தடைகளை நீக்க வல்லவராயிருக்கிறார். பெரிய பாறையாக இருந்தால் உடைத்து நொறுக்குவார். சிறு கல்லாய் இருந்தால் பொறுக்கிப் போடுவார், தண்ணீராய் இருந்தால் உலர்ந்த தரையாய் மாற்றுவார். சிங்கங்களாய் இருந்தால் அவைகளின் வாய்களைக் கட்டுவார். அன்றாட வாழ்வில் இயேசுவின் அற்புதத்தை நாம் அனுபவிக்க நம் விசுவாசத்தை வலுப்படுத்தி, நம்பிக்கையை இறுக்கி, பட்சபாதமில்லாத தேவனின் செயலைப் படம் பிடித்துக் காட்டும் அனுபவ உண்மைகள் இவை.

உண்மையும் அவசியமுமான அடிப்படை சத்தியத்தை தெளிவான கருத்தோட்டத்தில், எளிய நடையில், உபதேச உறுதியில், யாவரும் மெய் விடுதலையை அடைய வேண்டும் எனும் பாரதத்தில் உருவெடுத்த இப்புத்தகம், தான் படித்ததைச் சொல்லும் ஏடு அன்று. தேவகிருபையால் கடந்து வந்த வாழ்வின் படிப்பினைகளையும், மாறாதொரு வசன உண்மைகளையும் அடித்தளமாகக் கொண்டுள்ள கிருபையின் படைப்பு ஆகும். இயேசு கிறிஸ்துவின் உதவியாலும் ஏவுதலினாலும் தோன்றிய அனுகூல ஆலோசனையாகும்.

சகோதரி வான்மதி சுப்பிரமணியம் அவர்களும் குடும்பமும், தங்களின் விசுவாசத்தின் கடும் பரீட்சையிலும் தளர்ந்திடாமல், தேவனை உறுதியாகப் பற்றி, அவரை சேவிப்பதிலும் ஆராதிப்

பதிலும் ஆர்வமுடன் இருந்து அற்புதத்தைப் பெற்றதை அறிவேன். தேவனின் கிருபையும் தெளிவான நடத்துதலும், தெரிந்து கொண்ட தேவனுக்கு பயன்படும் நிலைகளையும் எண்ணி தேவனைத் துதிக்கிறேன். இப்புத்தகத்தை எழுத கிருபையளித்த தேவன், எண்ணிறந்தோருக்கு இதை மிகுந்த ஆசீர்வாதமாக்க ஜெபிக்கிறேன்.

தேவன் நமக்கு முன் வைக்கும் தடைகள் அவசியமானவை; அவை பாதுகாப்பு வேலி; தீமை, ஆக்கினையைத் தடுப்பவை. சாத்தான் ஏற்படுத்தும் தடைகளோ பாதிப்பவை வேதனைக் கண்ணிகள்; நன்மையையும் தேவனின் ஆசீர்வாதங்களையும் தடுப்பவை. தேவன் தடுப்பவைகளை அறிந்து, சாத்தானின் தடைகளை தேவதயவால் உடைத்தெறிந்து வெற்றியும் தேவனை மகிமைப்படுத்தும் வாழ்க்கை வாழ இப்புத்தகம் ஏராளமானோருக்கு உதவ தேவன் பயன்படுத்துவார் என அறிந்து, நம்பிக்கையுடன் இந்நூலைப் பரிந்துரை செய்கிறேன். தேவன் மகிமைப்படுவாராக.

Pastor ABRAHAM THOMAS
Senior Pastor AG Church
Annanagar, Chennai
and
Superintendant
Assesemblies of God
Tamilnadu

I

தேவனை யாராலும் தடை செய்ய முடியாது

எபிரெய பாஷையிலே கர்த்தருக்கு 'எல்ஷடாய்' என்ற நாமம் உண்டு. அதற்குப் பொருள் 'சர்வ வல்லமையுள்ள தேவன்' என்பது ஆகும். ஆம். வானத்தையும் பூமியையும் படைத்த சர்வ வல்ல தேவன் ஒருவர் உண்டு என்பதை நாம் விசுவாசிக்க வேண்டும். ஆதியாகமம் ஒன்றாம் அதிகாரத்தில் இரண்டாம் வசனம் சொல்லுகிறது. **"பூமியானது ஒழுங்கின்மையும் வெறுமையுமாயிருந்தது. ஆழத்தின் மேல் இருள் இருந்தது"** என்று தேவன் தம்முடைய வல்லமையினால் இவ்வுலகை மிகவும் நேர்த்தியாய் ஒழுங்காய் அமைத்து, அற்புதமாய் இயக்கி வருகிறார். வானம், பூமி,

இவைகளில் காணப்படும் சிருஷ்டிப்புக்களும், உலகம் இயங்கும் விதமும், அவருடைய வல்லமையை பறை சாற்றும் ஒன்றாய் அமைகிறது. **“காணப்படாதவைகளாகிய அவருடைய நித்திய வல்லமை, தேவதத்துவம் என்பவைகள், உண்டாக்கப் பட்டிருக்கின்றவைகளினால் உலகமுண்டானது முதற்கொண்டு தெளிவாக காணப்படும்” *(ரோமர் 1:20)*.**

மனுஷன் தான் உருவாக்கின சாதனங்களை மின்சாரத்தின் உதவியால் இயக்குகிறான். மின்சாரம் தடைபடும்போது, ஜெனரேட்டர் கொண்டு இயங்கவைக்கிறான்: இன்று மனிதன் தன் அறிவைக் கொண்டு எத்தனையோ அரிய கண்டுபிடிப்புகளைப் படைத்து சாதனை புரிகிறான். ஆனால் அவன் கண்டுபிடிப்புகளை கொண்டு இந்த உலகை சீராய் இயங்க வைக்க முடியுமா?

இந்த உலகம் படைக்கப்பட்டது குறித்தும், அது சீராய் இயங்கும் தன்மை குறித்தும், மனிதன் தன் சுயஅறிவை உபயோகித்து அநேக விஞ்ஞான ரீதியான விளக்கங்களைத்தர முற்படலாம். ஆனால் தேவனுடைய சர்வ வல்லமைக்கு நிகராய் அவன் ஒன்றையும் காட்ட முடியாது. வேதம் சொல்லுகிறது **“அவரைக்குறித்து நாங்கள் கேட்டது எவ்வளவு கொஞ்சம் அவருடைய வல்லமையின் இடி முழக்கத்தை அறிந்தவன் யார்” *(யோபு 26:14)***

சர்வ வல்லமையுள்ள தேவனை ஒருவரும் தடை செய்ய முடியாது. அவர் தாம் செய்ய நினைத்ததை செய்து முடிக்கும் தேவனாய் இருக்கிறார். அவர் தம் வார்த்தையினாலே சகலத்தையும் சிருஷ்டித்தார். வெளிச்சம் உண்டாகக் கடவது என்றார். வெளிச்சம் உண்டாயிற்று. ஆகாய விரிவு உண்டாகக் கடவது என்றார் ஆகாய விரிவு உண்டாயிற்று. வானத்தின் கீழ் இருக்கும் ஜலம் ஓரிடத்தில் சேரவும் வெட்டாந்தரை காணப்படவும் கடவது என்றார். அது அப்படியே ஆயிற்று. ஆகாய விரிவில் சுடர்கள் உண்டாகக் கடவது என்றார். உடனே சூரியன், சந்திரன், நட்சத்திரங்கள் உண்டாயிற்று. நீந்தும் ஜீவ ஜந்துக்கள், பறக்கும் பறவைகள், பூமியிலே நாட்டு மிருகங்கள், காட்டு மிருகங்கள், ஊரும் பிராணிகள் பிறப்பிக்கக்கடவது என்றார். அதுவும் அப்படியே ஆயிற்று.

"தன் படைப்புகள் எல்லாவற்றிற்கும் சிகரமாய் மனிதனை சிருஷ்டித்தார்" (ஆதியாகமம் 1:27). அவன் விலா எலும்புகளில் ஒன்றை எடுத்து மனுஷியை உருவாக்கினார்.

வேதம் சொல்லுகிறது. **"நீர் ஒருவரே கர்த்தர் நீர் வானங்களையும், வானாதி வானங்களையும் அவைகளுடைய சர்வ சேனைகளையும், பூமியையும் அதிலுள்ள எல்லாவற்றையும், சமுத்திரங்களையும் அவைகளிலுள்ள எல்லாவற்றையும் உண்டாக்கினீர். அவைகளை எல்லாம் நீர் காப்பாற்றுகிறீர். வானசேனைகள் உம்மை பணிந்து கொள்கிறது" (நெகேமியா 9:6)**

கடற்கரை மணலிலே அமைதியாய் அமர்ந்து கடலின் அலைகளைக் கவனிக்கும்போது மிக ஆச்சரியமாய் இருக்கும். தேவன் கடலுக்கு ஒரு எல்லையை வைத்திருக்கிறார். நுரையைக் க்கிக் கொண்டு சீற்றத்தோடு வரும் அலைகள் கர்த்தர் குறித்த எல்லையைத் தொட்டவுடன் திரும்பி விடுகிறது. **"கர்த்தர் அதற்கென வைத்திருக்கும் தடையை மீறுவதில்லை" (எரேமியா 5:22).** தேவரீர் சமுத்திரத்தின் பெருமையை ஆளுகிறவர். அதன் அலைகள் எழும்பும்போது அவைகளை அடங்கப் பண்ணுகிறார். ஆம் அவர் ஒருவரே **சர்வ வல்லமையுள்ள தேவன்.** அவரை ஒருவரும் தடைசெய்ய முடியாது. அவர் செய்ய நினைப்பதும் தடைபடாது. யோபு சொல்லுகிறார். **"தேவரீர் சகலத்தையும் செய்ய வல்லவர், நீர் செய்ய நினைத்தது தடைபடாது என்பதை அறிந்திருக்கிறேன்" என்று (யோபு 42:2).**

தேவன் தம்முடைய மகத்துவத்தையும் வல்லமையையும் வெளிப்படுத்த அதிசயங்களையும் அற்புதங்களையும் செய்யும் தேவனாய் இருக்கிறார். எகிப்து தேசத்திலே இஸ்ரவேல் ஜனங்களின் உபத்திரவத்தைக் கண்ட தேவன். அவர்கள் மீது இரக்கம் கொண்டு, அவர்களை மீட்டு பாலும் தேனும் ஓடுகிற நலமும் விசாலமுமான தேசத்தில் கொண்டு சேர்க்க வாக்குக் கொடுக்கிறார். தம்முடைய வாக்குத்தத்தத்தை நிறைவேற்ற அநேக அதிசயங்களையும் அற்புதங்களையும் செய்கிறார். **"அவர் தம் வாக்கினால் உரைத்ததை தம் கரங்களால்**

நிறைவேற்றியபோது அவரை ஒருவரும் தடைசெய்ய முடியவில்லை" (1 இராஜாக்கள் 8:15)

வேதம் சொல்லுகிறது. **"கர்த்தர் பகலில் அவர்களை வழி நடத்த மேக ஸ்தம்பத்திலும், இரவில் அவர்களுக்கு வெளிச்சம் காட்ட அக்கினி ஸ்தம்பத்திலும் அவர்களுக்கு முன் சென்றார்"** யாத்திராகமம் (13:21) என்று. அப்படியிருக்கும்போது, இஸ்ரவேல் ஜனங்கள், தங்களுக்கு முன்பாக தடையாக நின்ற சிவந்த சமுத்திரத்தைக் கண்டு திகைத்து நின்றனர். ஆனால் தேவனோ **"நான் பார்வோனாலும் அவன் இரதங்களாலும் அவன் குதிரை வீரராலும் மகிமைப்படும்போது நானே கர்த்தர் என்பதை எகிப்தியர் அறிவார்கள் என்றார்"** (யாத்திராகமம் 14:18)

கர்த்தர் பெரிய அற்புதத்தைக் கட்டளையிட்டார். தடையாய் நின்ற சமுத்திரத்தை இஸ்ரவேல் ஜனங்களுக்காய் பிரிந்து ஒதுங்கி வறண்டுபோகப் பண்ணினார். **"அவர்கள் வலது புறத்திலும் அவர்கள் இடது புறத்திலும் ஜலம் அவர்களுக்கு மதிலாக நின்றது. ஜனங்கள் சமுத்திரத்தின் நடுவாக வெட்டாந்தரையிலே நடந்து போனார்கள்" யாத்திராகமம் 14:21,22).**

ஆனால் எகிப்தியர் அவ்வாறு சமுத்திரத்தைக் கடக்க முற்பட்டபோது, சமுத்திரம் பலமாய் திரும்பி வந்து அவர்களை மூடிப்போட்டது. ஆம், தேவன் தம்முடைய ஜனங்களுக்காய் மிக அற்புதமாய் சிவந்த சமுத்திரத்தின் நடுவே பாதை உண்டாக்கினபோது அவரை ஒருவராலும் தடை செய்ய முடியவில்லை. அதே சமுத்திரம் பார்வோனையும் அவன் சேனையையும் மூடிப்போட தேவன் கட்டளையிட்டபோது அவரைத் தடுத்து நிறுத்த யாரால் முடிந்தது!

சாத்ராக், மேஷாக், ஆபேத்நேகோ என்பவர்கள் பாபிலோன் காரியங்களை விசாரிக்கும் பொருட்டு, நேபுகாத்நேச்சரால் நியமிக்கப்பட்ட யூத மனிதர்கள், அவர்கள் கர்த்தரைத் தெய்வமாக கொண்டு, அவரை மட்டும் சேவிக்கும் வைராக்கியத்தோடு காணப்பட்டார்கள். ஆனால் அவர்கள் தேவனை அவ்வாறு சேவிக்க முடியாதபடிக்கு, சத்துரு தடையை உண்டு பண்ணினான். இராஜாவால் உண்டாக்கப்பட்ட சிலையை

மாத்திரம் பணிந்து கொள்ள வேண்டும். அவ்வாறு செய்யத் தவறியவர்கள் அக்கினிச் சூளையிலே எறியப்படுவார்கள் என்று இராஜா கட்டளை பிறப்பிக்கிறான். உங்களை இந்த அக்கினிக்கு தப்புவிக்கப் போகிற தேவன் யார் என்று ஏளனமாய்க் கேட்கிறான். அதற்கு சாத்ராக், மேஷாக், ஆபேத்நேகோ ஆகிய மூவரும் இராஜாவை நோக்கி, நாங்கள் ஆராதிக்கிற தேவனே, எங்களைத் தப்புவிக்க வல்லவராயிருக்கிறார்.

"அவர் எரிகிற அக்கினி சூளைக்கும் இராஜாவாகிய உம்முடைய கைக்கும் நீங்கலாக்கி விடுவிப்பார் என்றார்கள்" *(தானியேல் 3:17)*

அப்படியே அந்த மூன்றுபேரும் ஒருசேதமும் அடையாமல் அக்கினி சூளையிலிருந்து வெளியே வருகிறார்கள். அவர்கள் சரீரத்தில் பாதிப்பில்லை, சால்வைகளில் சேதமில்லை, தலைமயிர் கருகவில்லை. புகையின் மணம் கூட அவர்களிடத்தில் வீசவில்லை, சூளையை ஒரு தரத்திற்கு ஏழுதரம் சூடாக்கச் சொன்ன இராஜா, அக்கினியின் கடுமை தூக்கிச் சென்றவர்களையே கொன்று போட்டதைக் கண்டவன் சொல்லுகிறான். **"சாத்ராக், மேஷாக், ஆபத்நேகோ என்பவர்களுடைய தேவனுக்கு ஸ்தோத்திரம். அவர்கள் தங்களுடைய தேவ்னைத் தவிர வேறொரு தேவனையும் சேவித்து பணியாமல் அவரையே நம்பி இராஜாவின் கட்டளையைத் தள்ளி தங்கள் சரீரங்களை ஒப்புக் கொடுத்ததினால், அவர் தமது தூதனை அனுப்பி தம்முடைய தாசரை விடுவித்தார்" *(தானியேல் 3:28)* என்று.**

ஆம் தன்னை ஆராதித்த தம் பிள்ளைகளுக்கு எதிராய் வந்த தடையை அகற்றி அவர்களை விடுவிக்கவும் அதன்மூலம் அவர் நாமம் மகிமைப்படவும் கர்த்தர் தம் தூதனை அனுப்பி அற்புதம் செய்தபோது, அவரை தடைசெய்ய யாரால் முடிந்தது.

பெதஸ்தா என்று அழைக்கப்பட்ட குளம் எருசலேமில் ஆட்டு வாசலினருகே இருந்தது. சில சமயங்களில் தேவதூதன் அந்தக் குளத்தின் தண்ணீரைக் கலக்குவான். தண்ணீர் கலங்கின பின்பு யார் முந்தி அந்தக் குளத்திற்குள் இறங்குகிறானோ அவன் எப்பேர்ப்பட்ட வியாதியஸ்தனாக இருந்தாலும் சொஸ்தமாவான். அங்கு 38 வருடம் வியாதியாயிருந்த ஒருவன் ஒருதரம் கூட

அந்தக் குளத்திற்குள் முதன் முறையாய் இறங்க முடியாமல் இருந்தான். அவனால் முதல் நபராக ஓடிச்சென்று இறங்க முடியாத சூழ்நிலை. ஆனால் மனதுருக்கம் நிறைந்த நம் ஆண்டவரோ அவன் குளத்திற்குள் இறங்காமலேயே, அவனை சொஸ்தமாக்க சித்தம் கொண்டார். அவரை யாராலும் தடைசெய்ய முடியவில்லை. அவர் சித்தம் கொண்டதை செய்து முடித்தார். வேதம் சொல்லுகிறது இயேசு அவனை நோக்கி **"எழுந்திரு உன் படுக்கையை எடுத்துக் கொண்டு நட என்றார். உடனே அந்த மனுஷன் சொஸ்தமாகி தன் படுக்கையை எடுத்துக் கொண்டு நடந்து போனான்" *(யோவான் 5:8,9)***

இன்றைக்கு உலகில் மருத்துவர்களால் கண்டுபிடிக்க முடியாத நோய்கள் அல்லது கண்டு பிடித்தாலும் குணமாக்க முடியாத நோய்கள் இருக்கலாம். வறுமை, இயலாமை, செய்வினை, பில்லி, சூன்ய கட்டுகள் சுகத்திற்கு தடையாய் நிற்கலாம். ஆனால் தேவன் நம்மை சுகமாக்க சித்தம் கொள்ளும்போது எல்லாத் தடைகளும் தவிடுபொடியாகும். அவர் அற்புதம் செய்வதை யாரும் நடைசெய்ய முடியாது. நிச்சயம் சுகமாக்குவார் ஆமென்.

II

தம்முடைய ஜனத்திற்கு தேவன் விதித்திருக்கும் தடைகள்

நாம் ஒளியாகிய தேவனைத் தெரிந்து கொள்வதற்கும் ஏற்றுக் கொள்வதற்கும் முன்பு அந்தகாரமாயிருந்தோம். வேதம் சொல் [லுகிறது ***"முற்காலத்தில் நீங்கள் அந்த கார மாயிருந்தீர்கள். இப்பொழுதோ கர்த்தருக்குள் வெளிச்சமாய் இருக்கிறீர்கள். வெளிச்சத்தின் பிள்ளைகளாய் நடந்து கொள்ளுங்கள்" (எபேசியர் 5:8)***

நம் புத்தியிலே இருளை அனுமதித்தது, அது அந்தகாரப்பட்டதால், நாம் ஒளியாகிய தேவனை கண்டு கொள்ள முடியவில்லை. நம்

புத்தியிலே காணப்பட்ட அந்தகாரம் நம்மை தேவனை விட்டுப் பிரிக்கும் ஒன்றாய் இருந்தது. நம்மை தேவனுடைய ஜீவனுக்கு அந்நியராக்கியது. வேதம் சொல்லுகிறது **"அவர்கள் புத்தியில் அந்தகாரப்பட்டு தங்கள் இருதயக் கடினத்தினால் தங்களில் இருக்கும் அறியாமையினாலே தேவனுடைய ஜீவனுக்கு அந்நியராயிருந்தார்கள்" *(எபேசியர் 4:18)***

நாம் செய்வது எவ்வளவு அசுத்தமானது, தவறானது என்பதை அறியும் உணர்வு இல்லாதவர்களாய் சகல அசுத்தக் காரியங்களையும் செய்பவர்களாய் காணப்பட்டோம்.

ஆனால் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவை தேவனாகவும், இரட்சகராகவும், ஏற்றுக்கொண்டபோது அவருடைய கிருபையினால் இரட்சிக்கப்பட்டு பரிசுத்த ஆவியானவரை நமக்குள் முத்திரையாய் பெற்றோம். ஆகவே தேவன் தம்முடைய வெளிச்சத்தை நம்மில் பிரகாசிக்கப்பண்ணி நம்மில் காணப்பட்ட அந்தகாரத்தை நீக்கிப் போட்டார். **"அப்பொழுது கிறிஸ்து உன்னை பிரகாசிப்பாரென்று சொல்லியிருக்கிறார்"** *(எபேசியர் 5:14).* அப்படி இருக்கும்போது முன்பு காணப்பட்ட தேவனுக்குப் பிரியமில்லாத அசுத்த காரியங்கள் ஒன்றும் நம் வாழ்விலே காணப்படக் கூடாது. வேதம் சொல்லுகிறது **"முந்தின நடக்கைக்குரிய மோசம்போக்கும் இச்சைகளாலே கெட்டுப்போகிற பழைய மனுஷனை நீங்கள் களைந்து போட்டு உங்கள் உள்ளத்திலே புதிதான ஆவியுள்ளவர்களாகி, மெய்யான நீதியிலும் பரிசுத்தத்திலும் தேவனுடைய சாயலாக சிருஷ்டிக்கப்பட்ட புதிய மனுஷனை தரித்துக் கொள்ளுங்கள்"** *(எபேசியர் 4:22,23,24).*

ஒரு வீட்டிற்கு நான் சென்றிருந்தபோது, ஒரு காரியத்தை அங்கு கவனித்தேன். அந்த வீட்டின் தகப்பனார் தன் மகனை நோக்கி அநேகக் காரியங்களைக் குறித்து 'இதைச் செய்யாதே, அதைச் செய்யாதே, இப்படிச் செய்யாதே' என்று சொல்லிக் கொண்டிருந்தார். அந்த மகன் வேண்டா வெறுப்பாய் தன் தகப்பன் சொன்னதைக் கேட்டுக் கொண்டிருந்தான். அவன் ஒருவேளை நினைத்திருக்கலாம் நம் தகப்பன் நம்முடைய சுதந்திரத்தில் இப்படிக் குறுக்கிடுகிறாரே எதற்கெடுத்தாலும் தடை விதிக்கிறாரே என்று. ஆனால் சிறிது காலத்திற்குப் பிறகு

தன் தகப்பன் விதித்த தடைகளை தான் கடை பிடித்ததால் எத்தனை நன்மைகளை தன் வாழ்வில் பெற்றிருக்கிறோம் என்பதை உணர்ந்து கொள்வான்.

பெற்றோர் விதிக்கும் தடைகள் தங்கள் நன்மைக்கே என்பதை சிறுபிள்ளைகளால் உடனே புரிந்து கொள்ள முடிவதில்லை. அதில் என்ன நன்மை அடங்கியிருக்கிறது என்று ஆராய்ந்து பார்ப்பதும் இல்லை. ஆனால், ஒரு காலக்கட்டத்தில் தன் பெற்றோர் தன் வாழ்வில் விதித்த தடைகள் காட்டின வழிமுறைகள் கொடுத்த ஆலோசனைகள் எவ்வளவு பிரயோஜனமானவைகள், நன்மையானவைகள் என்பதை புரிந்து கொள்வார்கள்.

நம்முடைய பரம தகப்பன் தம்முடைய ஜனங்களின் வாழ்க்கையிலே அநேகத் தடைகளை விதித்திருக்கிறார். அவர் விதித்திருக்கும் ஒவ்வொரு தடையும் நம்முடைய நன்மைக்கே என்பதை நாம் விசுவாசிக்க வேண்டும். தேவன் நமக்கென்று வைத்திருக்கும் ஜீவ கிரீடத்தைப் பெறும் ஓட்டத்தில் நாம் சீராய் இருக்க வேண்டுமானால் தேவன் நமக்கு விதித்திருக்கும் தடைகளுக்கு நாம் கீழ்ப்படியவேண்டும். பந்தயத்தில் பங்கு பெறுபவன் தனக்கு விதிக்கப்பட்டிருக்கும் கட்டுப்பாடுகள் எல்லாவற்றிற்கும் கீழ்ப்படிந்து செயல்படுகிறான். அழியும் கிரீடத்தைப் பெற இப்படிப்பட்ட கீழ்ப்படிதல் இருக்குமானால் அழிவில்லாத ஜீவ கிரீடத்தை நம் தேவனிடமிருந்து பெற்றுக் கொள்ள தேவன் நமக்கு விதித்திருக்கும் தடைகளுக்கு நாம் கீழ்ப்படிந்திருப்பது எவ்வளவு அவசியம் என்பதை சிந்தித்துப் பாருங்கள்.

1 விக்கிரக ஆராதனைக்குத் தடை

ஒளியாகிய தேவன் நமக்கு விதித்திருக்கும் தடைகளில் மிகவும் முக்கியமான ஒன்று விக்கிரக ஆராதனைக்கு விலகி இருப்பதாகும். தேவனுடைய பிள்ளைகள் ஒருபோதும் இந்தக் கிரியைக்கு தங்களை உட்படுத்தக் கூடாது. வேதம் சொல்லுகிறது. **"மேலே வானத்திலும் கீழே பூமியிலும் பூமியின் கீழ் தண்ணீரிலும் உண்டாகியிருக்கிறவைகளுக்கு ஒப்பான ஒரு சுருபத்தையாகிலும் யாதொரு விக்கிரகத்தை யாகிலும் நீ எனக்கு உண்டாக்க வேண்டாம். நீ அவைகளை நமஸ்கரிக்கவும் சேவிக்கவும் வேண்டாம்" *(உபாகமம் 5:8,9)***

நாம் தேவனை ஆவியோடும் உண்மையோடும் தொழுது கொள்வதை விரும்புகிறார். **"உண்மையாய் தொழுது கொள் கிறவர்கள் பிதாவை ஆவியோடும் உண்மையோடும் தொழுது கொள்ளும் காலம் வரும். அது இப்பொழுதே வந்திருக்கிறது. தம்மைத் தொழுது கொள்கிறவர்கள் இப் படிப்பட்டவர்களாகியிருக்கும்படி, பிதாவானவர் விரும்பு கிறார். தேவன் ஆவியாயிருக்கிறார். அவரைத் தொழுது**

கொள்ளுகிறவர்கள் ஆவியோடும் உண்மையோடும் அவரைத் தொழுதுகொள்ள வேண்டும்" *(யோவான் 4:23.24)*

கர்த்தர் இஸ்ரவேல் ஜனத்தை மிக அருமையாய் வழி நடத்தினார். எகிப்தின் அடிமைத்தனத்திலிருந்து அவர்களை விடுவிக்க, அவர் செய்த அதிசயங்களும் அற்புதங்களும் ஏராளமாய் இருந்தது. சீனாய் மலையில் கர்த்தர் மோசேயோடு பேசி தம்முடைய ஜனங்களுக்கு தான் விதித்திருக்கும் கட்டளைகளையெல்லாம் தம்முடைய விரலினால் இரண்டு கற்பலகைகளில் எழுதிக்கொடுத்தார். ஆனால் இஸ்ரவேல் ஜனங்களோ மோசே தங்களிடம் வந்து சேர்வதற்குள் தங் களிடம் இருந்த பொன்னணிகளைக் கழற்றி தங்கத்தால் ஒரு கன்றுக்குட்டியை வார்த்து அதற்கு ஒரு பலி பீடத்தைக் கட்டி தங்களை எகிப்து தேசத்திலிருந்து அழைத்துக் கொண்டு வந்த தெய்வம் இதுவே என்று அதனைப் பணிந்து பண்டிகை கொண்டாடினார்கள். அவர்கள் செய்த இந்தக் காரியம் கர்த்தருக்கு கோபத்தை உண்டு பண்ணிற்று. கர்த்தர் மோசேயைப் பார்த்து சொல்கிறார் **"அவர்களுக்கு நான் விதித்த வழியை அவர்கள் சீக்கிரமாய் விட்டு விலகினார்கள். அவர்கள் தங்களுக்கு ஒரு கன்றுக்குட்டியை வார்ப்பித்து அதைப் பணிந்து கெண்டு அதற்குப் பலியிட்டு இஸ்ரவேலரே உங்களை எகிப்து தேசத்திலிருந்து அழைத்துக் கொண்டு வந்த உங்கள் தெய்வங்கள் இவைகளே என்று சொன்னார்கள். இந்த ஜனங்கள் வணங்கா கழுத்துள்ள ஜனங்கள். ஆகையால் என் கோபம் இவர்கள்மேல் மூலவும் நான் இவர்களை அழித்துப் போடவும் நீ என்னை விட்டுவிடு என்றார்" *(யாத்திராகமம் 32:8,9,10).***

பழைய ஏற்பாட்டில், அநேக இடங்களில் விக்கிரக ஆராதனை அவருக்குப் பிரியமில்லாத காரியம் என்பதைக் தெளிவாய் சொல்லியிருக்கிறார். இந்தக் காரியத்தைப் பொறுத்தமட்டில் ''நான் மிகவும் எரிச்சலுள்ள தேவன் என்பதைத் தெரியப்படுத்துகிறார்'' *(யாத்திராகமம் 20:5, 34:14).* ''விக்கிரக ஆராதனைக்கு விலகியிருப்பது அவசியமான ஒன்று என்று புதிய ஏற்பாட்டிலும் தெளிவாய் சொல்லப்பட்டுள்ளது'' *(I யோவான் 5:21).* ஏனென்றால் அவர்கள் அவ்வாறு செய்யும்போது **"தேவனுடைய சத்தியத்தை அவர்கள் பொய்யாக மாற்றி**

சிருஷ்டிகரைத் தொழுது சேவியாமல், சிருஷ்டியை தொழுது சேவித்தார்கள்" (*ரோமர் 1:25*).

ஒரு சிலர் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவை ஏற்றுக் கொண்டு இரட்சிக்கப்படும்போது, தங்களை விக்கிரக ஆராதனைக்கு விலக்கிக் காத்துக் கொள்கிறார்கள், ஆனால் விக்கிரங்கங்களுக்கு படைக்கப்பட்டதை உண்ணக்கூடாது என்பதை அறியாமலிருக்கிறார்கள். அப்படிப் புசிப்பது தேவனுக்கு பிரியமில்லாத காரியம் என்று உணராமல் இருக்கிறார்கள்.

வேதம் சொல்லுகிறது **"அவிசுவாசிகளில் ஒருவன் உங்களை விருந்துக்கு அழைக்கும்போது போக உங்களுக்கு மனதிருந்தால் மனசாட்சியின் நிமித்தம் ஒன்றையும் விசாரியாமல் உங்கள் முன் வைக்கப்படுகிற எதையும் புசியுங்கள். ஆயினும், இது விக்கிரகங்களுக்குப் படைக்கப்பட்டதென்று, ஒருவன் உங்களுக்குச் சொன்னால் அப்படி அறிவித்தவனிமித்தமும் மனசாட்சியினிமித்தமும் புசியாதிருங்கள்"** (I கொரிந்தியர் *10:27,28*).

ஆகவே இப்படிப்பட்ட காரியங்களாகிய விக்கிரக ஆராதனைக்கும் விக்கிரகங்களுக்குப் படைக்கப்பட்டதற்கும் நம்மை விலக்கிக் காத்துக் கொள்வது அவசியமாயிருக்கிறது. அதுவே தேவ சித்தத்தின்படி அறியும் அறிவாயிருக்கிறது. கர்த்தர் தம்முடைய பிள்ளைகளுக்கு விதித்திருக்கும் இந்தத் தடையை மீறி நாம் ஒருபோதும் அவருக்கு எரிச்சல் உண்டாக்கக் கூடாது.



2 அவிசுவாசிகளோடு ஐக்கியத்திற்கு தடை

வேதம் சொல்லுகிறது,
"அவிசுவாசியுடனே விசுவாசிக்கு பங்கேது"
(II கொரிந்தியர் *6:15*).

எப்படிப்பட்ட ஐக்கியத்தில் தேவன் பிரியமாயிருக்கிறார், எப்படிப்பட்ட ஐக்கியத்தை கர்த்தர் தடை செய்கிறார் என்பதிலே தேவ பிள்ளைகளாகிய நாம் கவனமாய் இருக்க வேண்டும். அவிசுவாசியோடு சுத்தமாக எந்தத் தொடர்பும் வைத்துக் கொள்ளக்கூடாது என்று நினைப்பவர்கள் சிலர், வேறு சிலர் விக்கிரக ஆராதனைக்கு மட்டும்தான் நாம் அவர்களோடு ஐக்கியப்படகூடாது. மற்றபடி வேறு காரியங்களில் ஐக்கியப்படலாம் என்று நினைக்கிறார்கள். அவிசுவாசிகளைக் கண்டாலே திரும்பிக் கொண்டுபோனால் அவர்களுக்கு சத்தியத்தை யார் அறிவிப்பார்கள். நாம் அவ்வாறு அவர்களை விட்டு விலகிப் போவதை தேவன் விரும்புவதில்லை. இயேசு சொல்கிறார் **"பிணியாளிகளுக்கு வைத்தியன் வேண்டியதையல்லாமல், சுகமுள்ளவர்களுக்கு வேண்டியதில்லை"** (லூக்கா *5:31*). ஒருவனிடத்தில் *100*

ஆடுகள் இருந்ததில் ஒன்று தொலைந்து போய் திரும்பக் கிடைக்கும்போது, இருந்த 99 ஆடுகளைக் காட்டிலும் திரும்பக் கிடைத்த ஒரு ஆட்டிற்காய் அதிக சந்தோஷப்படுவானாம். அதுபோல பரலோக இராஜ்யத்தில், ஒரு ஆத்துமா இரட்சிக்கப்படும்போது அளவில்லா சந்தோஷம் ஏற்படுகிறது. ஆகவே நாம் அவிசுவாசிகள் பட்சத்தில் இருந்து அன்போடும் பொறுமையோடும் சத்தியத்தை எடுத்துச் சொல்ல கடமைப்பட்டிருக்கிறோம்.

ஆண்டவர் இயேசு கிறிஸ்து சொல்லுகிறார் "**ஆகையால் நீங்கள் புறப்பட்டுப்போய் சகல ஜாதிகளையும் சீஷராக்கி பிதா, குமாரன், பரிசுத்த ஆவியின் நாமத்திலே அவர்களுக்கு ஞானஸ்நானங் கொடுத்து நான் உங்களுக்கு கட்டளையிட்ட யாவையும் அவர்கள் கைக்கொள்ளும்படி அவர்களுக்கு உபதேசம் பண்ணுங்கள்**" என்று (மத்தேயு 28:19,20).

ஆனால் அதே சமயம் அவர்களோடு ஐக்கியப்படும் காரியங்களிலே ஜாக்கிரதையாய் இருக்க வேண்டும். நான் மிகுந்த வேதனையோடு இருக்கிறேன். எனக்கு உதவி செய்யுங்களேன், எனக்காய் ஜெபியுங்களேன் என்று உங்களிடம் ஒருவர் வரும்போது, அவருக்காய் ஜெபியுங்கள். உங்களால் இயன்ற உதவியைச் செய்யுங்கள். ஆனால் அதே சமயம் அந்த நபர் உங்களை விருந்துக்கு அழைக்கும்போது, இது விக்கிரகங்களுக்குப் படைக்கப்பட்டது என்று சொன்னால் அந்தப் பந்தியிலே பங்கு பெற்று அவர்களோடு ஐக்கியப்படாதிருங்கள்.

தினந்தோறும் ஜெபியுங்கள், வேதத்தை வாசியுங்கள், இதைச் செய்யுங்கள், இதைச் செய்யாதீர்கள். இங்கு ஐக்கியம் கொள்ளுங்கள். இங்கு ஐக்கியப் படாதிருங்கள் என்பதை ஆண்டவர் உங்களுக்குத் தெளிவாய் உணர்த்துவார்.

அவிசுவாசிகளோடு, ஐக்கியப்படும் காரியங்களிலே எந்தெந்தக் காரியம் நம்மை ஆண்டவரைவிட்டு பின்வாங்கத் தூண்டும் காரியமாய் இருக்கிறதோ, அதிலே நீங்கள் ஐக்கியப்படாதிருங்கள். எந்தெந்தக் காரியம் ஒரு சகோதரன் இரட்சிக்கப்படாமல் இடறக் காரணமாயிருக்கிறதோ, அதிலும் ஐக்கியப்படாதிருங்கள்.

விசுவாசிகளின் ஐக்கியம் நமக்கு மிகவும் அவசியமான ஒன்று. வேதம் சொல்லுகிறது, **"சபை கூடிவருதலை சிலர் விட்டுவிடுகிறதுபோல நாமும் விட்டுவிடாமல் ஒருவருக்கொருவர் புத்தி சொல்லக் கடவோம்"** (எபிரெயர் *10:25*). விசுவாசியான தோழியோடு உறவாடுவதற்கும் மற்ற தோழிகளோடு உறவாடுவதற்கும் உள்ள வித்தியாசத்தை என் இருதயத்தில் அடிக்கடி உணர்ந்திருக்கிறேன். நான் என்னுடைய காரியங்களை அவர்களோடு பகிர்ந்துகொள்ளும்போது வேதத்தை ஆதாரமாகக் கொண்ட அநேக ஆலோசனைகளைப் பெற்று பயனடைந்திருக்கிறேன். அவர்களுடைய சாட்சிகள் என்னை விசுவாசத்தில் உற்சாகப்படுத்தியிருக்கிறது. அவர்களுடைய விசுவாச வார்த்தைகள் என்னை பெலப்படுத்தியிருக்கிறது. எல்லாவற்றிற்கும் மேலாக அவர்கள் எனக்காக ஜெபிக்கும்போது தேவனின் சமாதானம் என்னை நிரப்பியதை நான் உணர்ந்திருக்கிறேன். இப்படிப்பட்டவர்களுடைய ஐக்கியத்தைப் பெறுவது எவ்வளவு பெரிய சிலாக்கியம்.

ஒரு சில காரியங்களுக்காய் நாம் இரண்டு மூன்று அல்லது அநேகராய்ச் சேர்ந்து ஜெபிக்கும்போது கர்த்தர் அங்கே பெரிய அற்புதத்தைச் செய்கிறார். வேதம் சொல்லுகிறது, **"உங்களில் இரண்டுபேர் தாங்கள் வேண்டிக் கொள்ளப்போகிற எந்தக் காரியத்தைக் குறித்தாகிலும் பூமியிலே ஒருமனப்பட்டிருந்தால் பரலோகத்தில் இருக்கிற என் பிதாவினால் அது அவர்களுக்கு உண்டாகும். ஏனெனில் இரண்டு பேராவது மூன்று பேராவது என் நாமத்தினாலே எங்கே கூடியிருக்கிறார்களோ அங்கே அவர்கள் நடுவிலே இருக்கின்றேன் என்றார்"** (மத்தேயு *18:19,20*).

ஏரோது இராஜா பேதுருவைச் சிறையில் அடைத்து போர்ச் சேவகரைக் காவலுக்கு வைக்கிறான். அப்படி அவனைச் சிறையில் அடைத்தபோது பேதுருவிற்காய் சபை விசுவாசிகள் ஊக்கத்தோடு ஜெபிக்கிறார்கள். அப்படியாய் அநேக விசுவாசிகள் ஒருமனப்பட்டு பேதுருவிற்காய் ஜெபித்தபோது, கர்த்தர் அந்த ஜெபத்தைக் கேட்டு, தம்முடைய தூதனை அனுப்பி அற்புதமாய் பேதுருவை சிறைச்சாலையிலிருந்து விடுவிக்கிறார். இந்த அற்புதத்தைக் கண்ட பேதுருதான் ஒரு தரிசனம் காண்பதாய் நினைக்கிறார். ஆனால் **பேதுருவிற்கு**

தெளிவு வந்தபோது, ஏரோதின் கைக்கும் யூத ஜனங்களின் எண்ணங்களுக்கும் என்னை விடுதலையாக்கும்படிக்கு கர்த்தர் தம்முடைய தூதனை அனுப்பினாரென்று அறிந்து கொள்கிறான் *(அப்போஸ்தலர் 12:11).*

போராட்டத்தின் பாதையைக் கடந்து கொண்டிருக்கும் நேரங்களில் விசுவாசிகள் நிரம்பிய சபையின் ஜெபம் நமக்குப் பெரிய ஆறுதலையும் விடுதலையையும் கொண்டுவரும். வேதம் சொல்லுகிறது. **அநேகருடைய ஸ்தோத்திரத்தினால் கிருபை பெருகும்** *என்று (2 கொரிந்தியர் 4:15)*

ஆம் தேவப் பிள்ளையே சபையின் விசுவாசிகள் தேவனை ஸ்தோத்தரித்து, ஒருமனதோடு உங்களுக்காய் ஜெபிக்கும்போது கர்த்தர் பெரிய அற்புதத்தை உங்களுக்கு நிச்சயம் செய்வார். அல்லேலூயா, ஆமென்.

கர்த்தரின் பார்வைக்கு பொல்லாப்பானதை செய்யும் துன்மார்க்கரோடு ஐக்கியம் கொள்வதில் தேவன் பிரியப்படுவதில்லை. யோசாபாத் என்ற இராஜா கர்த்தரின் கட்டளைகளின்படி நடக்கும் ஒருவனாய் காணப்பட்டான். ஆகவே கர்த்தர் அவனோடு இருந்தார். ஆனால் அவனோ இரண்டுதரம் கர்த்தரின் கற்பனைகளுக்கு விரோதமாய் நடந்த இராஜாக்களோடு ஐக்கியம் கொள்ளப் பார்த்தான் என்று வேதத்தில் பார்க்கிறோம். கர்த்தர் அதை விரும்பவில்லை.

ஒரு சமயம் அவன் பொல்லாதவனாகிய ஆகாப் இராஜாவோடு சம்பந்தங்கலந்து. ஐக்கியம் கொள்ள முயற்சித்தான். வேதம் சொல்லுகிறது. **"உம்ரியின் குமாரனாகிய ஆகாப், தனக்கு முன்னிருந்த எல்லாரைப் பார்க்கிலும் கர்த்தரின் பார்வைக்கு பொல்லாப்பானதைச் செய்தான்"** *(I இராஜாக்கள் 16:30)* என்று அவனோடு சேர்ந்து ராமோத்தின் மேல் யுத்தம் செய்யப் போகிறான். அவ்வாறு அவன் செய்தபோது அவன் ஜீவன் போகும்படியான சூழ்நிலையில் மாட்டிக் கொள்கிறான். ஆனால் **கர்த்தர் அவனுக்கு அநுசாரியாயிருந்தபடியால் தப்பிக்கிறான்** *(II நாளாகமம் 18:31)*

அடுத்தது, யோசபாத் பொல்லாப்பு நிறைந்த 'அகசியா' என்னும் இஸ்ரவேலின் இராஜாவோடு தோழமை பண்ண முயற்சிக்கிறான்.

வேதம் சொல்லுகிறது, **"தர்ஷீசுக்கு போகும்படிக்கு கப்பல்களை செய்ய அவனோடு கூடிக்கொண்டான்"** (II நாளாகமம் 20:36) என்று, அவன் அப்படிப்பட்ட கர்த்தருக்கும் பிரியமில்லாத பொல்லாதவனோடு ஐக்கியப்படுவதில் கர்த்தர் பிரியப்படவில்லை. வேதம் சொல்லுகிறது. **"எலியேசர் யோசபாத்துக்கு விரோதமாக தீர்க்கதரிசனம் சொல்லி நீர் அகசியாவோடு கூடிக்கொண்டபடியினால் கர்த்தர் உம்முடைய கிரியைகளை முறித்துப் போட்டார் என்றான். அந்தக் கப்பல்கள் உடைந்து போயிற்று. அவர்கள் தர்ஷீசுக்கு போகக் கூடாமற்போயிற்று"** (II நாளாகமம் 20:37)

கொஞ்சம் புளித்த மாவு, பிசைந்த மாவு முழுக்க புளிக்க வைத்துவிடும். அதுபோல துன்மார்க்கனுடைய ஐக்கியம் நமக்குள் துன்மார்க்கத்தை புகுத்தி நம்மையும் துன்மார்க்கராக்கிவிடும். ஆகவே அப்படிப்பட்டவர்களோடு நாம் ஐக்கியப்படுவதை தேவன் விரும்புவதில்லை.

திருமணம் போன்ற காரியங்களில் அவிசுவாசிகளோடு ஐக்கியம் வேண்டாம் என்று கர்த்தர் தம் ஜனங்களுக்குத் தடை விதித்திருக்கிறார்.

பழைய ஏற்பாட்டில் அநேக இடங்களில் கர்த்தர் இஸ்ரவேல் ஜனங்களுக்கு இதை வலியுறுத்தியுள்ளார். வேதம் சொல்லுகிறது **"அவர்களோடே சம்பந்தம் கலவாயா. உன் குமாரத்திகளை அவர்கள் குமாரருக்குக் கொடாமலும், அவர்கள் குமாரத்திகளை உன் குமாரருக்கு கொள்ளாமலும் இருப்பாயாக. என்னைப் பின்பற்றாமல் அந்நிய தேவர்களை சேவிக்கும்படி அவர்கள் உன் குமாரரை விலக்கப் பண்ணுவார்கள்"** (உபாகமம் 7:3,4).

சாலமோன் இராஜா கர்த்தருக்கு பிரியமானவனாய்க் காணப்பட்டான். அவனுடைய விண்ணப்பங்கள் எல்லாம் தேவனுக்கு உகந்த ஒன்றாய் காணப்பட்டது. தேவன் அவன் கேட்ட ஞானத்தையும் உணர்வுள்ள இருதயத்தையும் கொடுத்து அவன் கேட்காத ஐசுவரியத்தையும் மகிமையையும் தந்தார். இவ்வளவு ஞானமும் உணர்வுள்ள இருதயத்தையும் பெற்ற சாலமோன் ஒரு காரியத்தில் கர்த்தர் விதித்த தடையை மீறிவிடுகிறான். அந்தக் காரியம் அவனை தேவனைவிட்டு பிரித்துவிடும் ஒன்றாய் அமைந்து விடுகிறது. தேவனுடைய

கோபம் அவன்மேல் வந்தது. ராஜாவாகிய சாலமோன் பார்வோன் குமாரத்தியை நேசித்தது மட்டுமல்லாமல் மற்ற அநேக புறஜாதியாகிய ஸ்திரீகள் மேலும் ஆசை வைத்தான். வேதம் சொல்லுகிறது. **"சாலமோன் அவர்கள் மேல் ஆசைவைத்து அவர்களோடு ஐக்கியமாயிருந்தான்"** (I இராஜாக்கள் *11:2*) என்று. இப்படியாய் அவன் புறஜாதி ஸ்திரீகளோடு ஐக்கியம் வைத்தபோது, ஞானத்தில் சிறந்த சாலமோனுடைய இருதயத்தை அந்த ஸ்திரீகள் வழுவிப் போகப் பண்ணினார்கள். **"அவனுடைய மனைவிகள் அவன் இருதயத்தை அந்நிய தேவர்களைப் பின்பற்றும்படி சாயப்பண்ணினார்கள்"** (I இராஜாக்கள் *11:4*). கர்த்தர் அவனுக்கு இரண்டு விசை தரிசனமாகி அந்நிய தேவர்களை பின்பற்ற வேண்டாம் என்று கட்டளையிட்டும் அவன் கீழ்ப்படியவில்லை. இந்தக் காரியங்களை, நான் வேதத்தில் வாசித்து சிந்தித்துக் கொண்டிருக்கும்போது சாலமோன் இராஜாவா இப்படிப் பின்வாங்கிப்போனார் என்று ஆச்சரியமாய் இருக்கும். இதற்குக் காரணம் என்ன என்று சிந்தித்துப் பாருங்கள். வேதம் சொல்லுகிறது **"இஸ்ரவேலின் இராஜாவாகிய சாலமோன் இதினாலே பாவஞ் செய்தானல்லவா. அவனைப் போன்ற இராஜா அநேகம் ஜாதிகளுக்குள்ளே உண்டாயிருந்ததில்லை. அவன் தன் தேவனாலே சிநேகிக்கப்பட்டவனாயிருந்தான். தேவன் அவனை இஸ்ரவேலனைத்தின் மேலும் இராஜாவாக வைத்தார் அப்படிப்பட்டவனையும் மறு ஜாதியான ஸ்திரீகள் பாவஞ்செய்யப் பண்ணினார்களே"** என்று (நெகேமியா 13:26)

அவிசுவாசிகளோடு திருமணக் காரியங்களில் பிணைக்கப்படாமல் எச்சரிக்கையாய் இருக்க வேண்டும். ஏனென்றால் இப்படிப்பட்ட காரியம் தேவனைவிட்டு நம்மைப் பிரிக்கும் கண்ணியாக அமைந்துவிடும்.

ஒருசிலர் தாங்கள் தேவனை விசுவாசிக்கிறோம் என்று சொல்கிறார்கள். ஆனால் அவர்கள் பிள்ளைகளை அவிசுவாசி களுக்குத் திருமணம் செய்து தேவனுக்குப் பிரியமில்லாமல் நடந்து கொள்கிறார்கள். அவ்வாறு அவர்கள் செய்வதால் புதிதாய் வந்த தங்கள் உறவுகளைப் பிரியப்படுத்த தேவனுக்குப் பிரியமில்லாத காரியங்களை செய்து தேவனை மறுதலித்து விடுகிறார்கள். இப்படிப்பட்ட ஐக்கியங்கள் நம்மை எளிதில் தேவனைவிட்டுப் பின் வாங்கச் செய்யும்.

எனக்குத் தெரிந்த ஒரு சகோதரி ஆண்டவர் இயேசுக் கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டு விசுவாசத்தோடு காணப்பட்டாள். அவளுடைய வாழ்க்கையை கர்த்தர் எல்லாவிதத்திலும் ஆசீர்வதித்திருந்தார். அவளுடைய திருமணம் வந்தபோது அவள் ஆண்டவரின் கட்டளைக்கு கீழ்ப்படிவதைவிட கர்த்தர் விதித்த தடையை மீறி, தன் பெற்றோரை பிரியப்படுத்தும் பொருட்டு ஒரு அவிசுவாசியைத் திருமணம் செய்தாள். ஒருபோதும் ஆண்டவரை விடமாட்டேன் என்று உறுதியோடுதான் காணப்பட்டாள். நான் நினைத்தேன் இவள் எப்படியாவது போராடி ஜெபித்து தன்கணவரை இரட்சிப்பிற்குள் கூட்டி வந்து விடுவாள் என்று. திருமணம் முடிந்ததும் கணவனுடன் வெளிநாடு சென்று விட்டாள். சில மாதங்களில் ஆண்டவர் இயேசுவை ஏற்றுக் கொண்டதின் நிமித்தம் தன் கணவர் பக்கத்திலிருந்து பிரச்சனை ஆரம்பித்தது. புதிதாய் வந்த உறவிற்காய் தேவனை மறுதலிக்க ஆரம்பித்தாள். ஆனால் சில வருடங்கள் கழித்து நான் அவளை சந்தித்தபோது அவள் ஆண்டவரை முற்றிலும் மறந்து தன் இதயத்திலிருந்து முற்றிலுமாய் நீக்கியிருந்தாள் என்பதை புரிந்து கொண்டேன். தேவனைப் பொறுத்த மட்டில் மிகவும் மாறுபட்ட பெண்ணாய் என் கண்களுக்குத் தெரிந்தாள். ஆம் தேவப்பிள்ளைகளே, தேவன் விதித்திருக்கும் இந்தத் தடைக்கு நாம் கீழ்ப்படியாமல் அந்நிய நுகத்திலே பிணைக்கப்பட்டால் அப்படிப்பட்ட காரியம் தேவனை மறுதலிக்கச் செய்யும், முடிவிலே தேவனை மறக்கவும் செய்யும். வேதம் சொல்லுகிறது **"அந்நிய நுகத்தில் அவிசுவாசிகளுடன் பிணைக்கப்படாதிருப்பார்களா"** (II கொரிந்தியர் 6:14)

3 எப்படியும் வாழத்தடை

தேவனுடைய பிள்ளைகள் இவ்வுலகில் வாழும் நாட்களில் சில ஒழுங்கு முறைகளைப் பின்பற்ற வேண்டும் என்று தேவன் விரும்புகிறார். இவ்வுலகில் எப்படி வேண்டுமானாலும் நம் வாழ்க்கையை அமைத்துக் கொள்ளலாம், சட்டத்திற்குப் புறம்பாய் இல்லாத மட்டும் அதை யாரும் கண்டிதம் செய்து தண்டிப்பதில்லை. ஆனால் தேவப் பிள்ளைகள் சட்டத்தில் காணப்படும் விதிமுறைகளுக்கு மாத்திரம் உட்படாமல் வேதத்தில் தம் வார்த்தையின் மூலம் தேவன் விதித்திருக்கும் தடைகளுக்கு நாம் கீழ்ப்படிந்து வாழ்வது மிகவும் அவசியமான ஒன்றாய் இருக்கிறது.

அநேக மேல் நாடுகளில் விவாகரத்து என்பது அதிகமாய்க் காணப்படும் காரியமாய் இருக்கிறது. சிறு விஷயங்களுக்குக் கூட, கணவன் மனைவியிடையே விட்டுக் கொடுக்கும் தன்மையில்லாததால், விவகாரத்து பெற்றுக் கொள்கிறார்கள். கணவன், மனைவிக்குள் சுபாவ அன்பு நாளுக்கு நாள் மங்கிக் கொண்டு வருகிறது. இன்று நம்முடைய நாட்டிலும் விவாகரத்து என்பது சர்வ சாதாரணமாகிவிட்டது. இப்பொழுதெல்லாம் பேமிலி கோர்ட்டில்தான் கூட்டம் அதிகம் காணப்படுகிறது.

புருஷனானவன் எந்த காரணத்தினாலும் தன் மனைவியை தள்ளி விடலாமா என்று சீஷர்கள் இயேசுவை நோக்கிக் கேட்டபொழுது அதற்கு அவர் **“அவர்கள் இருவராயிராமல் ஒரே மாம்சமாயிருக்கிறார்கள். ஆகையால் தேவன் இணைத்ததை மனுஷன் பிரிக்காதிருக்கக் கடவன் என்றார். ஆதலால் எவனாகிலும் தன் மனைவி வேசித்தனம செய்த நிமித்தமேயன்றி, அவளைத் தள்ளிவிட்டு வேறொருத்தியை விவாகம் பண்ணினால், அவன் விபசாரம் செய்கிறவனாயிருப்பான். தள்ளிவிடப்பட்டவளை விவாகம் பண்ணுகிறவனும் விபசாரஞ் செய்கிறவனாயிருப்பான் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன் என்றார்”** *(மத்தேயு 19:6,9)*

தேவன் பரிசுத்தராய் இருக்கிறபடியால் அவருடைய பிள்ளைகளாகிய நாமும் பரிசுத்தமாய் இருக்க வேண்டும். வேதம் சொல்லுகிறது, **“உங்களை அழைத்தவர் பரிசுத்தராயிருக்கிறதுபோல், நீங்கள் உங்கள் நடக்கைகளெல்லாவற்றிலேயும் பரிசுத்தமாயிருங்கள். நான் பரிசுத்தர், ஆகையால் நீங்களும் பரிசுத்தராய் இருங்கள்”** *(1பேதுரு 1:15,16).*

இன்று அநேகர் தங்களை பரிசுத்தவரன்கள் என்று பெருமை பாராட்டி மற்றவர்களிடம் என்னென்ன காரியங்களில் பரிசுத்தமில்லை என்று ஆராய்வதிலே, அதிக நேரம் செலவிடுகிறார்கள். ஒரு விசுவாசிக்கு பிரச்சினை என்று வந்துவிட்டால் அந்த நபருக்கு இதில் இதிலெல்லாம் பரிசுத்தம் இல்லை என்று எளிதில் அவரை நியாயம் தீர்த்து விடுகிறார்கள். அன்பான விசுவாசிகளே ஆண்டவர் சொல்லுகிறார். **“உன் கண்ணில் உத்திரம், இருக்கையில் உன் சகோதரனை நோக்கி உன் கண்ணிலிருக்கும் துரும்பை எடுத்துப் போடட்டும் என்று நீ சொல்லுவதெப்படி?”** *(மத்தேயு 7:4)* ஆகவே நாம் மற்றவர்களை ஆராய்ந்து நியாயம் தீர்க்காமல் நாம் நம்முடைய ஜெப வேளைகளில், பரிசுத்த ஆவியானவரின் உதவியோடு நம்மிடம் காணப்படும் பரிசுத்த குறைச்சலான காரியங்களை சரி செய்து கொள்வோமாக.

பரிசுத்தம் என்பது ஒரு நாளிலோ அல்லது சில நாட்களிலோ ஏற்படும் மாற்றம் அல்ல. தேவப் பிள்ளைகளாகிய நாம் நம்மை

முற்றிலும் பரிசுத்த ஆவியானவருக்கு ஒப்புக் கொடுத்து கீழ்ப்படியும்போது, படிப்படியாய் நம் வாழ்விலே ஆண்டவர் கொண்டுவரும் ஓர் அற்புத மாற்றமாய் அமைகிறது.

துர்நாற்றமுடைய அழுக்கும், சேறும் நிறைந்த குட்டையின் அருகே பன்றி ஒன்றும், ஆட்டுக்குட்டி ஒன்றும் நின்று கொண்டிருந்ததாம். பன்றி அந்தக் குட்டைக்குள் தடுக்கி விழுந்துவிட்டது. உடல் முழுக்க சேர் ஒட்டிக் கொண்டது. ஆனால் பன்றிக்கோ அந்த துர்நாற்றமுடைய குட்டையை விட்டு வரவிருப்பமில்லை. அதிலே சுகமாய்ப் புரண்டு கொண்டிருந்ததாம். சிறிது நேரத்தில், அங்கிருந்த ஆட்டுக்குட்டியும் தடுக்க அதே குட்டைக்குள் விழுந்துவிடுகிறது. விழுந்தவுடன் அந்த ஆட்டுக்குட்டி 'மே, மே' என்று கத்தி தன் கால்களை உதறி எப்படியோ ஏறி மேலே வந்துவிடுகிறது. அதுமட்டுமல்ல தன் மேல் ஒட்டியிருந்த சேற்றை எப்படியாவது தன்னிடமிருந்து நீக்கிவிட தன் உடலை உதறி, புல்லில் புரண்டு தன்னை சுத்தப்படுத்திக் கொள்கிறது.

ஆம் அன்பானவர்களே, நாமும்கூட இந்த ஆட்டுக் குட்டியைப்போல இருக்க வேண்டும். பாவ வாழ்க்கையிலே பழகி அதிலே நாம் பன்றியைப்போல புரண்டு கொண்டிருக்கக் கூடாது. ஆட்டுக்குட்டியைப் போன்று சுபாவம் நமக்குள் இருப்பது அவசியம். ஒருவேளை தவறி ஒரு பாவத்திற்குள் இழுப்புண்டு விழுந்தாலும், உடனே நாம் எழுந்து அந்தப் பாவத்தை உதறித் தள்ளிவிட்டு தேவனிடத்தில் அறிக்கை செய்து மன்னிப்பு பெற்று அவரோடு ஒப்புறவாகிவிட வேண்டும். வேதம் சொல்லுகிறது **"நம்முடைய பாவங்களை நாம் அறிக்கையிட்டால் பாவங்களை நமக்கு மன்னித்து எல்லா அநியாயத்தையும் நீக்கி நம்மை சுத்திகரிக்க அவர் உண்மையும் நீதியும் உள்ளவராயிருக்கிறார்"** *(I யோவான் 1:9).*

விபசாரம், காமம், அசுத்தம் போன்ற இருளின் கிரியைகள் யாவும் மனிதனின் சரீர சம்பந்தப்பட்டவைகளாய் இருக்கிறது. தேவப் பிள்ளைகளாகிய நாம் இந்த இருளின் காரியங்களுக்கு விலகி நம்மை பரிசுத்தமாய் காத்துக் கொள்வது மிகவும் அவசியம். **"விபச்சாரக்காரனுக்கு தேவனுடைய இராஜ்யத்தில் பங்கில்லை"** *(எபேசியர் 5:5).* நம்முடைய சரீரம் பரிசுத்த

ஆவியானவர் தங்கும் ஆலயமாயிருக்கிறது. இந்த ஆலயத்தை நாம் எந்தவிதத்திலும் கறை படுத்தாமல் பார்த்துக் கொள்வது மிகவும் அவசியமான ஒன்றாய் இருக்கிறது.

அந்நிய மார்க்கத்தார் தங்கள் தேவர்களை வழிபடும் இடங்களை, மிகவும் பயபக்தியோடு எந்தத் தீட்டும் அசுத்தமும் இல்லாமல் கவனமாய் பார்த்துக் கொள்வார்கள். தங்கள் காலணிகளோடு கூட உள்ளே நுழையமாட்டார்கள். அப்படி இருக்க, நம்முடைய சரீரம் பரிசுத்த ஆவியானவர் தங்கும் ஆலயமாயிருக்கும்போது, அந்த ஆலயத்தை எந்தவிதத்திலும் தீட்டுப் படுத்தாது பரிசுத்தமாய்க் காத்துக் கொள்வது எவ்வளவு அவசியமாயிருக்கிறது. வேதம் சொல்லுகிறது. **"வேசித்தனத்திற்கு விலகி ஓடுங்கள். மனுஷன் செய்கிற எந்த பாவமும் சரீரத்திற்குப் புறம்பாயிருக்கிறது. வேசித்தனஞ் செய்கிறவனோ, தன் சுய சரீரத்திற்கு விரோதமாய் பாவஞ் செய்கிறான். உங்கள் சரீரமானது நீங்கள் தேவனாலே பெற்றும் உங்களில் தங்கியும் இருக்கிற பரிசுத்த ஆவியினுடைய ஆலயமாயிருக்கிற தென்றும் அறியீர்களா"** *(1 கொரிந்தியர் 6:18,19)*

இத்தகைய இருளின் கிரியைகளுக்கு மனிதனை இழுத்துச் செல்லும் முதல் உறுப்பு கண்கள் ஆகும். ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து சொல்கிறார், **"ஒரு ஸ்திரியை இச்சையோடு பார்க்கிற எவனும் தன் இருதயத்தில் அவளோடே விபசாரம் செய்தாயிற்று என்று"** *(மத்தேயு 5:28).* நம்முடைய பார்வை பரிசுத்தமாய் இருப்பது அவசியம். பார்வையிலே பரிசுத்த குறைவு காணப்படும்போது, அது அடுத்தடுத்ததான சரீரபிரகாரமான பாவங்களுக்குள் இழுத்துச் செல்கிறது. தாவீது இராஜா உப்பரிகையின் மேல் இருந்து உரியாவின் மனைவி பத்சேபாளைப் பார்த்தபோது அவன் கண்களிலே பரிசுத்தம் காணப்படவில்லை. அவன் கண்களின் இச்சைக்கு இடம் கொடுத்து சரீரப் பிரகாரமான விபச்சாரப் பாவத்தைச் செய்கிறான். அத்தோடு அவன் நிறுத்தாமல் உரியாவைக் கொன்று கொலை பாவத்தையும் செய்கிறான்.

கண்கள் நம் சரீரத்தின் விளக்காய் காணப்படுகிறது. அது இருளாய் இருந்தால் நம் சரீரம் முழுதும் இருளடைந்த ஒன்றாய் காணப்படும். கண்கள் பரிசுத்தமாய் இருக்க வேண்டுமானால்

நாம் விரும்பிப் பார்க்கும் காரியங்கள் பரிசுத்தமானதாய் இருக்க வேண்டும். ஆபாசமானவைகளை, தியேட்டர்களிலும், தொலைக்காட்சியிலும், போஸ்டர்களிலும், புத்தகங்களிலும் பார்ப்பதிலே நம் கண்கள் ஆவலோடு ஈடுபட்டிருக்குமானால் அதற்கு முதலில் முற்றுப்புள்ளி வைத்தல் அவசியம். அப்பொழுது தேவன் வெறுக்கும் அந்தரங்கக் காரியங்களுக்கு தப்பித்துக் கொள்ள முடியும். வேதம் சொல்லுகிறது **"மாயையைப் பாராதபடி நீர் என் கண்களை விலக்கி உமது வழிகளில் என்னை உயிர்ப்பியும்"** *(சங்கீதம் 119:37)*

"சகலவிதமான கசப்பு, கோபம், வைராக்கியம், மூர்க்கம், கூக்குரல், தூஷனம், பொறாமை ஆகிய அந்தகாரக் கிரியைகள் யாவும் நம்முடைய உணர்வுகள், சிந்தைகள் சம்பந்தப்பட்டதாய் உள்ளது" *(எபேசியர் 4:31)*

நம்முடைய உணர்வுகள், சிந்தைகள், நடக்கைகள் எல்லாவற்றையும் பரிசுத்த ஆவியானவரின் ஆளுகைக்கு ஒப்படைக்க வேண்டும். அவற்றை மாம்சத்திற்கு, அடிமைப்படுத்தினால் தேவனுக்குப் பிரியமில்லாத அநேக இருளின் கிரியைகள் நம்மில் காணப்படும். வேதம் சொல்லுகிறது, **"கிறிஸ்து இயேசுவுக்குட்பட்டவர்களாயிருந்து மாம்சத்தின்படி நடவாமல் ஆவியின்படியே நடக்கிறவர்களுக்கு ஆக்கினைத் தீர்ப்பில்லை"** *(ரோமா 8 : 1).* **"மாம்சத்தின்படி நடக்கிறவர்கள் மாம்சத்துக் குறியவைகளை சிந்திக்கிறார்கள். ஆவியின்படி நடக்கிறவர்கள் ஆவிக்குரியவைகளை சிந்திக்கிறார்கள். மாம்ச சிந்தை மரணம். ஆவியின் சிந்தையோ ஜீவனும், சமாதானமும்"** *(ரோமர் 8:5,6).*

இன்றைக்கு அநேகருக்கு மன்னிக்கும் தன்மையில்லாததால் இருதயம் முழுக்க கசப்பும் வைராக்கியம் நிறைந்தவர்களாய் காணப்படுகிறார்கள். வேதம் சொல்லுகிறது **"ஒருவருக்கொருவர் தயவாயும் மன உருக்கமாயும் இருந்து, கிறிஸ்துவுக்குள் தேவன் உங்களை மன்னித்ததுபோல நீங்களும் ஒருவருக்கொருவர் மன்னியுங்கள் என்று"** *(எபேசியர் 4:32).* எந்தக் காரணத்திற்காகவும் என் ஆண்டவரை விட்டு பின்வாங்க மாட்டேன் என்று தேவனைப் பற்றும் விசுவாசத்திற்காக வைராக்கியம் பாராட்டுவது நல்லதுதான். ஆனால் செத்தாலும்

அவன் வாசற்படி மிதிக்க மாட்டேன், அவன் செய்த காரியத்தை மன்னிக்கவும் மாட்டேன் என்ற வைராக்கியத்திலே தேவன் பிரியமாயிருப்பதில்லை. ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து கூறுகிறார், **"நீ பலிபீடத்திலிருந்து காணிக்கையை கொண்டுவரும்போது உன் சகோதரன் பேரில் உனக்கு குறை இருந்தால் முதலில்போய் அவனோடு ஒப்புரவாகிப் பின்பு வந்து காணிக்கையைச் செலுத்து என்கிறார்"** *(மத்தேயு 5:23,24)*. காணிக்கையைவிட மன்னித்தல் மிக முக்கியமானது என்பதை தேவன் இந்த இடத்தில் வலியுறுத்த விரும்புகிறார்.

நம்முடைய உணர்வு, சிந்தை ஆகியவற்றை மாம்சம் ஆட்கொள்ளும்போது, நம்மால் கோபத்தை அடக்க முடிவதில்லை. அநேக விசுவாசிகளிடம் கூட இந்தக் கிரியை காணப்பட்டு வருகிறது. சபைகளிலும், ஜெபக் கூட்டங்களிலும் நம்மைப் பார்க்கும்போது இந்தப் பூனையும் பால்குடிக்குமா என்பதுபோல் காணப்படுகிறோம். ஆனால் வீட்டிலோ 'பார்த்தால் பசு பாய்ந்தால் புலி' என்று ஆகிவிடுகிறோம். கோபம் என்பதற்கு இடம் கொடுக்கும்போது அதன் சகோதரிகளான மூர்க்கம், கூக்குரல், தூஷணம் எல்லோரும் வந்து சேர்ந்து கொள்வார்கள். கோபம் வரும்போது அந்த நபரை அறியாமல் குரல் உயரும், கூக்குரலாய் மாறும், தூஷண வார்த்தைகள் புறப்படும். கைக்கு எட்டியவைகள் எல்லாம் கண்ணுக்கு எட்டாத தூரத்தில் பறக்கும். இப்படிப்பட்ட கோபத்திலே கடுகளவேனும் நம் ஆண்டவர் இயேசு கிறிஸ்துவினிடத்தில் காணப்பட்டிருந்தால் இன்று நாம் இரட்சிப்பைப் பெற்றிருப்போமா? சற்று சிந்தித்துப் பாருங்கள்! அவர் எவ்வளவு சாந்தமும் தாழ்மையும் உள்ளவராய் காணப்பட்டார். அவர் அடைந்த நிந்தைகளுக்கும் அவமானங்களுக்கும் மத்தியிலே அவர் பொறுமையோடு காணப்பட்டார். அவர் கோபப்பட்டு நொடிப்பொழுதில் அந்த ஜனங்களை அழித்துப் போடும் வல்லமை அவரிடம் இருந்தது. ஆனால் அவரோ மிகுந்த சாந்தகுணமுள்ளவராய் பாடுகளை சகித்து சிலுவையிலே வெற்றி சிறந்தார். சாத்தானின் தலையை நசுக்கினார். மரணத்தை ஜெயித்தார்.

வேதம் சொல்லுகிறது, **"நம்முடைய கோபம் தேவனின் நீதியை நடப்பிக்க மாட்டாதே என்று"** *(யாக்கோபு 1:20)*. கோபப்பட்டு நாம் என்னத்தை சாதிக்கப் போகிறோம்.

கோபப்படும்போது மற்றவர்களிடம் கசப்பு ஏற்படுகிறது. ஆத்திரம் அதிகரிக்கிறது. சில சமயங்களில் அது கொலை வெறியாகவும் மாறுகிறது. கொலை செய்வதில், இரண்டு வகை உண்டு. ஒன்று திட்டமிட்டு செய்யப்படும் கொலை, மற்றொன்று ஆத்திரத்தில் செய்யப்படும் கொலை (under provocation) வேதத்தில் நாம் எஸ்தர் புஸ்தகத்தில் ஒரு காரியத்தை குறித்து வாசிக்கிறோம். ஆகாஸ்வேரு என்னும் இராஜா ஆமான் என்பவனை மேன்மைப் படுத்தி எல்லாப் பிரபுக்களுக்கும் மேலாக அவனை உயர்த்துகிறான். இதனால் இராஜாவின் ஊழியக்காரர் யாவரும் அவனை வணங்கி வந்தார்கள். ஆனால் மொர்தெகாய் என்ற யூதன் மாத்திரம் அவனை வணங்கவில்லை. தான் மிகவும் உயர்ந்தவன். தன்னை அனைவரும் தலை தாழ்த்தி வணங்க வேண்டும் என்ற மேட்டிமையோடு காணப்பட்ட ஆமான் மொர்தேகாயின் செயலைக்கண்டு கடுங்கோபங் கொள்கிறான். அவனுடைய மேட்டிமை அவனை மூர்க்கம் நிறைந்தவனாய் மாற்றுகிறது. அவனுடைய மூர்க்கம் யூதனாகிய மொர்தெகாய் மாத்திரமல்ல, அனைத்து யூத ஜனங்களையும் அழிக்க வேண்டும் என்ற அளவிற்கு மூண்டு எரிய ஆரம்பிக்கிறது.

"ஆமான் மொர்தெகாய் தன்னை வணங்கி நமஸ்கரியாததைக் கண்டபோது மூர்க்கம் நிறைந்தவனாய்... ஆகாஸ் வேருவின் இராஜ்யமெங்கும் இருக்கிற மொர்தெகாயின் ஜனமாகிய யூதரையெல்லாம் சங்கரிக்க அவன் வகை தேடினான்" *(எஸ்தர் 3:5,6).*

வேதம் சொல்லுகிறது. **"கோபம் கொண்டாலும் பாவம் செய்யாதிருங்கள்; சூரியன் அஸ்தமிக்கிறதற்கு முன்பு உங்கள் கோபம் தனியக் கடவது என்று"** (எபேசியர் 4:26).

மனிதர்கள் சாதாரணமாய் பேசிக் கொள்ளும்போது கூட பொறாமையைப் பேய் என்று குறிப்பிடுவார்கள். அவனைப் பொறாமைப் பேய் பிடித்துக் கொண்டதால், இப்படி இருக்கிறான் என்பார்கள். ஆம் பொறாமை என்கிற இந்த பொல்லாத குணம் ஒளியின் பிள்ளைகளிடத்து காணப்படுவதை தேவன் ஒருபோதும் விரும்புவதில்லை. வேதத்தில் பொறாமையினால் மனிதர்கள் செய்யும் பொல்லாத காரியங்களைக் குறித்து அநேக இடங்களில் வாசிக்கிறோம். யோசேப்பின் மீது அவன்

தந்தையாகிய யாக்கோபு அதிக பாசம் வைத்திருந்தான். அதை அவனுடைய சகோதரர் விரும்பவில்லை. அத்தோடு அவனுடைய சொப்பனங்களைக் குறித்து அவர்களிடம் சொன்னபோது பொறாமையினால் அவனை அவர்கள் அதிகமாய் பகைத்தனர். வேதம் சொல்லுகிறது **"அவனுடைய சகோதரர் அவன்மேல் பொறாமை கொண்டார்கள்"** (ஆதியாகமம் 37:11). யோசேப்பைக் கொல்ல சதியோசனை பண்ணும் அளவிற்கு அவர்கள் அவன் மீது பொறாமைக் கொள்கிறார்கள்.

தாவீது, கோலியாத்தைக் கொன்று திரும்பியபோது, தாவீதைப் புகழ்ந்து பாடி ஆடி, மேளங்களோடும், கீதவாத்தியங்களோடும் எதிர்கொண்டு வந்தார்கள். சவுல் கொன்றது ஆயிரம், தாவீது கொன்றது பதினாயிரம் என்று பாடினார்கள். இதை சவுலால் பொறுத்துக் கொள்ள முடியவில்லை. நம்மைப் புகழ்வதைவிட தாவீதை அதிகமாய்ப் புகழ்கிறார்களே என்று எரிச்சலடைகிறான். **"இன்னும் இராஜாங்கம் மாத்திரம் அவனுக்கு குறைவாயிருக்கிறது என்று சொல்லி அந்நாள் முதற்கொண்டு சவுல் தாவீதைக் காய் மகாரமாய்ப் பார்த்தான்"** (I சாமுவேல் 18:8,9) என்று வேதத்தில் சொல்லப்பட்டுள்ளது. அவனுடைய பொறாமை தாவீதை கொலை செய்யும் முயற்சிக்கு அவனை தள்ளிச் செல்கிறது. ஈட்டியை தாவீதின்மேல் எறிந்து கொல்லப் பார்க்கிறான். ஆனால் தாவீது தப்பித்துக் கொள்கிறான்.

நம் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து இவ்வுலகில் நன்மைகள் செய்பவராய் சுற்றித் திரிந்தார். அநேக அற்புதங்களைச் செய்பவராய்க் காணப்பட்டார். குருடரைப் பார்வையடையச் செய்தார். முடவனை நடக்கும்படி செய்தார். பிணியாளிகளை சொஸ்தமாக்கினார். இறந்தவனை உயிரோடு எழுப்பினார். அவருடைய உபதேசங்களைக் கேட்கவும், அற்புதங்களைப் பெற்றுக் கொள்ளவும், திரளான ஜனங்கள் அவரைப் பின் தொடர்ந்தனர். இவையெல்லாவற்றையும் பார்த்துக் கொண்டிருந்த பிரதான ஆசாரியாரும், மூப்பரும் வேதபாரகரும், ஆலோசனை சங்கத்தார் அனைவரும் அவர் மீது பொறாமை கொண்டு அவரைச் சிலுவையில் அறையும்படி பிலாத்துவினிடத்தில் ஒப்புக்கொடுக்கிறார்கள்.

வேதம் சொல்லுகிறது **“பொறாமையினாலே பிரதான ஆசாரியர்கள் அவரை ஒப்புக் கொடுத்தார்கள் என்று பிலாத்து அறிந்து -------------------- அவரை உங்களுக்கு விடுதலையாக்க வேண்டுமென்றிருக்கிறீர்களா என்று கேட்டான்”** (மாற்கு 15:9,10) ஆனால் அவர்களோ ஆண்டவர் இயேசு கிறிஸ்து மீது கடுகளவேனும் குற்றம் காணாதபோதும், பொறாமையினால் அவரைச்சிலுவையில் அறைந்து கொலை பாதகனாகிய பரபாசை விடுதலை செய்யும்படி சத்தமிடுகிறார்கள்.

ஆம் பாருங்கள்; பொறாமை என்பது, ஒருவரிடத்தில் ஒரு குற்றமும் காணப்படாத போதும் அந்த நபரைக் கொலை செய்யும் அளவிற்கு இட்டுச் செல்லும் ஒன்றாய் அமைகிறது.

இப்படிப்பட்ட பொல்லாத குணம் நம்மிடம் சிறிதளவேனும் காணப்படாமல் நம்மை காத்துக் கொள்வது மிகவும் அவசியமாய் இருக்கிறது.

4 எப்படியும் பேசத்தடை

வீண்வார்த்தை, வம்பு, புத்தியீனமான பேச்சு, பரியாசம், பொய் பேசுதல் போன்றவை நம் நாவினால் செய்யப்படும் தேவனுக்குப் பிரியமில்லாத காரியங்களாய்க் கூறப்பட்டுள்ளது. **"அப்படியே வம்பும், புத்தியீனமான பேச்சும் பரியாசமும் தகாதவைகள், ஸ்தோத்திரஞ் செய்தலே தகும்"** (எபேசியர் 5:4).

நாவு ஒரு சிறிய அவயமாக இருந்தாலும் அதற்கு வல்லமை அதிகம். மனிதன் தன் இருதயத்தின் எண்ணங்களையும், நினைவுகளையும் தன் நாவைக் கொண்டு வார்த்தைகளாக வெளிப்படுத்துகிறான்.

எலும்பில்லாத நாக்கு எப்பக்கத்திலும் பிரளும் என்ற பழமொழி உண்டு. ஆம் அது எத்தனை உண்மை. நாவினால் நாம் தேவனைத் துதிக்கிறோம். அதே நாவினால் சில சமயங்களில் மற்றவர்களை சபிக்கிறோம். அன்பாகவும் பேசுகிறோம். எரிச்சலோடும் பேசுகிறோம். தாழ்மையாகவும் பேசுகிறோம். மேட்டிமையாகவும் பேசுகிறோம். உண்மையாகவும் பேசுகிறோம். பொய்யாகவும் பேசுகிறோம். இதுபோன்று இன்னும் அநேகவற்றை சொல்லிக் கொண்டே போகலாம்.

வேதம் சொல்லுகிறது, **"ஒருவன் தன் நாவை அடக்காமல் தன் இருதயத்தை வஞ்சித்து, தன்னை தேவ பக்தியுள்ளவனென்று எண்ணினால் அவனுடைய தேவ பக்தி வீணாயிருக்கும்" *(யாக்கோபு 1 : 26)*.**

விசுவாசிகளாகிய நாம் நம்முடைய நாவை உபயோகிப்பதிலே மிகவும் பொறுமையாகவும் ஜாக்கிரதையாகவும் இருக்க வேண்டும். **"யாவரும் கேட்கிறதற்கு தீவிரமாயும், பேசுகிறதற்கு பொறுமையாயும் கோபிக்கிறதற்கு தாமதமாயும் இருக்க வேண்டும்" *(யாக் 1:19)***

அநேக வேளைகளில் நாம் மிக எளிதில் வீண் வார்த்தைகளைப் பேசி விடுகிறோம். அதை நாம் பெரிதுபடுத்திக் கொள்வதில்லை. ஏதோ உதட்டளவில்தான் பேசினேன். என் உள்ளத்தில் ஒன்றுமில்லை என்று நம்மை நாமே சமாதானப்படுத்திக் கொள்கிறோம். ஆனால் தேவப்பிள்ளையே நாம் பேசும் ஒவ்வொரு வார்த்தையைக் குறித்தும் நாம் மிகவும் ஜாக்கிரதையாக இருக்க வேண்டும். எப்படியும் பேசுவதற்கு ஆண்டவர் தம்முடைய பிள்ளைகளுக்கு தடை விதித்துள்ளார்.

வார்த்தைகளிலே மிகுந்த அதிகாரமும் வல்லமையும் உண்டு. "மனுஷன் தன் வாயின் பலனால் நன்மையைப் புசிப்பான்" *(நீதிமொழிகள் 13:2)*.

நன்மையான வார்த்தைகள் ஆசீர்வாதத்தைக் கொண்டு வரும்; தீமையான வார்த்தைகள் நம்மை சாபத்திற்குள்ளாக்கும்.

தேவப் பிள்ளைகள் எப்படி பேச வேண்டும் எப்படி பேசக்கூடாது என்பதை வேதம் தெளிவாய் சொல்லுகிறது. **"கெட்ட வார்த்தை ஒன்றும் உங்கள் வாயிலிருந்து புறப்பட வேண்டாம். பக்தி விருத்திக்கு ஏதுவான நல்ல வார்த்தை உண்டானால் அதையே கேட்கிறவர்களுக்கு பிரயோசனமுண்டாகும்படி பேசுங்கள்"** *(எபேசியர் 4:29)*.

மனுஷன் பேசும் வீணான வார்த்தைகள் யாவையும் குறித்து நியாயத் தீர்ப்பு நாளிலே கணக்கொப்புவிக்க வேண்டும் என்ற எச்சரிப்பை ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து நமக்கு தந்துள்ளார் *(மத்தேயு 12:36)*. இன்றைய நாட்களில் அநேக விசுவாசப் பிள்ளைகள் இந்தக் காரியத்திலே மிகவும் அஜாக்கிரதையாய்

காணப்படுகிறார்கள். தேவன் கொடுத்திருக்கும் எச்சரிப்பை அறிந்திருந்தாலும், தங்கள் நாவை கட்டுப்படுத்த முடியாமல் அடிக்கடி வீண் வார்த்தைகளை பேசி வருகின்றனர்; முன்கோபம் என்ற சுபாவம் உள்ளவர்களுக்கு தங்கள் நாவை அடக்கி பேசுவது என்பது மிகவும் கடினமான ஒன்றாய் இருக்கிறது. ஒருவர் ஒரு வார்த்தை சொல்லிவிட்டால் போதும், பட்டாசு திரியில் சிறு நெருப்பு பட்டவுடனே வெடிப்பதுபோல படபடவென்று அநேக வார்த்தைகளை ஒருசில நிமிடங்களில் கொட்டித் தீர்த்து விடுவார்கள்.

என்னுடைய வாழ்க்கையிலும் இந்த பெலவீனம் என்னிடம் காணப்பட்டது. நான் ஒரு விசுவாசியாக இருந்தபோதும், முன்கோபம் என்ற பெலவீனம் என்னைத் தாக்கும்போது, அநேக வீண் வார்த்தைகளைப் பேசும் சுபாவம் என்னிடத்தில் இருந்தது. என் கணவரிடம் எப்பொழுது கோபப்பட்டாலும் என் மரணத்தைக் குறித்து வீண் வார்த்தைகளை எளிதில் பேசி விடுவேன். இப்படியாய் இருந்தபோது நான் ஒருதரம் மிகவும் நோய்வாய்ப்பட்டேன். **“மரணமும் ஜீவனும் நாவின் அதிகாரத்தில் இருக்கும்”** *(நீதிமொழிகள் 18:21)* என்ற வசனத்தை கர்த்தர் அநேக விதத்தில் எனக்கு நினைப்பூட்டி, ஒரு உணர்த்துதலை எனக்குள் கொண்டு வந்தார். நான் இவ்வளவாய் நோய்வாய்ப்பட்டதற்கு என் வாயின் வார்த்தைகள் ஒரு முக்கிய காரணம் என்பதை உணரவைத்தார். நான் ஆண்டவரிடம் என் தவறை அறிக்கை செய்து மன்னிப்பு கேட்டேன். அத்தோடு மட்டுமல்ல, ஆண்டவரே இந்த பெலவீனம் என்னை விட்டு நீங்க எனக்கு உம்முடைய கிருபை மிகவும் அவசியமாயிருக்கிறது என்று ஆண்டவரை நோக்கி ஒவ்வொரு நாளும் ஜெபிக்க ஆரம்பித்தேன். பரிசுத்த ஆவியானவர் எனக்குள் கிரியை செய்ய ஆரம்பித்தார். எனக்குள் ஒரு நல்ல மாற்றத்தை கொண்டு வந்தார். இப்பொழுதெல்லாம் வீண் வார்த்தைகள் தொண்டைவரை வந்தாலும், அதை அடக்கி விரட்டிவிட பரிசுத்த ஆவியானவர் உதவிசெய்து வருகிறார். **“என்னைப் பெலப்படுத்துகிற கிறிஸ்துவினாலே எல்லாவற்றையும் செய்ய எனக்கு பெலனுண்டு”** *(பிலிப்பியர் 4:13)*. ஆம், அன்பானவர்களே நம்முடைய வாயின் வார்த்தையிலே மாற்றம் வேண்டுமானால் அதற்கு பரிசுத்த ஆவியானவரின் கிருபையும் உதவியும் நமக்கு மிகவும் அவசியம். நாம் நம்மை முற்றிலும் அவருக்கு ஒப்புக்

கொடுத்து ஜெபித்தால் அவர் நமக்குள் நிச்சயம் மாற்றத்தைக் கொண்டு வருகிறார்.

அதுபோலவே பிறரைக் குறித்து வம்பு பேசுதல், புத்தியீனமான பேச்சுகளில் ஈடுபடுதல் பிறரைப் பரியாசம் செய்தல் போன்றவற்றை தேவன் விரும்புவதில்லை. சங்கீதம் 1ல் சொல்லப்பட்டுள்ளது **பரியாசக்காரர் உட்காரும் இடத்தில் உட்காராமல் இருக்கும் மனுஷன் பாக்கியவான் என்று.**

பொய் பேசுவது ஒரு சிலருக்கு கைவந்த கலை. வெகு சாமார்த்தியமாய் பொய் பேசுவார்கள். அவர்கள் பேசும் வார்த்தையை அப்படியே நம்பும்படியாய் மிகவும் அழகாய் திரித்து போய் பேசுவார்கள். பொய் பேசும்போது நாம் மற்றவர்களை ஏமாற்றுகிறோம். ஒருசில சமயங்களில் நம்மை நம்பி இருப்பவர்களுக்கு நம்பிக்கை துரோகம் செய்கிறோம்.

வேதம் சொல்லுகிறது, **"நாம் ஒருவருக்கொருவர் அவயங்களாயிருக்கிறபடியால் பொய்யைக் களைந்து, அவனவன் பிறனுடனே மெய்யைப் பேசக்கடவன்"** ***(எபேசியர் 4:25).***

ஒருநபர் தன்னுடைய நண்பனுக்கு வீடு ஒன்று கிரயம் செய்து கொடுத்தார். அந்த வீட்டிற்கு தான் மாத்திரமே சொந்தக்காரன், வேறு ஒருவருக்கும் அதில் உரிமையில்லை என்று பொய் சொல்லியிருந்தார். நண்பனும் இந்த நபரின் வார்த்தையை நம்பி தன்னுடைய மற்ற சொத்துக்களை விற்று அந்த வீட்டை வாங்கினார். அவர் வீட்டை வாங்கிய சில மாதங்களில் வேறு ஒரு நபர், அந்த வீட்டில் தனக்கு சரிபாதி உரிமை இருப்பதாகவும், ஆகவே அந்தக் கிரயம் செல்லாது, அல்லது கிரயத்தொகையில் பங்கு வேண்டுமென்று கோரி கேஸ் போட்டிருந்தார். வீட்டை வாங்கின நண்பருக்கு எப்படிப்பட்ட மனவேதனை உண்டாயிருக்கும். தன் நண்பன் என்று அந்த நபரிடம் எவ்வளவு நம்பிக்கை வைத்திருப்பார். ஆனால் அந்த நபரோ பொய் சொல்லி ஏமாற்றி தன் நண்பனுக்கு பெரும் மனவேதனையை உண்டு பண்ணி விட்டார்.

யோசேப்பின் மீது அவனுடைய சகோதரர்கள் பொறாமை கொள்கிறார்கள். அவர்களுக்கு ஒரு சந்தர்ப்பம் கிடைத்தபோது அவனை இஸ்மவேலர் கையில் விற்றுப் போட்டனர்.

அவனுடைய அங்கியை ஆட்டுக் குட்டியின் இரத்தத்தில் தோய்த்து, இதை நாங்கள் கண்டெடுத்தோம் என்று தங்கள் தந்தையாகிய யாக்கோபினிடத்தில் பொய் சொன்னார்கள். தங்கள் சொந்த தகப்பனிடமே பொய்சொல்லி, நம்பிக்கை துரோகம் செய்தார்கள். யாக்கோபின் இருதயம் யோசேப்பை நினைத்து எவ்வளவு துக்கப்பட்டிருக்கும், தன் பிள்ளைகள் சொன்ன பொய்யை உண்மை என்று எண்ணி மனம் கசந்து அழுதான். வேதம் சொல்லுகிறது, **"அவனுடைய குமாரர் குமாரத்திகள், எல்லோரும் அவனுக்கு ஆறுதல் சொல்ல வந்து நின்றார்கள். ஆனாலும் அவன் ஆறுதலுக்கு இடங்கொடாமல் நான் துக்கத்தோடே என் குமாரனிடத்தில் பாதாளத்தில் இறங்குவேன் என்றான். இவ்விதமாய் அவனுடைய தகப்பன். அவனுக்காக அழுது கொண்டிருந்தான்"** *(ஆதியாகமம் 37:35).*

வேதம் **''சாத்தானை பொய்களின் பிதா என்று குறிப்பிடுகிறது''** *(யோவான் 8:44).* ஆகவே ஒளியின் பிள்ளைகளாகிய நாம் பொய்க்கு விலக்கி நம்மைக் காத்துக் கொள்ளுதல் மிக அவசியம்.

"ஒருவருக்கொருவர் பொய் சொல்லாதிருங்கள். பழைய மனுஷனையும் அவன் செய்கைகளையும் களைந்து போட்டு தன்னை சிருஷ்டித்தவருடைய சாயலுக்கொப்பாய், பூரண அறிவடையும்படி புதிதாகப்பட்ட புதிய மனுஷனை தரித்துக் கொண்டிருக்கிறீர்களே" *(கொலோசேயர் 3:9,10).*



5 எல்லாவற்றையும் அனுபவிக்கத் தடை

வேதம் சொல்லுகிறது **"எல்லாவற்றையும் அனுபவிக்க எனக்கு அதிகாரமுண்டு. ஆனால் எல்லாம் தகுதி யாயிராது"** *(1 கொரிந்தியர் 6:12).*

நாம் மிகவும் கவர்ச்சியான உலகில் வாழ்ந்து கொண்டிருக் கிறோம். நம்மைக் கவர்ந்து இழுக்கும் காரியங்கள் இந்த உலகில் அநேகம் காணப்படுகிறது. கர்த்தர் உண்ணக் கூடாது என்று தடுத்த கனி ஏவாளின் கண்களுக்கு இன்பமும், இச்சிக்கப்படத்தக்கதான விருட்சமுமாய் இருந்தது. உடனே அவள்தன் கண்களின் இச்சைக்கு இடம் கொடுத்தவளாயும், ஆண்டவரின் கட்டளையைப் புறக்கணித்தவளாயும் ஆகி விடுகிறாள். பார்வைக்கு இனியதாய்க் காணப்பட்டது அவளைப் பாவம் செய்யத் தூண்டும் ஒன்றாய் அமைந்துவிட்டது.

இன்றும் அப்படித்தான் இவ்வுலகில் பார்வைக்கு இன்பமாயும், மனது இச்சிப்பதாயும் காணப்படும் அநேக காரியங்கள் மனிதனை பாவத்தில் இழுப்புறச் செய்கிறது.

இவ்வுலகில் நாம் எதையும் பார்க்கலாம், கேட்கலாம் குடிக்கலாம், புசிக்கலாம், நம் சுதந்திரத்தில் குறுக்கிடுகிறவர்கள் யார் என்று கேட்கலாம்.

ஆனால் தேவ பிள்ளையே, நம்முடைய தேவன் எல்லாவற்றையும் அனுபவிக்கத் தடை விதித்து மகனே, மகளே இதை, இதை செய்யாதே என்று அன்போடு சொல்லும்போது, நாம் ஏன் அந்த தடையை மீறி பாவ வலையில் சிக்கிக் கொள்ள வேண்டும்? குரங்கு பிடிப்பவர்கள் மிகவும் தந்திரமாய் குறுகிய வாயையுடைய பாட்டிலில் குரங்கிற்கு பிடித்த கொட்டைகளைப் போட்டு வைப்பார்கள். குரங்கு அந்த கொட்டைகளை இச்சித்து ஆவலாய் பாட்டிலின் உள்கையை விட்டு, கை நிறைய அள்ளிக்கொள்ளும், ஆனால் அந்த குறுகிய வாய் வழியாக விரிந்த கைகளை எடுக்கவும் முடியாமல் கொட்டைகளையும் விட மனமுமில்லாமல் விழித்து கொண்டிருக்கும்போது குரங்காட்டி எளிதில் அதைப் பிடித்து விடுவான்.

இப்படித்தான், அநேகர் கண்களின் இச்சைக்கும், மாம்சத்தின் இச்சைக்கும் இடம் கொடுத்து அது தவறு என்று தெரிந்தும் விட முடியாமல் பாவச் சேற்றில் சிக்கிக் கொள்கிறார்கள்.

"கர்த்தருடைய வேதத்தில் பிரியமாயிருந்து இரவும், பகலும் அவருடைய வேதத்தில் தியானமாயிருக்கிற மனுஷனை பாக்கியவான்" என்று வேதம் சொல்லுகிறது *(சங்கீதம் 1:2)*. நீதிமானுக்கு கர்த்தருடைய வேதத்திலே பிரியம் இருக்க வேண்டும். அதனை வாசித்து தியானிப்பதிலே வாஞ்சை வேண்டும். பிரியமானவர்களே, நம்முடைய வாஞ்சையை நாம் எங்கு வைத்திருக்கிறோம் என்பதை சற்று சிந்தித்துப் பாருங்கள். பக்கத்து வீட்டு சகோதரியோடு அரட்டை அடிப்பதில் வாஞ்சை, அங்குபோய் இரண்டு சகோதரிகளைப் பற்றி குறை பேச ஆசை; T.V.-ல் mega serials முன்பு மணிக்கணக்கில் உட்கார ஆசை; எங்கு நம் வாஞ்சை இருக்கிறது?

ஒரு இடத்தில் ஜெபக்கூட்டம் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது. உங்களையும் அழைக்கிறார்கள். மற்றொரு இடத்தில் ஒரு பெரிய விருந்து ஆயத்தப்படுத்தப்பட்டுள்ளது. உங்கள் நண்பர் உங்களை வருந்தி அழைக்கிறார்; உங்களுடைய வாஞ்சை எங்கு உள்ளது. உங்களை எங்கு ஈர்த்துச் செல்கிறது?

ஜெபக்கூட்டத்தில் ஆண்டவரை ஆராதிக்கலாம். சாட்சிகளைக் கேட்டு நம் விசுவாசத்தை வளர்த்துக் கொள்ளலாம். ஜெபம்

இருக்கும், பிரசங்கம் இருக்கும், எல்லாவற்றையும் விட அங்கு ஆண்டவர் இருப்பார். அவர் பிரசன்னம் இருக்கும்.

உலகப் பிரகாரமாய் நடத்தப்படும் விருந்து நிகழ்ச்சிகள் (Party) எப்படி இருக்கும்? கண்களுக்கு கவர்ச்சியாய் இருக்கும் மனதிற்கு மகிழ்ச்சியாய் இருக்கும், நல்ல ஆடை அலங்காரம் செய்து கொள்ளலாம், மிடுக்காய் செல்லலாம், அங்கு மனதை மயக்கும் கேளிக்கைகள் உண்டு. ஆடல் உண்டு. பாடல் உண்டு. உண்ண விதவிதமான உணவு உண்டு. அருந்தவும் விதவிதமான பானங்கள் உண்டு. ஆனால் அங்கு ஆண்டவருடைய வார்த்தை இல்லை. தேடித் தேடி பாருங்கள் அங்கு ஆண்டவர் இல்லை. அவருடைய பிரசன்னமும் இல்லை.

வீட்டிலே தொலைக்காட்சி பெட்டி முன்பு உட்கார்ந்து கொண்டு நம் மனது எதை நாடுகிறது? தேவனைக் குறித்த காரியங்களைப் பார்ப்பதிலா அல்லது மணிக்கணக்கில் ஓடும் மெகாத் தொடர், சினிமாக்களைப் பார்ப்பதிலா?

நான் சட்டக்கல்லூரியில் படித்துக் கொண்டிருந்த பொழுது, ஒரு கொலை கேஸ் பற்றி செய்தி இருந்தது. ஒருவன் 9 கொலைகளை தொடர்ச்சியாய் ஒரே நேரத்தில் செய்தானாம். அவனுக்கு அப்படி ஒரு வெறி ஏற்படக் காரணமாயிருந்தது, அவன் சினிமாவில் அடுத்தடுத்து பார்த்த கொலை காட்சிகள் என்று குறிப்பிட்டிருந்தான்.

இன்று வாலிபப் பிள்ளைகள் அசிங்கமான சினிமா காட்சிகளை அடிக்கடி பார்க்கிறார்கள். அநேகர் கண்களின் இச்சைக்கும் மாம்சத்தின் இச்சைக்கும் இடம் கொடுத்து தங்கள் எதிர்காலத்தைக் கெடுத்துக் கொள்கிறார்கள். தங்கள் பெற்றோர் விருப்பத்திற்கு எதிராய் தங்கள் மனம் போன போக்கில் தங்கள் வாழ்க்கைத் துணையைத் தேர்ந்தெடுத்துக் கொள்கிறார்கள். அது தவறாய் இருந்தாலும் சரியென்று சாதிக்கிறார்கள். முடிவில் வேதனைக்குள்ளாகிறார்கள்.

ஒரு மனிதன் மதுபான வெறி கொள்ளும் போது அது அவனை அநேக துன்மார்க்கத்திற்குள் இட்டுச் செல்கிறது. வேதம் சொல்கிறது. " **துன்மார்க்கத்திற் கேதுவான மதுபான வெறி கொள்ளாமல்"** என்று (எபேசியர் 5:18) அப்படிப்பட்டவன்

தான் எதைச் செய்கிறோம் தான் செய்வது சரியா, தவறா என்ற உணர்வு இல்லாது செயல்படுகிறான்.

"மதுபானம் இரத்தவர்ணமாய் பளபளப்பாய் பாத்திரத்தில் காணப்படும் போது அதை பார்க்கக் கூட செய்யாதே" என்று நீதி மொழிகளில் சொல்லப்பட்டுள்ளது. (நீதி மொழிகள் 23:31) ஏனென்றால் அதை ஆசையோடு பார்க்கும் போது கண்களுக்கு கவர்ச்சியாய் தென்படுகிறது. அதைக் குடிக்க வேண்டும் என்ற ஆவலை உண்டு பண்ணுகிறது. ஆனால் அதைக் குடிக்கும் போதோ, அது விரியன் பாம்பைப் போல தீண்டும் ஒன்றாய் இருக்கிறது. இந்த விஷம் சரீரத்தில் இறங்க இறங்க அவனுடைய சிந்தை, செயல், பேச்சு, பார்வை எல்லாமே பொல்லாதவைகளாய் மாறுகிறது. அவனுடைய கால்கள் அவனை அசுத்தம் நிறைந்த வாழ்க்கைக்கு இழுத்துச் செல்கிறது. தன் மீது அன்பு செலுத்தும் உற்றார் உறவினரிடம் கடுமையான வார்த்தைகளைப் பேசுகிறான். அவன் எந்தவித உணர்வும், சுரணையும் இல்லாதவனாய் மாறுகிறான். நீதி மொழிகள் சொல்லுகிறது. **"முடிவிலே அது பாம்பைப் போல் கடிக்கும், விரியனைப் போல் தீண்டும். உன் கண்கள் பரஸ்திரிகளை நோக்கும். உன் உள்ளம் தாறுமாறானவைகளைப் பேசும்"** (நீதிமொழிகள் 23:32,33), ஒரு சில இடங்களில் பெண்கள் கூட இந்த கெட்டப் பழக்கத்திற்கு அடிமையாகிறார்கள். நாகரீகம் என்ற பெயரில் இந்த கொடிய பழக்கம் எவ்வளவு பெரிய நாசத்துக்கு அவர்களை இட்டுச் செல்லும் என்பதை அவர்கள் உணர்வதில்லை.

என் வீட்டில் வேலை செய்த சில சகோதரிகள் தங்கள் குடிகார கணவர்களால் மிகவும் பாதிக்கப்பட்டிருப்பதைப் பார்த்திருக்கிறேன். கண்ணீரோடும் காயங்களோடும் வேலைக்கு வருவார்கள் எவ்வளவு வேதனையான காரியம். இந்த பொல்லாத மதுபானத்திற்கு அடிமையானவன் அதிலிருந்து எளிதில் விடுதலைப்பெற முடிவதில்லை. அப்படிப்பட்டவன் தான் மரணத்தை சந்திக்கும் நாள் நெருங்கி விட்டது என்பதை அறிந்தவனாய் திருந்தி வாழ ஆசைப்பட்டாலும் அவனால் ஒன்றும் செய்ய முடிவதில்லை. அவன் காலைச் சுற்றிய பாம்பு அவனைக் கடிக்காமல் விடுவதில்லை.

ஆனால் அவன் விடுதலைப் பெற அவனுக்கு ஒரே ஒரு வழியுண்டு. அது தான் நம் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவை ஏற்றுக் கொள்வது. ஆம் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவை ஏற்றுக் கொண்டு, தன் தவற்றை உணர்ந்து அறிக்கையிட்டால், ஆண்டவர் அவன் பாவங்களையெல்லாம் மன்னித்து, அந்த அடிமைப் பழக்கத்திலிருந்து அவனுக்கு பூரண விடுதலை அளிக்க முடியும்.

குடிப்பழக்கத்திற்கு அடிமையான எத்தனையோ சகோதரர்கள், தேவனுடைய அன்பை அறிந்து, அவரை ஏற்றுக் கொண்டு, இந்தக் கெட்ட பழக்கத்திலிருந்து முற்றிலுமாய் விலகினது பற்றி கேள்விப்பட்டிருக்கிறேன். பார்த்துமிருக்கிறேன்.

சில நாட்களுக்கு முன்பு, கார் ஓட்டுனர் இல்லாத காரணத்தால் டிராவல்ஸ்லிருந்து ஏற்பாடு செய்திருந்தேன். அங்கிருந்து வந்த நபர் உருவத்தில் கடினமானவராய்த் தோன்றினாலும் அவரோடு பேசியபோது இரட்சிக்கப்பட்டவராய் காணப்பட்டார். ஒரு சமயம், பயங்கர குடிகாரராய் இருந்தவர், இயேசுகிறிஸ்துவை ஏற்றுக் கொண்டதால், இன்று அந்தப் பழக்கத்திலிருந்து முற்றிலும் விடுதலை பெற்றிருப்பதாய் சாட்சி சொன்னார்.

ஆம் மனிதரால் கூடாதது தேவனால் கூடும். வெளிச்சத்தின் தேவன் இந்த இருளின் கிரியையிலிருந்து நிச்சயம் விடுதலை தர வல்லவராயிருக்கிறார். அல்லேலூயா! ஆமென்!!

III

தேவ ஜனத்திற்கு எதிராய் ‘சத்துரு’ கொண்டு வரும் தடைகள்

சில நாட்களுக்கு முன்பாக நான் ஒரு வீட்டிற்குச் சென்றிருந்தேன். அங்கிருந்த சிறுமி வெகு ஆவலாய் ஒரு பொம்மையைக் கையில் எடுத்து விளையாட உட்கார்ந்தாள். துரு துருவென்று காணப்பட்ட அந்த சிறுமியின் கண்களிலே ஒரே மகிழ்ச்சி. அவள் வெகு உற்சாகமாய் காணப்பட்டாள். ஆனால் ஒரு சில நிமிடங்களில் மிகுந்த சோர்வோடு மெதுவாய் அவள் அம்மா பின்னே போவதைப் பார்த்தேன். காரணம் அந்தச் சிறுமியின் கையிலிருந்த பொம்மையை அவளின் தாயார் வாங்கிக் கொண்டார்கள். இப்பொழுது விளையாடக்

கூடாது. விட்டுப் பாடங்களை முடித்த பிறகு தான் விளையாடலாம் என்று கண்டிப்பாய் கூறிவிட்டார்கள். விளையாடலாம் என்ற ஆவலோடு வந்த சிறுமியின் சந்தோஷம் தடைபடுகிறது. அவளுடைய முகம் வாடிப்போகிறது. ஆம் நம்முடைய வாழ்வில் கூட தடைகள் நம்மைச் சோர்வடையச் செய்கிறது. அநேகக் காரியங்களைக் குறித்து நாம் முன் கூட்டியே திட்டமிடுகிறோம். படிப்படியாய் அதை எப்படி செய்து முடிக்கலாம் என்று மனதில் ஒரு வரைபடம் தீட்டிக் கொள்கிறோம். ஆனால் அதை செய்து முடிக்க முடியாத படிக்கு தடைகள் வருகிறது. சாத்தான் தேவ ஜனங்களை சோர்வடையச் செய்யும் விதத்தில், ஒன்று அவர்கள் வாழ்க்கையில் தடைகளை கொண்டு வருதல் ஆகும். அவனுடைய எண்ணமெல்லாம் எப்படி இவர்களை பின்னுக்கு இழுக்கலாம், அவிசுவாசத்தைக் கொண்டு வரலாம். முறுமுறுக்க வைக்கலாம் என்பதிலேயே இருக்கிறது.

ஆனால் தேவப் பிள்ளையே, தேவனை விசுவாசித்து அவரையே தங்கள் நம்பிக்கையாய் கொண்டிருக்கும் அவருடைய பிள்ளைகளின் வாழ்க்கையில் அவர்களுக்கென்று நியமித்திருக்கும் ஜெயத்தையும், வெற்றியையும் கொண்டு வர கர்த்தரின் கரங்களிலே வல்லமையும் பராக்கிரமும் நிறைந்திருக்கிறது. அதைத் தடைசெய்ய எந்த அதிகாரத்தினாலும் கூடாது.

1 வாக்குத்தத்தம் நிறைவேறாதது போல் தடைகள்

ஒரு சில காரியங்களுக்காய், நாம் தேவனிடத்தில் ஊக்கமாய் ஜெபிக்கும் போது, கர்த்தர் தம் வார்த்தையின் மூலம் நமக்கு வாக்குத்தத்தங்களைத் தருகிறார். அதை அநேக வேளைகளில் ஊர்ஜிதப்படுத்தவும் செய்கிறார். நாம் அந்த வாக்குத் தத்தங்களை உறுதியாய் பற்றிக் கொண்டு ஜெபிக்கிறோம். கர்த்தர் அதை கண்டிப்பாய் நிறைவேற்றுவார் என்ற நிச்சயம் நமக்குள் வருகிறது.

ஆனால் சத்துரு அந்த விசுவாசத்தை அசைக்கும் படியாய் தடைகளைக் கொண்டு வருகிறான். வாக்குத் தத்தம் நிறைவேறாதது போலவும், நிறைவேற சந்தர்ப்பமே இல்லாதது போலவும் சூழ்நிலைகளை உருவாக்குகிறான். கர்த்தருடைய பிள்ளைகளாகிய நாம் ஒரு போதும் இந்த தடைகளைக் கண்டு சோர்ந்து போகக்கூடாது. வாக்குத் தத்தம் செய்தவர் உண்மையுள்ளவர். வேதம் சொல்லுகிறது. **"இஸ்ரேலின் ஜெயபலமானவர் பொய் சொல்லுகிறதுமில்லை, தாம் சொன்னதைப் பற்றி மனஸ்தாபப்படுகிறதும் இல்லை. மனம்மாற அவர் மனஷன் அல்ல"** *(1 சாமுவேல் 15:29)*

ஆபிரகாம், சாராள் தம்பதியர் பிள்ளையில்லாதிருந்தனர். கர்த்தர் ஆபிரகாமை அழைத்து, **"நீ வானத்தை அண்ணாந்து பார். நட்சத்திரங்களை எண்ண உன்னாலே கூடுமானால் அவைகளை எண்ணு என்று சொல்லி பின்பு அவனை நோக்கி உன் சந்ததி இவ்வண்ணமாய் இருக்கும் என்று வாக்குறைக்கின்றார்."** (ஆதியாகமம் 15:5).

ஆபிரகாமோ ஏறக்குறைய நூறுவயதுள்ளவனாய் இருந்தான். சாராள், தன் உள்ளத்தில் கிழவியாய் இருக்கிற நான் பிள்ளைப் பெற முடியுமா என்று எண்ணி நகைக்கிறாள். ஆம், வாக்குத்தத்தம் நிறைவேற வாய்ப்பே இல்லாதது போல முதுமையும், சூழ்நிலையும் தடையாய் நின்றது. ஆனால் கர்த்தர் ஒன்றை வாக்குத்தத்தம் செய்யும் போது, எப்படிப்பட்ட தடைகளும் தவிடு பொடியாகிறது. இயற்கைக்கு அப்பாற்பட்ட அற்புதத்தையும் அவரால் செய்ய முடிகிறது.

கர்த்தர் தாம் செய்த வாக்குத்தத்தத்தை நிறைவேற்றுகிறார். உலகப் பிரகாரமாக மருத்துவ ரீதியாக, ஒரு மனிதன் ஏறக்குறைய 100 வயதுள்ளவனாய் இருக்கும் போது, ஒரு ஸ்திரியின் கர்ப்பம் செத்துப் போன நிலையிலே பிள்ளை உருவாவது என்பது இயலாத ஒன்றுதான். இயலாத ஒன்றை இயலும் ஒன்றாய் மாற்ற நம் தேவனால் மட்டுமே கூடும். அல்லேலூயா! ஆமென்!!

சாராள் அவிசுவாசப்பட்டு நகைத்தபோது, கர்த்தர் சொல்லுகிறார். **"கர்த்தரால் ஆகாத காரியம் உண்டோ! உற்பவ காலக்கட்டத்தில் உன்னிடத்திற்கு திரும்ப வருவேன். அப்பொழுது சாராளுக்கு ஒரு குமாரன் இருப்பான்"** என்றார். (ஆதியாகமம் 18:14). கர்த்தர் தாம் சொல்லியபடியே செய்கிறார். ஆபிரகாமுக்கு 100 வயதாகும் போது, ஈசாக்கை அவனுக்கு மகனாகக் கொடுத்தார்.

ஆபிரகாமுக்கு இருந்ததோ அருமையான ஒரே புத்திரன். அதுவும் ஆபிரகாமுக்கு 100 வயதாகும்போது, அதிசயமாய் பிறந்தவன். கர்த்தர் ஆபிரகாமுக்கு கொடுத்த வாக்குத்தத்தம் என்னவென்றால், வானத்து நட்சத்திரங்களைப்போல அவன் சந்ததி இருக்கும் என்பதே. ஆனால் கர்த்தரோ அந்த ஒரே புதல்வனைப் பலியிடு என்கிறார். அவன் பலியிடப்பட்டால் வாக்குத்

தத்தம் எவ்வாறு நிறைவேறும். வாக்குத்தத்தம் நிறைவேற முடியாதது போன்ற சூழ்நிலை. ஆனால் ஆபிரகாமோ சோர்ந்து போகவில்லை. அவன் தேவனை விசுவாசிப்பதில் குறைவுபடவும் இல்லை. வேதம் சொல்லுகிறது. **“ஈசாக்கினிடத்தில் உன் சந்ததி விளங்கும் என்று அவனோடே சொல்லப்பட்டிருந்ததே: இப்படிப்பட்ட வாக்குத் தத்தங்களைப் பெற்றவன், மரித்தோரிலிருந்து எழுப்ப தேவன் வல்லவராயிருக்கிறார் என்றெண்ணி, தனக்கு ஒரே பேரானவனையே பலியாக ஒப்புக் கொடுத்தான். மரித்தோரிலிருந்து அவனை பாவனையாக திரும்பவும் பெற்றுக் கொண்டான்.”** (எபிரேயர் 11:18, 19) ‘‘ஆபிரகாம் பலிபிடத்தை உண்டாக்கி கட்டைகளை அடுக்கி, அதின்மேல் தன் மகனைக் கிடத்தி அவனை வெட்டும்படி தன் கத்தியை எடுத்தான். ஆனால் கர்த்தரோ பிள்ளையின் மேல் உன் கையைப் போடாதே. நீ அவனை உன்மகன் என்றும் பாராமல் எனக்காக ஒப்புக் கொடுத்தபடியால், நீ தேவனுக்கு பயப்படுகிறவன் என்று அறிந்திருக்கிறேன்’’ என்று சொல்லி அவனைத் தடுத்து விடுகிறார். (ஆதியாகமம் 22: 12)

இஸ்ரவேல் ஜனங்கள் தங்களுக்கு வாக்குத் தத்தம் பண்ணப்பட்ட பாலும், தேனும் ஓடுகிற கானான் தேசத்தை சுதந்தரிப்பதற்கு முன்பு எத்தனையோ தடைகள் குறுக்கிட்டது செங்கடல் எதிர்த்து வந்தது. யோர்தான் கரை புரண்டு ஓடியது. எரிகோமதில் தடையாய் நின்றது. இன்னும் எத்தனையோ தடைகள். அநேக வேளைகளில் வாக்குத்தத்தம் நிறைவேறப்போவதில்லை என்று முறுமுறுத்தார்கள்: சோர்ந்துப் போனார்கள். ஆனால் வாக்குத்தத்தம் செய்த தேவன் உண்மையுள்ளராயிருந்து தாம் வாக்குத்தத்தம் செய்ததை நிறைவேற்றினார்.

சில வருடங்களுக்கு முன்பு கர்த்தரிடம் வசிப்பதற்கு ஒரு வீடு வேண்டும் என்று ஜெபித்தேன். அப்பொழுது, கர்த்தர் எங்களுக்கு ஒரு வீட்டைக் கட்டுவதாக வாக்குத் தத்தம் செய்தார். **“இப்போதும் கர்த்தர் வீட்டை உண்டு பண்ணுவார் என்பதை கர்த்தர் உனக்கு அறிவிக்கிறார்” (**II **சாமுவேல் 7:11)** என்ற வசனத்தின் மூலம் உறுதிப்படுத்தினார். ஒருவருடம் ஆயிற்று. எந்த நிலமும் எங்களுக்கு வாய்க்கவில்லை. மறுவருடம் கர்த்தர் தம்முடைய வாக்குத் தத்தத்தை ஊர்ஜிதப்படுத்தினார். அந்த

வருடத்தில் நாங்கள் வீடுகட்டும் மனை ஒன்று வாங்க எல்லாம் கைகூடி வந்தது. அப்படியே, ஜெபித்து, அந்த இடத்தை வாங்கி முழுத்தொகையையும் செலுத்தி பத்திரம் ரெஜிஸ்ட்டர் செய்து விட்டோம். வாங்கிய சிறிது நாட்கள் கழித்து அதை அளப்பதற்காய் தாசில்தார் அலுவலகத்திலிருந்து வந்தவர்கள் நீங்கள் கட்டும் இந்த இடம் உங்களுக்கு உரியது அல்ல என்று சொன்னார்கள். அப்படியென்றால் எங்களுக்குரியது எது என்ற குழப்பம் உண்டானது. சத்துரு நாங்கள் முற்றிலும் ஏமாற்றப்பட்டது போன்ற சூழ்நிலையை உருவாக்கி பயமுறுத்தினான். கர்த்தர் வாக்குத் தத்தம் செய்தாரே, அவரிடம் ஜெபித்துதானே இந்த இடத்தை வாங்கினோம். இப்படிக் குழப்பமாய் இருக்கிறதே என்று வேதனையாக இருந்தது. கர்த்தர் எங்களுக்கென்று கொடுத்த இடத்தை சுதந்தரிக்க முடியாதபடிக்கு தடைகள் வந்து சோர்வுபடுத்தியது. கர்த்தரிடம் நாங்கள் கிட்டத்தட்ட ஒருமாதம் போராடி ஜெபித்தோம் லூக்கா 18 ஆம் அதிகாரத்தின் வழியாய், கர்த்தர் எங்களுக்கு சீக்கிரமாய் நியாயம் செய்வதாய் வாக்குத்தந்தார்.

அதன்படி அநேக பிராயசங்களுக்குப் பிற்பாடு எங்களுக்கு சொந்தமான இடம் எது என்று கண்டுப்பிடிக்கப்பட்டது. கர்த்தர் எல்லா தடைகளையும் நீக்கி எங்களுக்கு என்று அவர் ஆயத்தப்படுத்தி வைத்திருந்த வீட்டு மனையை சுதந்தரிக்க கிருபை செய்தார்.

இன்றைக்கு கர்த்தர் அந்த இடத்திலே தம் வாக்குத்தத்தின்படி அழகான வீட்டைக்கட்டி எங்களை அதில் குடியேற்றியிருக்கிறார். கர்த்தருக்கு ஸ்தோத்திரம்.



2 பூமிக்குரிய ஆசிர்வாதங்களில் தடைகள்

வேதம் சொல்லுகிறது. **"உன் ஆத்துமா வாழ்கிறது போல நீ எல்லாவற்றிலும் வாழ்ந்து சுகமாயிரு"** என்று (IIIயோவான் *1:2)* உலக பெற்றோர் தம்முடைய பிள்ளைகள் சகல ஆசீர்வாதத்தையும் பெற்று வாழவேண்டும் என்று விரும்புகிறார்கள். அவர்களை வாழ்த்துகிறார்கள். தங்களால் இயன்ற அளவு அதற்காய் பிரயாசப்படுகிறார்கள். அதைக் காட்டிலும் மேலாய் நம் பரம தகப்பன் நாம் ஆசீர்வாதமாயும் இருப்பதை விரும்புகிறார்.

வேதம் சொல்லுகிறது **"கர்த்தருடைய ஆசீர்வாதமே ஐசுவர்யத்தைத் தரும். அதனோடே அவர் வேதனையைக் கூட்டார்"** என்று (நீதி மொழிகள் *10:22)* ஆம் தேவபிள்ளையே, உலகில் நமக்கு ஐசுவர்யம் யாரிடத்திலிருந்து வருகிறது என்பதில் நாம் வெகு கவனமாய் இருக்க வேண்டும், சாத்தானிடத்திலிருந்து ஐசுவர்யம் வரும்போது, அதில் ஒருபோதும் சமாதனம் இருக்காது. சஞ்சலம்தான் மிஞ்சும். ஆனால் கர்த்தரிடத்திலிருந்து வரும் ஐசுவர்யம் ஆசீர்வாதமாய் இருக்கும். அதோடு வேதனை இருக்காது. அது நம்மையும் ஆசீர்வதித்து மற்றவர்களுக்கும் ஆசீர்வாதமான நீர் ஊற்றைப் போல் இருக்கும்.

கானா ஊரிலே கல்யாணம் ஒன்று ஒரு விமரிசையாய் நடந்து கொண்டிருக்கிறது. ஜனங்கள் வந்தமானியமாய் இருக்கிறார்கள். அங்கே இயேசுவும் இருந்தார். கல்யாணப் பந்தியிலே பரிமாறப்பட வேண்டிய முக்கியமான திராட்ச ரசம் தீர்ந்து போகிறது. மிகுந்த சந்தோஷத்துடன் இருந்த மணவாளனுக்கு நிச்சயம் இந்த செய்தி எட்டியிருக்கும். ஜனங்கள் வந்து கொண்டிருக்கிறார்களே, திராட்ச ரசத்துக்கு எங்கு போவது என்று கவலை அவன் சந்தோஷத்தை தடைபடுத்தியிருக்கும். இப்படிப்பட்ட சமயத்தில்தான் இயேசு, தன் முதலாம் அற்புதத்தைச் செய்கிறார். அங்கிருக்கும் 6 கற்சாடிகளில் தண்ணீர் நிரப்பி அதை மொண்டு பரிமாற சொல்கிறார். அவ்வாறு அவர்கள் செய்த போது தண்ணீர் ருசியான திராட்ச ரசமாய் மாறினது. பந்தி விசாரிப்புக்காரன் மணவாளனை அழைத்து, எந்த மனுஷனும் முன்பு நல்ல திராட்சை ரசத்தை கொடுத்து, பின்பு ருசி குறைந்ததைக் கொடுப்பான். நீரோ நல்ல ரசத்தை இது வரைக்கும் வைத்தீரே என்கிறான். மணவாளனிடத்தில் தடைப்பட்டிருந்த சந்தோஷம் இயேசு செய்த அற்புதத்தினால் இரட்டிப்பான சந்தோஷமாய் மாறுகிறது.

அன்னாளுக்கு பிள்ளை இல்லாததால் பெருத்த வேதனை. அவளுடைய புருஷனான 'எல்க்கானா' அவள் மீது அதிகப் பிரியம் வைத்திருந்தான். அவள் சஞ்சலப்பட்டு அழும்போதெல்லாம் ''அன்னாளே ஏன் அழுகிறாய் ஏன் சஞ்சலப்படுகிறாய் பத்துக் குமாரனைக் காட்டிலும் நான் உனக்கு அதிகமல்லவா'' என்பான். ஆனால் அவள் சஞ்சலம் அதிகமாயிருந்தது. ஒரு சமயம் அவள் கர்த்தரிடத்தில் மனங்கசந்து அழுது ஜெபித்தபோது கர்த்தர் அவள் வேண்டுதலைக் கேட்டார். தடைகளை நீக்கினார். சாமுவேலைக் கொடுத்தார். அதற்குப் பிற்பாடு இன்னும் மூன்று குமாரனையும் இரண்டு குமாரத்திகளையும் கொடுத்தார்.

பெற்றோர் தங்கள் பிள்ளைகளின் படிப்பு, வேலை, திருமணம் போன்ற காரியங்களுக்காய் ஜெபிக்கிறார்கள். சில மனைவிமார் தங்கள் கணவன்மார் குடிப்பழக்கத்திலிருந்து திருந்த வேண்டுமென்று ஜெபிக்கிறார்கள். கடன் பிரச்சனைத்தீர வேண்டுமென்று ஜெபிப்பவர்களும் உண்டு. வியாதியின் பிடியில் சிக்கித் தவிக்கும் அநேகர் நல்ல சுகத்திற்காய் ஜெபிக்கிறார்கள்.

இப்படியாய் நாம் அநேக பூமிக்குரிய ஆசீர்வாதங்களுக்கு ஜெபிக்கிறோம். ஆனால் ஒரு சில வேளைகளில் அந்த விண்ணப்பங்கள் கேட்கப்படாதது போல் சத்துரு தடைகளைக் கொண்டு வருகிறான். தேவன் நிச்சயம் இதை செய்வார், இதைக் கொடுப்பார், இதை நிறைவேற்றுவார் என்ற விசுவாசத்தோடு அடி எடுத்து வைக்கிறோம். ஆனால் நம்முடைய எதிர்பார்ப்பின்படி இல்லாமல் சூழ்நிலைகள் வேறுவிதமாய் இருக்கும் போது நாம் எளிதில் சோர்ந்து போகிறோம்.

தேவப் பிள்ளையே சோர்ந்து போகாதிருங்கள். நம் தேவனால் கூடாத காரியம் ஒன்றும் இல்லை. அவர் தம் பிள்ளைகளின் வாழ்க்கையில் ஆசீர்வாதங்களைக் கொண்டு வர தீர்மானிக்கும் போது அவரை எந்த வல்லமையாலும் தடை செய்ய முடியாது. அவர் தம் பிள்ளைகளின் வாழ்க்கையில் செய்ய நினைத்ததை நிச்சயம் நிறைவேற்றுவார்.

சில வேளைகளில் பூமிக்குரிய ஆசீர்வாதங்களுக்காய் நாம் ஜெபிக்கும்போது, அது நிறைவேற தாமதம் ஆகலாம். அது நிறைவேற சந்தர்ப்பமே இல்லாது போன்ற சூழ்நிலைகளை சத்துரு தடையாய் கொண்டு வரலாம். ஆனால் விசுவாசத்தோடு தடை நீங்க ஜெபியுங்கள். கர்த்தர் சீக்கிரத்திலேயே தடைகளை அகற்றி ஏற்ற சமயத்தில் உங்களுக்கு சகாயம் செய்வார்.

கர்த்தர் எங்களுக்கு ஒரு நல்ல வீட்டைக் கட்டி அதிலே குடியேறக் கிருபை செய்தார். ஆனால், குடியேறிய ஒரு சில நாட்களிலே சத்துரு என் சரீரத்தில் வியாதியைக் கொண்டு வந்து, எங்கள் சமாதானத்தைத் தடை செய்தான். (Scan)ஸ்கேன் செய்து என்னை பரிசோதித்த டாக்டர்கள் உங்களுக்கு 8 cm 'சிஸ்ட்' வளர்ந்திருப்பதால் அறுவை சிகிச்சை செய்ய வேண்டும். மாத்திரைகளால் கரைக்க முடியாது என்று கூறிவிட்டார்கள். நாங்கள் "ஆண்டவரே, சத்துரு கொண்டு வந்திருக்கும் இந்த வியாதியாகிய தடையை அகற்றி நீர் எங்களுக்கு கொடுத்த வீட்டிலே நாங்கள் சமாதானத்துடன் இருக்க கிருபை செய்யும்" என்று கர்த்தரை நோக்கி ஜெபிக்க ஆரம்பித்தோம். கர்த்தர் எங்கள் ஜெபத்தைக் கேட்டார். எங்கள் சமாதானத்தை தடைசெய்த வியாதியிலிருந்து அற்புதமாய் சுகம் தந்தார். ஒரு சில நாட்களில் வலியின் வேகம் குறைவதை உணர்ந்தேன்.

ஆகவே மறுபடியும் (Scan) ஸ்கேன் செய்து பார்த்த போது 8 cm வளர்ந்திருந்த சிஸ்ட் 5 cm அளவிற்கு குறைந்திருப்பதாய்ச் சொன்னார்கள். எங்களுக்கு ஒரே சந்தோஷம். குறையச் செய்தவரால் நிச்சயம் இல்லாமல் மறையச் செய்ய முடியும் என்ற விசுவாசம் எனக்குள் வந்தது. அப்படியே, இன்னும் சிறிது நாட்களுக்குப் பிறகு மறுபடியும் (Scan) ஸ்கேன் செய்து பார்த்த போது, அந்த சிஸ்ட் இருந்த இடமே தெரியாமல் மறைந்திருந்தது. கர்த்தருக்கு ஸ்தோத்திரம்.

என்னைப் பரிசோதித்த டாக்டரால் நம்பமுடியவில்லை. நீங்கள் வேறு இடத்தில் மறுபடியும் ஸ்கேன் எடுங்கள். ஏனென்றால் 8 cm வளர்ந்திருந்த சிஸ்ட் மறைய வாய்ப்பில்லை என்றார். அதற்கு நான் எங்கள் ஆண்டவர் என்னை சுகப்படுத்தியதால், அது மறைந்து விட்டது என்றேன்.

ஆம் கர்த்தர் தான் இந்த அதிசயத்தை என் வாழ்வில் செய்தார். கர்த்தர் வியாதியாகிய தடையை அகற்றி அவர் எங்களுக்கென்று கட்டிக் கொடுத்த வீட்டில் நாங்கள் சமாதனமாய் குடியிருக்க கிருபை செய்தார்.

சில வேளைகளில் நம்முடைய விண்ணப்பம் கேட்கப்படாமல் இருப்பதற்கு, நம்முடைய தகாத நோக்கமே தடையாய் அமைகிறது. ஆம் நம்முடைய விண்ணப்பம் எப்படிப்பட்ட ஒன்றாய் இருக்க வேண்டும் என்பதில் நாம் கவனமாய் இருக்க வேண்டும்.

தேவனே எனக்கு வசிக்க ஒரு வீட்டைக் கட்டித்தாரும் என்பது தேவனுக்கு உகந்த விண்ணப்பமாய் இருக்கலாம். ஆனால் ஆண்டவரே அவனுக்கு ஏன் இரண்டு வீடுகள், ஒன்றை அவனை விட்டு எடுத்துப் போடும் என்றால், அந்த விண்ணப்பம் பொறாமையினால் உண்டான ஒன்று. நிச்சயம் அப்படிப்பட்ட விண்ணப்பங்களுக்கு தேவன் செவி கொடுப்பதில்லை.

வேதம் சொல்லுகிறது **“நீங்கள் விண்ணப்பம் பண்ணியும் உங்கள் இச்சைகளை நிறைவேற்றும்படி செலவழிக்க வேண்டுமென்று தகாத விதமாய் விண்ணப்பம் பண்ணுகிற படியால் பெற்றுக் கொள்ளாமலிருக்கிறீர்கள்” *(யாக்கோபு 4:3)***

உமது ஜனங்களை நியாயம் விசாரிக்கவும் நன்மை தீமை இன்னதென்று வகையறுக்கவும் அடியேனுக்கு ஞானமுள்ள இருதயத்தை தாரும் என்று சாலமோன் கேட்ட பொழுது, அது கர்த்தருக்குப் பிரியமான ஒன்றாய் இருந்தது. வேதம் சொல்லுகிறது. **"சாலமோன் இந்தக் காரியத்தைக் கேட்டது ஆண்டவருடைய பார்வைக்கு உகந்த விண்ணப்பமாயிருந்தது "** *(I இராஜாக்கள் 3:10)* ஆகவே அவர் அவன் விண்ணப்பத்தின்படி செய்து, அவன் விண்ணப்பம் பண்ணாத ஆயுசு நாட்களையும் ஐசுவரியத்தையும் சேர்த்து கொடுத்தார்.

நினிவே மக்கள் மிகவும் அக்கிரமம் நிறைந்தவர்களாய் இருந்தனர். ஆகவே அதற்கு விரோதமாய் பிரசங்கிக்கும்படி கர்த்தர் யோனா தீர்க்கதரிசியை அனுப்புகிறார். யோனாவின் வார்த்தையைக் கேட்ட நினிவே மக்கள், ராஜா முதற்கொண்டு அனைவரும் உபவாசித்து தேவனுக்கு முன்பாக தங்களைத் தாழ்த்தி, தங்கள், பொல்லாத வழியை விட்டு திரும்புகிறார்கள். உடனே தேவன் மனமிறங்கி அவர்களுக்குச் செய்வேன் என்று சொன்ன தீங்கை செய்யாதிருந்தார். வேதம் சொல்லுகிறது. **"அவர்கள் தங்கள் பொல்லாத வழியை விட்டு, திரும்பினார்களென்று தேவன் அவர்களுடைய கிரியைகளைப் பார்த்து, தாம் அவர்களுக்கு செய்வேன் என்று சொல்லியிருந்த தீங்கைக் குறித்து மனஸ்தாபப்பட்டு அதைச் செய்யாதிருந்தார் "** ***(யோனா 3:10)***

"ஆனால் யோனாவோ கடுங்கோபம் கொண்டு கர்த்தாவே நீர் மனமிறங்கும் தேவன் என்பதை அறிந்துதான், நான் அவர்களுக்கு எதிராக பிரசங்கிக்க மாட்டேன் என்றேன். இப்பொழுதும் என் பிராணனை எடுத்துக் கொள்ளும் நான் சாவதே நலம் என்று விண்ணப்பப் பண்ணுகிறான்" *(யோனா4:1-3)*

கர்த்தர் **"இப்படிப்பட்ட விண்ணப்பத்தில் பிரியப்படவில்லை. அவர் யோனாவைப் பார்த்து, நீ எரிச்சலாய் இருக்கிறது நல்லதோ" என்றார்** *(யோனா 4:4)*

"வலது கைக்கும் இடது கைக்கும் வித்தியாசம் அறியாத இலட்சத்து இருபதினாயிரம் பேருக்கு அதிகமான மனஷரும்,

அநேக மிருக ஜீவன்களும் இருக்கிற மகா நகரமாகிய நினிவேக்காக நான் பரிதபியாமலிருப்பேனோ"என்றார் (யோனா 4:11)

ஆம் அன்பானவர்களே நம்முடைய விண்ணப்பம் கேட்கப்படாதது போல சத்துரு தடைகளைக் கொண்டு வந்திருந்தால், கர்த்தர் நிச்சயம் அந்தத் தடைகளை அகற்றி ஜெயத்தைக் கொடுப்பார். ஆனால் ஒருவேளை நம்முடைய தகாத நோக்கம் நம்முடைய விண்ணப்பம் கேட்கப்பட தடையாய் நிற்குமானால், முறுமுறுக்காமல் அப்படிப்பட்ட தடையை நாம்தான் அகற்ற வேண்டும்.

3 ஆவிக்குரிய காரியங்களில் தடைகள்

அநேக வேளைகளில் சத்துரு நம்முடைய ஆவிக்குரிய காரியங்களில் அநேகத் தடைகளைக் கொண்டு வருகிறான். ஆனால் நாம் சேவிக்கும் தேவன் பெரியவராயிருந்து தடைகள் எல்லாவற்றையும் களைந்து போடுகிறார்.

தானியேல் தினமும் மூன்று வேளை தன் தேவனை நோக்கி ஜெபிக்கிற மனுஷனாய் காணப்பட்டான். ஆனால் திடீரென்று ஒரு ஆணை பிறப்பிக்கப்படுகிறது. முப்பது நாள் வரைக்கும் ஒருவரும் இராஜாவைத் தவிர வேறு எந்த தேவனையாகிலும் மனுஷனையாகிலும் நோக்கி யாதொரு காரியத்தைக் குறித்தும் விண்ணப்பம் பண்ணக் கூடாது; அவ்வாறு செய்தால் அந்த நபரை சிங்கக் கெபியில் போட வேண்டும் என்பதாகும்.

தானியேல் எப்பொழுதும் போல தேவனை நோக்கி ஜெபிப்பதற்கு தடை வந்தது. ஆனால் தானியேலோ அந்தத் தடையைக் கண்டு பயப்படவுமில்லை. பின் வாங்கவுமில்லை. வேதம் சொல்லுகிறது. **"தானியேலோவென்றால் அந்தப் பத்திரத்துக்குக் கையெழுத்து வைக்கப்பட்டதென்று அறிந்த போதிலும் தன் வீட்டுக்குள்ளே போய் தன்மேல் அறையிலே எருசலேமுக்கு நேராக பலகனிகள் திறந்திருக்க அங்கே தான் முன் செய்து வந்தபடியே, தினம் மூன்று வேளையும் தன்**

தேவனுக்கு முன்பாக முழங்காற்படியிட்டு ஜெபம் பண்ணி, ஸ்தோத்திரம் செலுத்தினான்" *(தானியேல் 6:10)* அது நிமித்தம் அவன் சிங்கக் கெபியில் போடப்படுகிறான். ஆனால் கர்த்தர் பெரிய அற்புதத்தைச் செய்கிறார். ஆம் கர்த்தர் தம் தூதனை அனுப்பி சிங்கங்களின் வாயைக் கட்டிப் போட்டு அவைகளால் தானியேலுக்கு ஒரு சேதமும் வராமல் பாதுகாக்கிறார். தானியேலை சிங்கங்களின் கெபியில் போடச் சொன்ன இராஜா சொல்லுகிறான் என் ராஜ்யத்தின் ஆளுகைக்குள் எங்குமுள்ளவர்கள் யாவரும் தானியேலின் தேவனுக்கு முன்பாக நடுங்கி பயப்பட வேண்டுமென்று, என்னாலே தீர்மானம் பண்ணப்பட்டிருக்கிறது. **"அவர் ஜீவனுள்ள தேவன் அவர் என்றென்றைக்கும் நிலைத்திருக்கிறவர் அவருடைய ராஜ்யம் அழியாதது; அவருடைய கர்த்தத்துவம் முடிவு பரியந்தம் நிற்கும்"** *(தானியேல் 6:26)* ஆம் தடையை உண்டு பண்ணின இராஜாவே அந்தத் தடையை அகற்றும்படி கர்த்தர் கிரியை செய்தார்.

பாபிலோன் ராஜாவாகிய நேபுகாத்நேச்சாரின் காலத்தில், கர்த்தரின் ஆலயம் நிர்மூலமாக்கப்பட்டு, ஜனங்கள் பாபிலோனுக்குக் கொண்டு . போகப்படுகிறார்கள். ஆனால் ராஜாவாகிய கோரேஸின் காலத்திலே தேவனுடைய ஆலயம் திரும்பக் கட்டப்பட கட்டளையிடப்படுகிறது. கர்த்தருடைய நாமம் மகிமைப்படும்படியாய் ஆலயம் கட்டும் வேலை எஸ்ராவின் தலைமையில் ஆரம்பிக்கப்படுகிறது. ஆனால் அந்தக் காரியத்தை செய்து முடிக்க முடியாதபடிக்கும் சத்துரு தடைகளைக் கொண்டு வந்து போடுகிறான். யூதாவுக்கும் பென்யமீனுக்கும் இருந்த சத்துருக்கள் அவர்கள் ஆலயத்தைக் கட்டக் கூடாதபடிக்கு, அவர்களை சங்கடப்படுத்தினர். வேதம் சொல்லுகிறது. **"அப்பொழுது எருசலேமிலுள்ள தேவனுடைய ஆலயத்தின் வேலை தடைப்பட்டு, பெர்சியாவின் ராஜாவாகிய தரியு ராஜ்ய பாரம் பண்ணின இரண்டாம் வருஷ மட்டும் நிறுத்தப்பட்டிருந்தது"** என்று *(எஸ்ரா 4:24).*

ஆனால் கர்த்தர் அந்தத் தடை அப்படியே நீடித்திருக்க அனுமதிக்கவில்லை. தரியு ராஜாவின் இருதயத்தை அவர்கள் பட்சத்தில் சார்ந்திருக்கச் செய்தார். தேவனுடைய ஆலயத்தை யூதரின் மூப்பர் கட்டும் விஷயத்தில் நீங்கள் அவர்களுக்குச்

செய்யத் தக்கதாய் நம்மால் உண்டான கட்டளை என்னவென்றால் அந்த மனிதருக்கு தடை உண்டாகாதபடிக்கு நதிக்கு அப்புறத்தில் வாங்கப்படும் பகுதியாகிய ராஜாவின் திரவியத்திலே அவர்களுக்கு தாமதமில்லாமல் செல்லும் செலவு கொடுக்க வேண்டும் என்று தரியு ராஜா கட்டளை பிறப்பித்து தடையை அகற்றுகிறான்.

வேதம் சொல்லுகிறது, **"அவர்கள் இஸ்ரேலின் தேவனுடைய கட்டளைப் படியேயம், கோரேஸ் தரியு பெர்சியாவின் ராஜாவாகிய அர்தசஷ்டா என்பவர்களுடைய கட்டளைப் படியேயும் அதைக் கட்டி முடித்தார்கள்"** என்று (எஸ்ரா 6 : 14)

அநேக வேளைகளில் தம்முடைய ஆவிக்குறிய ஜீவியத்தில் வளர்ச்சியடைய வேண்டும் என்ற ஆவலோடு நாம் அடி எடுத்து வைக்கும் போது, சத்துரு தடைகளை உண்டு பண்ணுகிறான். நான் உபவாசித்து ஜெபித்து அநேக நாட்கள் ஆகிறது. நாளைக்கு நிச்சயமாய் உபவாசத்தோடு கர்த்தர் சமூகத்தில் அமர்ந்து ஜெபிப்பேன் என்று தீர்மானம் எடுத்திருப்போம். ஆனால் அன்று விடியற்காலையிலே என்றும் வராத உறவினர் ஒருவர் நான் உங்கள் வீட்டில் இரண்டு நாட்கள் தங்க வந்துள்ளேன் என்று குடும்பமாய் பெட்டிப் படுக்கையோடு உள்ளே நுழைவார். தீர்மானம் எடுத்தது, எடுத்ததோடு நின்றுபோகிறது.

என் வாழ்க்கையில் நான் அநேக வேளைகளில் கர்த்தருக்கென்று இதை நாம் செய்ய வேண்டுமென்று தீர்மானம் எடுக்கும் போது, அதைச்செய்ய முடியாதபடிக்கு சத்துரு தடைகளைக் கொண்டு வந்திருக்கிறான். ஆனால் சர்வவல்லவரான நம் ஆண்டவர் அந்தத் தடைகள் அப்படியே நீடித்திருக்க அனுமதிப்பதில்லை. கர்த்தர் அந்தத் தடைகளை அகற்ற சித்தமுள்ளவராயிருக்கிறார். எப்படிப்பட்ட தடைகளையும் அகற்ற அவர் வல்லமையுள்ள தேவனாயிருக்கிறார்.

2002ஆம் வருடம், புதுவருட ஆராதனையின் போது, கர்த்தருக்கென்று நான் இதைச் செய்வேன் என்று தீர்மானம் எடுக்க விரும்புகிறவர்கள், அந்தத் தீர்மானத்தை எடுங்கள் என்று போதகர் சொன்னபோது எல்லோரும் ஆவியில் நிரம்பி ஜெபித்துக் கொண்டிருந்தோம். பரிசுத்த ஆவியானவர் எனக்குள் ஒரு உணர்த்துதலைக் கொண்டு வந்தார். அந்தப்

பழைய நாள், ஆண்டவரே இந்த வருடம் உம்முடைய நாமம் மகிமைப்படும்படியாய் மூன்றாவது புத்தகத்தை எழுதி பிரதிஷ்டை செய்ய முக்கியத்துவம் கொடுப்பேன். அதற்கான தீர்மானத்தை இன்று எடுக்கிறேன் என்று சொல்லி ஜெபித்தேன். விடியற்காலை நான்கு மணியளவில் வீடு திரும்பினோம். சிறிது நேரம் உறங்கிவிட்டு கண் விழித்தபோது, என் தொண்டைப் பகுதியில் ஒரு வலி ஏற்பட்டது. அது அதிகமாகி என் இடது பக்க மார்பிற்குப் பரவியது. இரவு கண் விழித்து ஜெபித்தால் ஏதோ சரீரபெலவீனம் என்று நான் மிதமாய் இருந்துவிட்டேன். அதற்கான சில மருந்துகளை எடுத்தேன். ஆனால் வலி குறையவில்லை. இப்படியாய் நான் ஒருமாத காலம் மிகவும் அவதிப்பட்டேன். எதனால் இந்த வலி ஏற்படுகிறது என்று கண்டுபிடிக்க முடியவில்லை. வலியின் வேதனையில் புத்தகம் எழுதுவதைப் பற்றிய எண்ணமே என்னில் இல்லாதிருந்தது. அதைப் பற்றி நினைக்கவும் என்னால் இயலவில்லை. கடைசியாக Echo Cardiogram செய்து Pericardial effusion என்று சொல்லி எனக்கு வைத்தியம் செய்தார்கள். கர்த்தர் கிருபையால் சில நாட்களில் நான் முற்றிலும் சுகம் அடைந்தேன். எவ்வளவு வாஞ்சையோடு, உற்சாகத்தோடு நான் கர்த்தருக்காய் தீர்மானம் எடுத்தேன். ஆனால் அந்தத் தீர்மானத்தை நிறைவேற்ற முடியாதபடிக்கு சத்துரு தடையை உண்டு பண்ணினான்.

ஆனால் சர்வ வல்ல தேவன் என்னை நோயின் கட்டிலிருந்து விடுவித்தார். தீர்மானம் எடுத்த அதே வருடமே மூன்றாம் புத்தகமாகிய, **'முடிவு பரியந்தம் நிலைத்திருங்கள்'** என்ற புத்தகத்தை எழுதி கர்த்தருடைய நாமம் மகிமைக்கென்று அதை பிரதிஷ்டை பண்ண கிருபை தந்தார். கர்த்தருக்கு ஸ்தோத்திரம்.

கர்த்தருக்கென்று ஊழியம் செய்ய வேண்டும் என்ற வாஞ்சை வரும் போது, அந்த வாஞ்சையை செயல்படுத்த முடியாதபடிக்கு சத்துரு தடைகளைக் கொண்டு வருகிறான்.

அநேக வேளைகளில் உங்கள் குடும்ப சூழ்நிலைகள், வேலை ஸ்தலத்தில் உங்கள் பொறுப்புகள், ஒரு சில நிர்ப்பந்தங்கள், சரீர பெலவீனங்கள் தேவ ஊழியத்தைச் செய்ய தடையாய்

நிற்கிறது. ஆனால் கர்த்தருக்குப் பிரியமான அவருடைய ஊழியத்தைச் செய்ய நீங்கள் தீர்மானிக்கும்போது, எப்படிப்பட்ட தடையையும் கர்த்தர் அகற்றி உங்களை எடுத்துப் பிரயோசனப் படுத்த வல்லமையுள்ளவராயிருக்கிறார்.

ஒரு சமயம் கர்த்தருடைய வார்த்தையைப் பிரசங்கிக்க ஒரு கூட்டத்திற்கு அழைக்கப்பட்டிருந்தேன். குடும்ப காரியங்களை ஒழுங்குப்படுத்தி, நான் ஆயத்தமாகி செல்ல நேரம் சரியாய் இருந்தது. பாதி தூரம் சென்றிருப்பேன். என் மகளிடமிருந்து ஒரு போன் வந்தது. அம்மா என்னால் கதவைத் திறக்க முடியவில்லை, உள்ளே பூட்டியபடியே இருக்கிறேன். சாவி வேலை செய்யவில்லை, உடனே வந்து சரிசெய்து விட்டுப் போங்கள் என்றாள். அவளோடு இருந்த வேலைக்கார அம்மாவும், என்னாலும் ஒன்றும் செய்ய முடியவில்லை என்று சொல்லிவிட்டார்கள். எனக்கு என்ன செய்வதென்று தெரியவில்லை. நேரம் கடந்து கொண்டிருந்தது . பிரசங்கத்திற்கு நேரத்திற்குச் செல்ல வேண்டுமே என்ற ஆவல் ஒரு புறம், இவர்களை எப்படி அப்படியே விட்டுவிட்டுச் செல்வது என்ற கவலை மற்றொரு புறம். காரை வீட்டிற்கு திருப்பச் சொன்னேன். என்னை நேரத்திற்கு பிரசங்கத்திற்கு செல்ல விடாதபடி சத்துரு தடையைக் கொண்டு வந்திருக்கிறான் என்பது மாத்திரம் தெளிவாய் இருந்தது. காரிலிருந்தபடியே தடையை இயேசுவின் வல்லமையுள்ள நாமத்தினால் கடிந்து அப்புறப்படுத்தி ஜெபித்தேன். சிறிது நேரத்தில் வீட்டிற்குச் சென்று, ஜன்னல் வழியாய் சாவியை வாங்கி, ஆண்டவரே கதவு உடனே திறக்க வேண்டும் என்ற ஜெபத்தோடு, சாவியைப் பொருத்தி திருப்பினேன். நொடிப்பொழுதில் 'கிளிக்' என்ற சத்தத்தோடு பூட்டு திறந்து கொண்டது. என்ன பிரச்சனையோ, எவ்வளவு நேரம் ஆகுமோ, எப்படித் திறப்போமோ என்றெல்லாம் கலக்கத்தோடு இருந்த என் இதயத்தின் ஆழத்திலிருந்து தேவனுக்கு நான் நன்றி செலுத்தினேன்.

ஆம் சத்துரு கொண்டு வந்த தடையை கர்த்தர் நொடிப்பொழுதில் அகற்றி அவருடைய ஊழியத்தை செய்ய நேரத்திற்கு என்னை கூட்டிச் சென்றார். அந்தக் கூட்டத்திற்கு வந்திருந்தவர்களில் அநேகர் தேவனை அறியாத ஜனங்களாய் இருந்தார்கள். அவர்களுக்கு சத்தியத்தை அறிவிக்க கர்த்தர்

எனக்கு ஒரு அருமையான வாய்ப்பைத் தந்தார். சத்துரு அதைத் தடை செய்ய முயற்சித்தான். என்னை சோர்வடையச் செய்யப் பார்த்தான். ஆனால் சர்வ வல்ல கர்த்தரோ தடைகளை அகற்றுகிறவராய் எனக்கு முன் சென்று எல்லாத் தடைகளையும் அகற்றிப் போட்டார்.

ஒரு சில நாட்களுக்கு முன்பு என்னுடைய ஊழியத்தில் ஒரு சிலர் என்னைக் குறித்து தேவையில்லாது, விமர்சித்து, வீண் வதந்திகளை பரப்ப முற்பட்டபோது, நான் மிகவும் சோர்ந்து போனேன். அந்த சோர்வு "நான் உண்டு என் ஆண்டவர் உண்டு என்று இருந்து விட வேண்டும், எந்த ஊழியத்திற்கும் போகக் கூடாது" என்று என்னைப் பின்வாங்கத் தூண்டியது. சத்துரு அதைச் சாதகமாக்கிக் கொண்டு, ஒரு வக்கீலாக அல்லது நீதிபதியாக நல்ல ஒரு பதவியில் புகழோடு இருந்திருக்கலாம். அதை விட்டு உன்னை இப்படி ஆக்கிக் கொண்டாயே, இதெல்லாம் உனக்குத் தேவையா என்றான். ஆனால் ஒருசில நிமிடங்களில் அப்படிப்பட்ட எண்ணங்களையெல்லாம் உதறித் தள்ளிவிட்டேன். ஆண்டவரிடம் எல்லாவற்றையும் ஒப்படைத்து என் சோர்வு நீங்க ஜெபித்தேன். கர்த்தர் எல்லாத் தடைகளையும் நீக்கினார். அவருக்கென்று தொடர்ந்து ஊழியம் செய்யப் புதுப்புது வாசல்களைத் திறந்து கொடுத்து என்னை உற்சாகப்படுத்தினார்.

ஆம் அன்பானவர்களே தேவனுக்கு ஊழியம் செய்ய வேண்டும் என்ற உண்மையான உள்ளான வாஞ்சை நமக்குள் இருக்குமானால் சத்துருவின் எந்த வல்லமையாலும், அதைத் தடை செய்ய முடியாது. உங்களுடைய அப்படிப்பட்ட வாஞ்சை தேவனுக்குப் பிரியமான ஒன்றாய் இருப்பதால் கர்த்தர் அதற்கு எதிராய் சத்துரு கொண்டு வரும் எல்லாத் தடைகளையும் அகற்றி உங்களை உற்சாகப்படுத்தி, வல்லமையாய் எடுத்து உபயோகிப்பார் என்பதில் சந்தேகமேயில்லை.

ஆவிக்குரிய ஆசீர்வாதங்களிலே முக்கியமான ஒன்று தேவன் கொடுக்கும் சமாதானம். இன்று உலகில் சமாதானம் இல்லாமல் தவிக்கும் மனிதர்கள் அதிகரித்து வருகின்றனர். சத்துரு அநேகருடைய சமாதானத்தை தடைசெய்து வைத்திருக்கிறான். ஆனால் கர்த்தர் தம்முடைய ஜனத்திற்கு

எல்லாத் தடைகளையும் அகற்றி சமாதானம் அருளுகிறவராய் இருக்கிறார். வேதம் சொல்லுகிறது, **"கர்த்தர் தமது ஜனத்திற்கு சமாதானம் அருளி ஆசீர்வதிக்கிறார்"** என்று (சங்கீதம் 29:11).

இன்றைக்கு அநேகர் புகழின் உச்சியில் நல்ல பண வசதியோடு இருந்தாலும் அவர்களுக்குள் சமாதானம் தடைப்பட்டுள்ளது. ஆகவே தான் பிரபலமான சினிமா நடிகர்கள், நடிகைகள், பெரிய செல்வந்தர்கள் தற்கொலை செய்து கொண்டதாய் செய்தித் தாளில் வாசிக்கிறோம். ஆனால் ஒருவன் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவை தன் தேவனாகவும் இரட்சகராகவும் தன் இருதயத்தில் ஏற்றுக் கொண்டு விசுவாசிக்கும்போது, கர்த்தர் தடைகளை அகற்றி சமாதானம் அருளி ஆசீர்வதிக்கிறார். ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து தம் குற்றமற்ற இரத்தத்தை சிலுவையில் சிந்தியதால் நமக்கு பாவ மன்னிப்பு உண்டாயிற்று. இரட்சிப்பைப் பெற்றோம், வியாதியிலிருந்தும் சாபத்திலிருந்தும் விடுதலைப் பெற்றோம். அது மாத்திரமல்ல, சிலுவையில் சிந்திய இரத்தத்தினால் அவர் நமக்கு சமாதானத்தையும் உண்டாக்கி வைத்தார். வேதம் சொல்லுகிறது. **"இயேசு கிறிஸ்து சிலுவையில் சிந்திய இரத்தத்தினால் சமாதானத்தை உண்டாக்கினார்"** என்று (கொலோசெயர் 1:20)

இன்றைக்கு உலக ஜனங்கள் தடைப்பட்டிருக்கும் சமாதானத்தைத் தேடி எங்கெல்லாமோ அலைகிறார்கள். என்னவெல்லாமோ செய்கிறார்கள். சிலர் குடிப்பழக்கத்திற்கும் போதை மருந்துக்கும் அடிமை ஆகிறார்கள். சிலர் சினிமா தங்களுக்கு சமாதானத்தை கொண்டு வரும்". என்று மணிக்கணக்கில் அதன் முன்பாக நேரத்தைச் செலவிட்டு, இருக்கும் சமாதானத்தையும் இழந்து விடுகிறார்கள். மருந்துகளாலும் மருத்துவர்களாலும், சமாதானத்தைப் பெற்றுக் கொள்ளலாம் என்று மனோதத்துவ மருத்துவர்களிடம் எக்கச்சக்க கூட்டம் காணப்படுகிறது. ஆனால் இயேசு கிறிஸ்து ஒருவரே நமக்கு சமாதானத்தைத் தரும் சமாதானப் பிரபுவாய் இருக்கிறார். அல்லேலூயா ஆமென்.

ஆண்டவர் இயேசு கிறிஸ்து சொல்லுகிறார். **"சமாதானத்தை உங்களுக்கு வைத்துப் போகிறேன். உலகம் கொடுக்கிற பிரகாரம்**

உங்களுக்கு கொடுப்பதில்லை. உங்கள் இருதயம் கலங்காமலும் பயப்படாமலும் இருப்பதாக" என்று *(யோவான் 14:27).*

ஆம் உலகம் கொடுக்கும் சமாதானம் தொடர்ந்து இருப்பதில்லை. அது அடிக்கடித் தடைப்பட்டுப் போகிறது. கர்த்தர் கொடுக்கும் சமாதானம் ஆழ்கடலில் காணப்படும் அமைதி போன்றது. கடலின் மேற்புறத்தில் எப்படிப்பட்ட கொந்தளிப்பு காணப்பட்டாலும் கடலின் ஆழத்தில், ஒரு ஆழ்ந்த அமைதி இருக்குமாம். கர்த்தர் அப்படிப்பட்ட சமாதானத்தை நமக்குத் தருகிறவராய் இருக்கிறார். வேதம் சொல்லுகிறது, **"ஒரு ஜனத்துக்கானாலும் ஒரு மனுஷனுக்கானாலும் அவர் சமாதானத்தை அருளினால் யார் கலங்கப் பண்ணுவான்"** *(யோபு 34:30).*

யோபுவின் வாழ்க்கையில் சத்துரு ஒன்றன்பின் ஒன்றாக அநேக வேதனைகளைக் கொண்டு வந்தான். ஆனால் கர்த்தர் அவனுக்குள் கொடுத்திருந்த சமாதானம் தடைபடவில்லை. **"ஆகவேதான், இவை எல்லாவற்றிலும் யோபு பாவஞ் செய்யவுமில்லை தேனைப்பற்றி குறை சொல்லவும் இல்லை"** ***(யோபு 1:22)***

"பவுலும் சீலாவும் சுவிசேஷத்தைப் பிரசங்கித்த காரணத்திற்காக சிறையில் அடைக்கப்பட்டார்கள். அந்த சூழ்நிலையிலும் அவர்கள் சமாதானம் தடைபடவில்லை. ஆகவேதான் அவர்கள் நடு இராத்திரியிலே தேவனைத் துதித்து உரத்த சத்தமாக பாடினார்கள்" *(அப்போஸ்தலர் 16.25)*

அவர்களுக்குள் தேவன் அருளிய சமாதானம் இல்லாதிருந்தால் நிச்சயம் அவர்களிடமிருந்து துதியின் சத்தம் எழும்பியிருக்காது.

ஆம் அன்பானவர்களே யாராலும் எந்த சூழ்நிலையாலும் தடை பண்ண முடியாத சமாதானத்தை உங்களுக்குத் தர நம் அருமை ஆண்டவர் சித்தமுள்ளவராய் இருக்கிறார். **"மலைகள் விலகினாலும் பர்வதங்கள் நிலை பெயர்ந்தாலும், என் கிருபை உன்னை விட்டு விலகாமலும், என் சமாதானத்தின் உடன் படிக்கை நிலை பெயராமலும் இருக்கும்"** என்றார் (ஏசாயா 54:10)

அப்படியே நம்முடைய வாழ்க்கையிலும் அநேக பிரச்சனைகளும் போராட்டங்களும் நம்மைச்சுற்றி கொந்தளித்துக் கொண்டிருந்தாலும் நம் இருதயத்தின் ஆழத்தில் விசுவாசத்தினால் உண்டான சமாதானம் இருக்கும் அதனை எந்த மனிதராலும் எந்த சத்துருவின் வல்லமையாலும் தடை செய்ய முடியாது.

IV

தடைகளை நீக்கும் தேவன்

1. நமக்கு முன்பாய் நடக்கிறார்

எங்கள் வீட்டில் ஒரு அழகான மீன் தொட்டி ஒன்று வைத்திருந்தோம். அதிலே பல வர்ணங்களில் பலவிதமான மீன்கள் தண்ணீரிலே நீந்திக் கொண்டிருக்கும். எனக்கு நேரம் கிடைக்கும்போதெல்லாம் அதன் முன்பு அமைதியாய் உட்கார்ந்து, நீந்தித் திரியும் அந்த அழகான மீன்களை பார்த்துக் கொண்டிருப்பேன். அந்த மீன்களால் சுதந்திரமாய் நீந்தித் திரிய முடிவதில்லை. அவைகள் துள்ளித் திரியும்போது, கற்கள், சிப்பிகள், செயற்கைச் செடிகள் இப்படி

அநேகத் தடைகள் குறுக்கிடுவதை கவனிப்பேன். ஆனால் அந்த மீன்களோ நாம் ஏற்படுத்திய தடைகளைக் கண்டு சோர்ந்து போவதில்லை. தொட்டியின் அடிப்பாகத்தில்போய் சோர்ந்து உட்காருவதுமில்லை. இப்புறமும், அப்புறமுமாய் வளைந்து நெளிந்து உற்சாகமாக நீந்திக் கொண்டே இருக்கும்.

ஆம் அன்பானவர்களே நாமும்கூட வாழ்க்கை கடலில் நீந்தும் மீன்களாய் இருக்கிறோம். அவ்வாறு நாம் நீந்தும்போது, அநேகத் தடைகள் வந்து நம்மைச் சோர்வடையச் செய்கிறது. அலைமோதும் கடலில் தடுமாறும் கப்பலைப்போல காணப்படுகிறோம். ஆனால் அந்தக் கப்பலின் சுக்கான் கர்த்தரின் கரத்தில் இருக்கும்போது, நாம் கலங்கவேண்டிய அவசியமில்லை. ஏனென்றால் கர்த்தர் நமக்கு முன்பாய் சென்று தடைகளை அகற்றி நமக்கு ஜெயத்தைக் கொடுக்கும் தேவனாய்க் காணப்படுகிறார்.

ஆள் நடமாட்டம் இல்லாத ஒரு சாலையிலே, கையில் விலையுயர்ந்த பொருளோடு நடந்து கொண்டிருக்கிறோம். ஆனால் தனியாய் பேய்க் கொண்டிருக்கிறோமே திருடன் நம்மை அடித்து விட்டு அந்தப் பொருளை பிடுங்கிக் கொண்டு போவானோ என்ற பயம் துளியும் இல்லை. காரணம் நமக்கு முன்பாய் நாம் வளர்க்கும் காவல் நாய் ஒன்று நடந்து போகிறது. பாருங்கள் நமக்கு முன்பாய் செல்லும் ஒரு காவல் நாய் மீது நாம் எவ்வளவு நம்பிக்கை வைத்துள்ளோம் என்று.

சிறு பிள்ளைகள் தங்கள் தாய்மாரோடு நடந்து செல்வதை கவனித்திருக்கிறீர்களா? பிள்ளையின் தாய் ஒரு அடி முன்னால் நடப்பாள், அந்தப் பிள்ளை தன் தாயின் கரத்தை கெட்டியாய் பிடித்துக் கொண்டு பின்னே நடப்பான். தன் தாயின் மீது உள்ள நம்பிக்கையினால், அந்தப் பிள்ளை ஒன்றைக் குறித்தும் கவலைப்படாமல், சுற்றிச் சுற்றி வேடிக்கை பார்த்துக் கொண்டு சந்தோஷமாய் நடந்து போகும்.

நம் தேவன் சர்வ வல்லமை உள்ளவர்; அவர் நம்மீது அன்புள்ளவராய் இருக்கிறார்; நமக்கு ஆலோசனை தருபவராய்க் காணப்படுகிறார்; நமக்காய் எல்லாவற்றையும் செய்து முடிப்பவராய் இருக்கிறார். அப்படிப்பட்ட தேவன் சொல்லுகிறார், நான் உனக்கு முன்பாக நடந்து செல்லுகிறேன் என்று. ஆம்

அன்பானவர்களே, தேவன் நமக்கு முன்பாக நடந்து செல்கிறார் என்றால் அது எவ்வளவு ஆறுதலான காரியம்.

சில சமயங்களில் கண் தெரியாத குருடர் ஒருவர் கண் தெரிந்த மனிதனின் கரத்தைப் பிடித்துக் கொண்டு சாலையைக் கடப்பதைப் பார்த்திருப்போம். அந்த மனிதர் அந்தக் குருடரை பத்திரமாய் சாலையைக் கடக்க உதவி செய்வார்.

வேதம் சொல்லுகிறது, **அவருடைய தாசனையல்லாமல் குருடன் யார் என்று (ஏசாயா *42:19*).** ஆம் அன்பானவர்களே கர்த்தருடைய கரத்தை நாம் ஒரு குருடனைப்போல் பற்றிக் கொள்வோமாக. கர்த்தர் சொல்லுகிறார், **"குருடரை, அவர்கள் அறியாத வழியிலே நடத்தி அவர்களுக்குத் தெரியாத பாதைகளில் அவர்களை அழைத்துக்கொண்டு வந்து அவர்களுக்கு முன்பாக இருளை வெளிச்சமும், கோணலை செவ்வையுமாக்குவேன். இந்தக் காரியங்களை நான் அவர்களுக்குச் செய்து அவர்களை கைவிடாதிருப்பேன்"** *(ஏசையா 42:16).*

ஐயோ நான் என்ன செய்வேன் எனக்கு பாதை தெரியவில்லையே, எல்லாம் இருளாய் இருக்கிறதே யார் எனக்கு பாதை காட்டி கூட்டிச் செல்வார் என்று நாம் அங்கலாய்க்க அவசியமில்லை. இதோ நம் ஆண்டவர் நாம் அறியாத ஒரு புதிய பாதையில் நம்மைக் கூட்டிச் செல்கிறார். அந்தப் பாதை நமக்குத் தெரியாத ஒன்று, நமக்கு பழக்கமில்லாத ஒன்று. ஆனால் **கர்த்தர்** நமக்கு முன்பாக சென்று நம்மை நடத்துகிறார். அவர் இருளில் இருந்து வெளிச்சத்தைப் பிரகாசிப்பிக்கிற தேவன், அந்தப் பாதையில் காணப்படும் இருளை நீக்கி வெளிச்சத்தைக் கொண்டு வருகிறார். கோணலாய் காணும் பாதையைச் செவ்வைப்படுத்தி நம்மை கைவிடாதிருக்கிறார்.



2 தடைகளை அகற்றுகிறார்

நமக்கு முன்பாய் நடக்கும் சர்வ வல்ல தேவன் நமக்கு முன்பாய் நடக்கிறவராய் மாத்திரம் இல்லாமல் தடைகள் அனைத்தையும் அகற்றுகிறவராய்க் காணப்படுகிறார்.

நாம் ஒரு பாதையில் சென்று கொண்டிருக்கும்போது, சாலையை முற்றிலுமாய் மறைத்து ஒரு பெரிய மரக்கிளை முறிந்து விழுந்து கிடக்கிறது. அந்தப் பக்கமாய் செல்ல நமக்கு வேறு பாதை தெரியவில்லை.

நம்மால் அந்த மரக்கிளையை ஒரு அடிகூட நகர்த்த முடியாது. அவசரமாய் செல்ல வேண்டிய சூழ்நிலை. ஆனால் தொடர்ந்து செல்லமுடியாதபடிக்கு மரக்கிளை தடை செய்கிறது. இத்தகைய சூழ்நிலையில்அங்கு ஒரு சிலர் சேர்ந்து அந்தத் தடையை அகற்றி உதவி செய்யும்போது, எவ்வளவு ஒரு பெரிய விடுதலை.

சர்வ வல்ல தேவன் சொல்லுகிறார் நான் உனக்கு முன்பாய் சென்று தடைகளை அகற்றுவேன் என்று. தடை காணப்படும்போது அதைத் தற்காலிகமாய் நீக்குவேன் என்று சொல்லாமல் அந்தத் தடையை முற்றிலுமாய், நிரந்தரமாய் நீக்குவேன் என்று சொல்லுகிறார்.

ஆகவே அன்பானவர்களே உங்களுடைய வாழ்க்கைப் பாதையிலே சத்துரு எத்தகையத் தடைகளைக் கொண்டு வந்து போட்டிருந்தாலும் சரி, அது பாறையைப் போன்ற பெரிய தடையோ, அல்லது கல்லைப்போன்ற சிறு தடையோ, நீங்கள் கலங்க வேண்டிய அவசியமே இல்லை. சர்வ வல்ல தேவனால் கூடாதது ஒன்றும் இல்லை. **கர்த்தர்** உங்களுக்காய் அந்தத் தடைகளை நீக்க வல்லவராயிருக்கிறார். ஆகவே, தடைகளைக் கண்டு சோர்ந்து போகாதிருங்கள். பெரிய பாறையாய் இருந்தால் உடைத்து நொறுக்குவார், சிறு கல்லாய் இருந்தால் பொறுக்கிப் போடுவார். தண்ணீராய் இருந்தால் உலர்ந்த தரையாய் மாற்றுவார். அதுவே சிங்கங்களாய் இருந்தால் அவைகளின் வாய்களைக் கட்டுவார். அல்லேலூயா ஆமென்.

3 வாசல் வழியாய் உட்பிரவேசிக்கச் செய்கிறார்

தேவன் நமக்கு முன்பாய் நடந்து நம்மை நடத்திச் செல்லும்போது, நமக்கு முன் காணப்படும் தடைகளை அகற்றி, நம்மை வாசல் வழியாய் உட்பிரவேசிக்கச் செய்கிறார். ஒரு வீட்டின் வாசல் வழியாய் ஒருவன் நுழைந்தால் ஒன்று அவன் அந்த வீட்டிற்கு சொந்தக்காரனாய் இருக்க வேண்டும் அல்லது அந்த வீட்டுச் சொந்தக்காரனுக்கு வேண்டிய நபராய் இருக்க வேண்டும். அப்படிப்பட்டவர்கள் கனத்திற்குறியவர்களாய் வாசல் வழியாய் வீட்டிற்குள் நுழைகிறார்கள். ஆனால் ஒருவன் திருடனாகவோ, கொள்ளைக்காரனாகவோ இருந்தால் அவன் வீட்டின் வாசல் வழியாய் வீட்டிற்குள் நுழையமாட்டான். அப்படிப்பட்டவன் கனத்திற்குறியவன் அல்ல, அவன் உள்ளே நுழையும் நோக்கம் சரியானது அல்ல.

ஆண்டவராகிய **இயேசு கிறிஸ்து** சொல்கிறார். **நானே வாசல், என் வழியாய் ஒருவன் உட்பிரவேசித்தால், அவன் இரட்சிக்கப்படுவான். அவன் உள்ளும் புறம்பும் சென்று மேய்ச்சலைக் கண்டடைவான்** (யோவான் 10:9) ஒருவன் ஆண்டவர் **இயேசு கிறிஸ்து**வை தேவனாகவும் சொந்த இரட்சகராகவும் ஏற்றுக் கொள்ளும்போது, இரட்சிக்கப்படுவான்.

நித்திய ஜீவனைப் பெற்றுக் கொள்கிறான். வேதம் சொல்லுகிறது, குமாரனிடத்தில் விசுவாசமாய் இருக்கிறவன் நித்திய ஜீவனை உடையவனாய் இருக்கிறான். அவரை விசுவாசியாதவனோ ஜீவனைக் காண்பதில்லை, தேவனுடைய கோபம் அவன்மேல் நிலை நிற்கும் (யோவான் 3:36).

மனுஷனுடைய பாவம், தேவனுக்கும், அவனுக்கும் நடுவே இரும்புத்திரை போன்ற தடையாய் இருந்தது. மனிதனால் அந்தத் தடையை தகர்த்தெரிய முடியவில்லை. ஆனால் ஆண்டவராகிய **இயேசு கிறிஸ்து** தடையாய் நின்ற திரையைக் கிழித்துப் போட்டார். வேதம் சொல்கிறது, **"நமக்கு எதிரிடையாகவும் கட்டளைகளால் நமக்கு விரோதமாகவும் இருந்த கையெழுத்தைக் குலைத்து, அதை நடுவிலிராதபடிக்கு எடுத்து சிலுவையின் மேல் ஆணியடித்து, துரைத்தனங்களையும் அதிகாரங்களையும் உரிந்து கொண்டு வெளியரங்கமான கோலமாக்கி அவைகளின் மேல் சிலுவையிலே வெற்றி சிறந்தார்"** *(கொலோசேயர் 2:14,15).*

மனுஷன் தன்னுடைய பாவத்தினால் சாபத்திற்குள்ளானான். மரணம் அவனை ஆட்கொண்டது. நியாயப் பிரமாணத்தின்படி நாம் நீதிமான்களாக்கப்படவில்லை. நியாயப் பிரமாணம் நம்மை குற்றவாளியாக்கிற்று. ஆனால் ஆண்டவராகிய **இயேசு கிறிஸ்து,** தன்னுடைய பரிசுத்த இரத்தத்தை சிலுவையில் சிந்தி, தம்முடைய ஜீவனைக் கொடுத்து நமக்கு விரோதமாய் இருந்த கட்டளைக்கு நம்மை நீங்கலாக்கி மீட்டுக் கொண்டார். வேதம் சொல்கிறது, **"நியாயப் பிரமாணத்தின் கிரியைகளினாலே எந்த மனுஷனும் நீதிமானாக்கப்படுவதில்லையே"** *(கலாத்தியர் 2:16).*

"கிறிஸ்து நமக்காய் சாபமாகி நியாயப் பிரமாணத்தின் சாபத்திற்கு நம்மை நீங்கலாக்கி மீட்டுக் கொண்டார்" என்று *(கலாத்தியர் 3:13).*

தேவனுக்கும் மனுஷனுக்கும் மத்தியில் காணப்பட்ட தடை தகர்த்தெரியப்படுகிறது. மரணத்திற்கு அதிகாரியான பிசாசானவனை தன் மரணத்தினாலே நசுக்கிப் போட்டார். தேவனை நோக்கி அப்பா பிதாவே என்று கூப்பிடக் கூடிய பாக்கியத்தை பெற்றுத் தந்தார். அவர் மூலமாய் தேவனுடைய சுதந்தரராக்கினார்.

வேதம் சொல்லுகிறது, **"ஆகையால் இனி நீ அடிமை யாயிராமல் புத்திரனாயிருக்கிறாய், நீ புத்திரனேயானால் கிறிஸ்து மூலமாய் தேவனுடைய சுதந்தரனாயுமிருக்கிறாய்"** *(கலாத்தியர் 4:7).*

ஆம் நம் அருமை ஆண்டவர் இயேசு கிறிஸ்து தடையாய் இருந்தத் திரையைக் கிழித்து, அவர் வழியாய், தேவனுடைய சுதந்திரராய் நித்திய வீட்டிற்குள் பிரவேசிக்க கிருபை, அருளுகிறார்.

V

சத்துரு கொண்டுவரும் தடை நீங்கத் தேவையானது

1. விசுவாசம்

ஒரு சமயம் என் தோழியின் மகள், தேவனுக்குப் பிரியமில்லாதவைகள் என்னென்னவென்று, சொல்லுங்களேன் என்றாள். எங்கே உனக்குத் தெரிந்தவைகளை முதலில் சொல் பார்க்கலாம் என்றேன். உடனே அவள், விக்கிரக ஆராதனை செய்வது, கோபம், கசப்பு, வைராக்கியம், சண்டை, பொய் பேசுதல், களவு என்று சொல்லிக் கொண்டே போனாள். முக்கியமான ஒன்றை சொல்ல மறந்து விட்டாயே என்றேன்.

வேதம் சொல்லுகிறது. **"விசுவாசமில்லாமல் தேவனுக்குப் பிரியமாயிருப்பது கூடாத காரியம்"** என்று (எபிரேயர் 11:6)

விசுவாசமில்லாத ஜெபத்தினால் பிரயோசனம் இல்லை; விசுவாசமில்லாமல் அற்புதத்தைப் பெற்றுக் கொள்ள முடியாது என்றெல்லாம் தெரிந்திருக்கும், அநேகராகிய நமக்கு விசுவாசமில்லாமல் தேவனுக்குப் பிரியமாய் இருப்பது கூடாத காரியம் என்பது தெரியாமல் இருக்கிறது. தேவனைப் பிரியப்படுத்த நாம் அநேகக் காரியங்களைச் செய்யலாம். தவறாமல் ஆலயம் செல்லலாம், ஜெபக்கூட்டங்களுக்குச் செல்லலாம். தசமபாகம் கொடுக்கலாம், கர்த்தருக்கென்று ஊழியம் செய்யலாம். ஆனால் எப்படிப்பட்ட காரியங்களை நாம் செய்தாலும் விசுவாசமில்லாமல் இருப்போமானால் தேவனுக்குப் பிரியமாய் இருக்க முடியாது.

இந்த விசுவாசம் எப்படிப்பட்டதாய் இருக்க வேண்டும்? வேதம் சொல்லுகிறது **"தேவனிடத்தில் சேருகிறவன் அவர் உண்டென்றும் அவர் தம்மைத் தேடுகிறவர்களுக்கு பலன் அளிக்கிறவரென்றும் விசுவாசிக்க வேண்டும்"** (எபிரேயர் 11:6). ஆம் தம்மைத் தேடுகிறவர்களுக்கு பலன் அளிக்கும் தேவனாகவே இருக்கிறார்.

கர்த்தரைத் தேடும்போது அவர் நம்மைக் கைவிடாதிருக்கிறார்:-

சங்கீதக்காரன் சொல்லுகிறான் **"கர்த்தாவே உம்மைத் தேடுகிறவர்களை நீர் கைவிடுகிறதில்லை"** (சங்கீதம் 9:10) ஆம் தேவனை நாம் தேடும்போது அவர் ஒருபோதும் நம்மைக் கைவிடுவதில்லை.

இன்றைக்கு மனிதர்கள் நம்மைக் கைவிடமாட்டார்கள் என்று நம்புகிறோம். ஆனால் அநேக வேளைகளில் யாரை அதிகமாய் நம்புகிறோமோ, யாரிடம் அதிகமாய் எதிர் பார்க்கிறோமோ அவர்கள் நம்மைக் கைவிடுகிறார்கள். ஒரு கணவன் தன் மனைவியின் கரத்தை திருமணத்தில் பிடிக்கும்போது, **'இன்பமோ துன்பமோ உன்னை நான் கைவிட மாட்டேன்'** என்று உறுதியைக் கொடுக்கிறான். மனைவியும் **'வாழ்வோ சாவோ உங்களோடுதான்'** என்கிறாள். ஆனால்

பாருங்கள் எத்தனை திருமணங்கள் விவாகரத்துக் கோர்ட்டில் தடுமாறிக் கொண்டிருக்கிறது. ஆண்டவர் சொல்லுகிறார், நீ விசுவாசத்தோடு என்னைத் தேடும்போது நான் உன்னை ஒருபோதும் கைவிடுவதில்லை என்று.

நான் இரட்சிக்கப்பட்ட புதிதில் ஆண்டவர் எனக்கு ஒரு தரிசனத்தைக் கொடுத்தார். அப்பொழுது, நான் விசுவாசத்தில் சரியாய் வேரூன்றாத, மேலோட்டமான காலம். என்னுடைய ஜெபத்திற்கு நான் எதிர்பார்த்தாற்போல் பதில் கிடைக்கவில்லை என்ற சோர்வோடு இரண்டு மூன்று நாட்கள் ஜெபிக்காமல் இருந்தேன். ஒருநாள் விடியற்காலையில் ஒரு பெரிய சிலுவையை தரிசனத்தில் கண்டேன். **நீ என் மீது வைத்திருக்கும் நம்பிக்கையை இழக்குமாறு நான் ஓதுபோதும் உன்னைக் கைவிடமாட்டேன்** என்ற தெளிவான குரலைக் கேட்டேன். நான் உடனே வாரிச்சுருட்டி எழுந்து உட்கார்ந்தேன். என்னோடு பேசியது என் ஆண்டவராகிய **இயேசு கிறிஸ்து** என்பதை உணர்ந்து கொண்டேன். அவருடைய அளவற்ற அன்பை நினைத்து அசந்து போனேன். நான் சோர்ந்து போய், அவரைவிட்டு பின்வாங்கிப் போயிருந்தேன்; ஆனால் அவரோ என்னைப் பார்த்து, நான் உன்னை கைவிட மாட்டேன் என்றார். அன்றைக்குத்தான் நான் ஆண்டவரை உறுதியாய் பற்றிப் பிடித்துக் கொண்டேன். அதற்குப் பிற்பாடு என் வாழ்வில் எத்தனையோ தடைகள், போராட்டங்கள் குறுக்கிட்டது. நான் விசுவாசத்தோடு தேவனைத் தேடினேன். அவர் தம் வாக்குத்தத்தத்தின்படி என்னோடு இருந்து என்னைக் கைவிடாதிருந்தார். இனியும் கைவிடமாட்டார் என்று விசுவாசிக்கிறேன். அல்லேலூயா, ஆமென்.

அநேக வேளைகளில் நாம் அவரைத் தேடாமல் அவர் என்னைக் கைவிட்டார் என்று முறுமுறுக்கிறோம். வெயில் கடுமையாய் காய்ந்து கொண்டிருக்கிறது, பக்கத்தில் பெரிய மரத்தின் நிழலும் இருக்கிறது. வெயிலில் காயும் நாம்தான் மரத்தின் நிழலைத் தேடிப் போகவேண்டும். ஆனால் அநேகர் நிழலாய் இருக்கும் ஆண்டவரைத் தேடாமல் நான் வெயிலின் உஷ்ணத்தை தாங்க முடியாமல் தவிக்கிறேனே என்று அங்கலாய்க்கிறார்கள்.

இந்த உலகில் நாம் எத்தனையோ விதங்களில் சிறுமைப்படுத்தப்படுகிறோம். நமக்கு சேர வேண்டிய நன்மை நம்மை வந்தடையாமல் தடை செய்யப்படுகிறது. ஆனால் தேவனை விசுவாசத்தோடு தேடும்பொழுது அவர் ஒருபோதும் நம்மைக் கைவிடுவதில்லை. **கர்த்தர்** அந்தத் தடைகளை அகற்றி நம்மைக் கைவிடாதிருக்கிறார். கர்த்தர் சொல்லுகிறார், **"சிறுமையும் எளிமையுமானவர்கள் தண்ணீரைத் தேடி அது கிடையாமல் நாவு தாகத்தால் வரலும்போது கர்த்தராகிய நான் அவர்களுக்கு செவிகொடுத்து இஸ்ரவேலின் தேவனாகிய நான் அவர்களைக் கைவிடாதிருப்பேன்"** என்று ***(ஏசையா 41:17)***.

ஒருசமயம் பேதுரு இயேசுவிடத்தில் போக விசுவாசத்தோடு கடலில் குதிக்கிறான். விசுவாசத்தினால் கர்த்தரை நோக்கி நடக்கவும் செய்கிறான். ஆனால் திடீரென்று வந்த பலத்த காற்று அவனைத் தொடர்ந்து நடக்கவிடாமல் தடை செய்கிறது. அவன் அமிழ்ந்து போகையில், ஆண்டவரே என்னை இரட்சியும் என்று கூப்பிட்டான். ஆண்டவர் **இயேசு** அவனைக் கைவிடவில்லை. கை நீட்டி தூக்கி விட்டார். ஆம் தேவ பிள்ளையே, நம்முடைய வாழ்க்கை பயணத்திலும் எத்தனையோ காற்றையும் புயலையும் நாம் சந்திக்க வேண்டியுள்ளது. கடலில் அமிழ்ந்து போவதுபோல பிரச்சனைகள் நம்மை அமுக்குகிறது. பல தடைகள் முன்னேற விடாமல் தடுக்கிறது.

ஆனால் அப்படிப்பட்ட சூழ்நிலையில், நாம் கர்த்தரை விசுவாசத்தோடு தேடுவோம், அவர் ஒருபோதும் நம்மைக் கைவிடமாட்டார்.

கர்த்தரை விசுவாசிக்கும்போது அவர் நம்மை எல்லா பயத்திற்கும் நீங்கலாக்கி விடுவிற்கிறார்:-

வேதம் சொல்லுகிறது, **"நான் கர்த்தரைத் தேடினேன். அவர் எனக்கு செவி கொடுத்து என்னை எல்லா பயத்திற்கும் நீங்கலாக்கி விட்டார்"** ***(சங்கீதம் 34:4)***. ஆம் நாம் கர்த்தரை விசுவாசத்தோடு தேடும்போது பயம் என்ற தடையை நம்மைவிட்டு அகற்றுவார்.

இந்த உலகில் நமக்கு மாம்சத்தோடும் இரத்தத்தோடும் மாத்திரமல்ல, துரைத் தனங்களோடும் அதிகாரங்களோடும்,

இப்பிரபஞ்சத்தின் அந்தகார லோகாதிபதிகளோடும் வான மண்டலங்களிலுள்ள, பொல்லாத சேனைகளோடும் நமக்கு போராட்டமுண்டு.

வேதம் சொல்லுகிறது, **"பொல்லாங்கன் எய்யும் அக்கினி யாஸ்திரங்களை விசுவாசம் என்னும் கேடகத்தால் அவித்து போட்டு எந்த சமயத்திலும் நாம் ஜெபம் பண்ணுகிறவர்களாய் காணப்படவேண்டும்"** *(எபேசியர் 6:16).* இவ்வாறு விசுவாசத்தோடு நாம் ஜெபத்தில் தேவனை தேடுகிறவர்களாய் காணப்படும்போது, பொல்லாத சாத்தானைக் கண்டும், அவன் கொண்டுவரும் தடைகளைக் கண்டும் நாம் பயப்படவேண்டியதில்லை. வேதம் சொல்லுகிறது, **"உலகத்தில் இருக்கிறவனிலும் உங்களிலிருக்கிறவர் பெரியர்"** *(I யோவான் 4:4).*

இன்று உலகில் செய்வினை, சூன்யக் கட்டுகளால் அநேக மக்கள் அவதிப்பட்டுக் கொண்டு இருக்கின்றனர். இத்தகைய இருளின் கிரியைகளால் அநேகருடைய நிம்மதி தடைபட்டுக் கிடக்கிறது. ஆனால் இவற்றிலிருந்து விடுதலை கொடுக்க ஆண்டவர் **இயேசு கிறிஸ்து** வல்லமையுள்ளவராய் இருக்கிறார். **இயேசு கிறிஸ்து** என்னும் நாமத்திலே அசுத்த ஆவிகள் அஞ்சி ஓடுகின்றன. சில நாட்களுக்கு முன்பு நான் ஒரு குடும்பத்தை சந்தித்தேன். சொத்தாசையின் பொருட்டு குடும்பத்திற்கு எதிராய் செய்யப்பட்ட பில்லி சூன்யங்களால் அவர்கள் மிகவும் நொந்து போய் இருந்தார்கள். ஒரு சமயம் **இயேசு கிறிஸ்து**வின் அன்பையும் வல்லமையையும் குறித்து கேள்விப்பட்டு, அவரை ஏற்றுக்கொண்டு, விசுவாசத்தோடு, அவரைத் தேடுகிறவர்களாய் மாறினர். ஆண்டவர் **இயேசு கிறிஸ்து** அவர்களுக்கு நல்ல ஒரு விடுதலையைக் கொடுத்தார். ஆம் அவர் இரத்தக் கோட்டைக்குள் அடைக்கலம் புகுந்தால் எப்படிப்பட்ட அந்தகாரக் கிரியைகளும் நம்மை நெருங்காது. வேதம் சொல்லுகிறது **"யாக்கோபுக்கு விரோதமான மந்திரமும் இல்லை, இஸ்ரவேலுக்கு விரோதமான குறிசொல்லுதலுமில்லை"** *(எண்ணாகமம் 23:23).*

தேவப் பிள்ளைகளே, நாம் தேவனைத் தேடுகிறவர்களாய் இருப்போமானால் இத்தகைய அசுத்த ஆவிகளுக்கும்,

அவைகளின் அந்தகாரக் கிரியைகளுக்கும் நாம் பயப்பட வேண்டிய அவசியமில்லை.

அவையெல்லாவற்றையும் மேற்கொள்ள ஆண்டவர் நமக்கு அதிகாரம் கொடுத்திருக்கிறார். அவை ஒன்றும் நம்மை சேதப்படுத்த மாட்டாது. வேதம் சொல்லுகிறது, **“இதோ சர்ப்பங்களையும், தேள்களையும் மிதிக்கவும், சத்துருவின் சகல வல்லமையை மேற்கொள்ளவும் உங்களுக்கு அதிகாரங் கொடுக்கிறேன். ஒன்றும் உங்களை சேதப்படுத்த மாட்டாது”** (லூக்கா *10:19*)

கோலியாத்தின் தோற்றம் ஒவ்வொருவரையும் பயமடையச் செய்தது. கலங்கச் செய்தது. வேதம் சொல்லுகிறது, **“இஸ்ரவேலர் அனைவரும் அந்த மனுஷனைக் காணும்போது, மிகவும் பயப்பட்டு அவன் முகத்திற்கு விலகி ஓடிப்போனார்கள்”** என்று (I சாமுவேல் *17:24*).

ஆனால் தாவீது பயப்படவில்லை. அவன் தேவனை விசுவாசத்தோடு தேடுகிறவனாய் இருந்தபடியால் தேவன் அவனோடிருந்தார், ஜெயத்தைக் கொடுத்தார். இன்றைக்கு நம் வாழ்க்கையிலும் சத்துரு கோலியாத்தைப் போன்ற அநேகத் தடைகளை நமக்கு முன்பாகக் கொண்டு வருகிறான். ஆனால் நாம் அவற்றைக் கண்டு பயப்படவேண்டியதில்லை. நாம் தேவனை விசுவாசத்தோடு தேடுகிறவர்களாய் இருப்போமானால் மலையைப் போன்ற தடைகள் வந்தாலும் பனியைப்போல் மறையச் செய்வார்.

2 கர்த்தரிடமிருந்து வரும் ஆலோசனை

ஒரு சமயம் முக்கியமான file ஒன்றைக் காணவில்லை யென்று என் கணவர் தேடிக்கொண்டிருந்தார். என்னிடம் பதட்டத்தோடு வந்து, எல்லா இடத்திலும் தேடிப்பார்த்தேன். காணவில்லையே, நீயும் போய்த் தேடிப்பார் என்றார். நான் எழுந்துபோய் சிறிது நேரத்திற்குள் அந்த file-ஐ கண்டுபிடித்து அவரிடம் கொடுத்தேன். உடனே அவர் நான் எவ்வளவாய்த் தேடினேன். காணவில்லை. நீ எப்படி இவ்வளவு விரைவில் கண்டுபிடித்தாய் என்றார். நான் சொன்னேன், நீங்கள் செய்யாத முக்கியமான ஒன்றை நான் செய்தேன். ஆகவேதான் file கிடைத்தது என்றேன். உடனே அவர் ஆச்சர்யத்தோடு அப்படி என்ன முக்கியமானதை நீ செய்தாய் என்றார். நான் சொன்னேன் file-ஐத் தேடுவதற்கு முன்பு ஆண்டவரை நோக்கி file கிடைக்க வேண்டும், அதைக் கண்டுபிடிக்க உதவுங்கள் ஆண்டவரே என்று ஜெபித்துவிட்டு தேட ஆரம்பித்தேன் என்றேன்.

ஆம் அன்பானவர்களே, அநேக வேளைகளில் பிரச்சனைகளும் தடைகளும் நமக்கு எதிர்படும்போது, முதலாவதாக நம் புத்தியை நம்பி சுயமாய் செயல்படுகிறோம். நம் சிறிய மூளையில் அதிக பாரத்தை ஏற்றி சோர்ந்து

போகிறோம். அவ்வாறு சோர்ந்து போகும்போதுதான் நமக்கு ஆண்டவரைத் தேடும் எண்ணம் வருகிறது. அதற்குப் பிற்பாடுதான், ஐயோ ஆண்டவரே நீரே எல்லாவற்றையும் பார்த்துக் கொள்ளும் எல்லாத் தடைகளையும் அகற்றும் என்று அவரிடம் சரணடைகிறோம். வேதம் சொல்லுகிறது, **"உன் சுய புத்தியின்மேல் சாயாமல் உன் முழுஇருதயத்தோடும் கர்த்தரில் நம்பிக்கையாயிருந்து, உன் வழிகளிலெல்லாம் அவரை நினைத்துக் கொள் அப்பொழுது, அவர் உன் பாதைகளை செவ்வைப்படுத்துவார்"** *(நீதி மொழிகள் 3:5,6).*

கர்த்தர் நமக்கென்று தரவிருக்கும் ஆசீர்வாதங்களை சுதந்தரித்துக் கொள்ள முடியாதபடிக்கு சத்துரு தடைகளைக் கொண்டு வரும்போது, நாம் சோர்ந்து போகாமல் தடைகளை அகற்றிப்போடும் தேவனை நோக்கிப் பார்க்க கற்றுக்கொள்ள வேண்டும். முதன் முதலில் நம்முடைய பிரச்சனையை தேவனிடம் எடுத்துச்சென்று ஜெபித்து, அவரிடம் ஒப்படைக்க வேண்டும். அவருடைய ஆலோசனை வழிநடத்துதலுக்காய் ஜெபிக்க வேண்டும். அப்பொழுது **கர்த்தர்** அந்தப் பிரச்சனையை பொறுப்பெடுத்துக் கொள்கிறார். ஆலோசனைக் கொடுத்து நடத்துகிறார். அவ்வாறு நாம் செயல்படும்போது, கர்த்தர் தடைகளை அகற்றி ஜெயத்தைக் கொண்டு வருகிறார்.

வேதம் சொல்லுகிறது, **"குதிரை யுத்தநாளுக்காய் ஆயத்தமாக்கப்படும், ஜெயமோ கர்த்தரால் வரும்"** *(நீதிமொழிகள் 21:31).*

ஆம் அன்பானவர்களே, குதிரை யுத்தத்திற்கு ஆயத்தமாக்கப்படலாம். ஆனால் நாம் நம் நம்பிக்கையை அந்தக் குதிரையின்மீது வைக்கக் கூடாது. இந்தக் குதிரைப் படை எவ்வளவு வல்லமையாய் ஆயத்தப்படுத்தப்பட்டுள்ளது. எனவே, எனக்குப் பயமில்லை என்று நினைக்கக் கூடாது. ஏனென்றால் ஜெயம் அந்த குதிரைகளால் வரும் ஒன்று அல்ல.

அநேகக் காரியங்களுக்காய் நாம் தேவனிடத்தில் ஜெபிக்கிறோம். அதற்குத் தேவையான எல்லா ஆயத்தங் களையும் செய்கிறோம். ஆனால் ஜெயம் என்பது நாம் செய்த

ஆயத்தத்தினாலும், முயற்சியினாலும் வந்த ஒன்று என்று ஒருபோதும் பெருமை பாராட்டக்கூடாது. ஜெயம் என்பது கர்த்தரிடமிருந்து மாத்திரம் வரும் ஆசீர்வாதமாகும்.

தாவீது கோலியாத்தை எதிர்க்க ஆயத்தப்பட்டான். அவன் அவ்வாறு ஆயத்தப்பட்டபொழுது முதலில் சவுலின் வஸ்திரத்தை உடுத்தி அவனுடைய பட்டயத்தைக் கட்டிக் கொண்டு நடந்துப் பார்த்தான். அது சரிப்படாது என்று களைந்து போட்டான். பின்பு தடியை கையில் பிடித்து, ஆற்றிலிருந்து ஐந்து, கூழாங்கற்களை தெரிந்தெடுத்து, தன் அடைப்பையில் போட்டுக் கொண்டு கவணைத் தன் கையில் பிடித்து கோலியாத்தை சந்திக்க ஆயத்தப்படுகிறான். ஆனால்அவன் தன் நம்பிக்கையை தன் ஆயத்தத்தின்பேரில் வைக்காமல் கர்த்தரிடத்தில் வைத்தவனாய்க் காணப்பட்டான். ஆகவேதான் அவன் கோலியாத்தை நோக்கி **"நீ பட்டயத்தோடும், ஈட்டியோடும் என்னிடத்தில் வருகிறாய். (அதாவது உன்னுடைய ஆயத்தத்தின்மேல் நம்பிக்கையாய் வருகிறாய்). ஆனால் நானோ (என் ஆயத்தத்தின்பேரில் நம்பிக்கையாயிராமல்), இஸ்ரவேலுடைய இராணுவங்களின் தேவனாகிய சேனைகளையுடைய கர்த்தரின் நாமத்திலே (நம்பிக்கை வைத்தவனாய்) உன்னிடத்தில் வருகிறேன்"** என்கிறான் (சாமுவேல் 17:45). அதன்படியே தேவன் தாவீதிற்கு ஜெயத்தைக் கொடுத்தார்.

நமக்குத் தெரிந்த ஒரு முக்கிய நபரிடம் நாம் ஆலோசனை கேட்டுச் செல்லும்போது அவர் ஆலோசனை கொடுப்பதோடு விட்டு விடாமல் அக்காரியத்திலே தம்மால் இயன்ற உதவியையும் செய்ய முற்படுகிறார்.

ஒரு வாலிபன் தன்னுடைய படிப்பு முடிந்தவுடன் தனக்கு வேண்டிய நபரிடம் சென்று, தான் இனிமேல் என்ன செய்ய வேண்டும் என்று ஆலோசனை கேட்டானாம். அந்த நபரும், அவனுக்கு எந்தெந்த கம்பெனிகளில் சந்தர்ப்பம் உண்டு, எப்படிப்பட்ட வேலையை தேர்ந்தெடுக்கலாம் என்றெல்லாம் ஆலோசனை சொன்னாராம். அத்தோடு நிறுத்தி விடாமல் தனக்குத் தெரிந்த நிறுவனத்தின் உயர் அதிகாரிக்கு ஒரு சிபாரிசுக் கடிதமும் கொடுத்து விட்டாராம். அந்த நிறுவனத்திலே அவனுக்கு ஒரு நல்ல வேலை கிடைத்தது. உடனே அவன்

அந்த நபரை சந்தித்து அவர் தனக்குக் கொடுத்த நல்ல ஆலோசனைக்காகவும், நல்ல ஒரு வேலை கிடைக்க உதவியதற்காகவும் நன்றி செலுத்தினானாம்.

ஆம் தேவனை நோக்கி நாம் பார்க்கும்போது, அவரிடமிருந்து நமக்கு ஆலோசனை வருகிறது, **''அவர் ஆலோசனையில் ஆச்சரியமானவர் செயலில் மகத்துவமானவர்''** *(ஏசாயா 28:29)*. தேவனிடமிருந்து நாம் ஆலோசனையைப் பெற்று நடக்கும் ஒவ்வொரு காரியத்திலும், அந்த ஆலோசனையை நிறைவேற்ற தேவன் அற்புதத்தைச் செய்பவராய்க் காணப்படுகிறார்.

"நீ இஸ்ரவேல் புத்திரராகிய என் ஜனத்தை எகிப்திலிருந்து அழைத்து வரும்படி உன்னைப் பார்வோனிடத்தில் அனுப்புவேன் வா" *(யாத்திராகமம் 3:10)* என்று மோசேயைப் பார்த்து கர்த்தர் சொன்னார். அதற்கு மோசே, என்னுடைய திக்குவாய் எனக்கு தடையாய் உள்ளது; ஆகவே என்னால் இதைச் செய்ய முடியாது என்கிறான். ஆனால் **"கர்த்தரோ நீ போ, நான் உன் வாயோடே இருந்து, நீ பேச வேண்டியதை உனக்கு போதிப்பேன்"** என்றார் *(யாத்திராகமம் 4:12)*.

மோசே கர்த்தருக்குக் கீழ்ப்படிந்து தன்மீது நம்பிக்கை வைக்காமல், தன்னை அனுப்பின கர்த்தர் மீது நம்பிக்கை வைத்து எகிப்தை நோக்கி புறப்படுகிறான். கர்த்தர் அவனை அப்படியே விட்டுவிடவில்லை. கர்த்தர் மோசேயோடு இருந்து ஒவ்வொரு கட்டத்திலும், ஆலோசனை கொடுத்து, அற்புதங்கள் செய்பவராய்க் காணப்பட்டார். பார்வோனோடு என்ன பேசுவது, எப்படிப் பேசுவது என்ன செய்வது என்று தேவனுடைய ஆலோசனை அவனுக்கு வந்து கொண்டே இருந்தது. கர்த்தருடைய ஒவ்வொரு ஆலோசனைக்கும் அவன் கீழ்ப்படிந்து செயல்பட்டான். அவன் அவ்வாறு செயல்பட்டபோது 9-ஆம் வாதையின் முடிவில் தன்னுடைய தலைப்பிள்ளையை இழந்த பார்வோன், இஸ்ரவேல் ஜனங்கள் எகிப்தை விட்டு கிளம்பிச் செல்ல அனுமதிக்கிறான்.

"கர்த்தர் இஸ்ரவேல் ஜனங்களை வழிநடத்த பகலில் மேகஸ்தம்பத்திலும், இரவில் வெளிச்சம் காட்ட அக்கினி ஸ்தம்பத்திலும் அவர்களுக்கு முன் சென்றார்" *(யாத்திராகமம் 13:21)*. ஆனால் இஸ்ரவேல் ஜனங்கள் தொடர்ந்து செல்ல முடியாதபடிக்கு சிவந்த சமுத்திரம் பெரும் தடையாய் நின்றது.

தங்களுக்குப் பின்புறமாய், தங்களை கிட்டி வந்து கொண்டிருக்கும் பார்வோனின் சேனையைக் கண்டு திகைத்து நிற்கிறார்கள். அப்பொழுது கர்த்தரிடமிருந்து மோசேக்கு ஆலோசனை வருகிறது. "**நீ உன் கோலை ஓங்கி உன் கையை சமுத்திரத்தின் மேல் நீட்டி, சமுத்திரத்தைப் பிளந்து விடு**" (*யாத்திராகமம் 14:16*). "**மோசே அந்த கட்டளைக்கு கீழ்ப்படிந்தபோது, கர்த்தர் சமுத்திரம் வறண்டு போகப் பண்ணினார். இஸ்ரவேல் புத்திரர் சமுத்திரத்தின் நடுவாக, வெட்டாந்தரையிலே நடந்து போனார்கள்**" (*யாத்திராகமம் 14:21,22*).

கர்த்தர் மோசேயோடு இருந்தார். திக்குவாய் தடையாக நிற்கவில்லை. அவர் அவனை வழிநடத்தி, ஆலோசனை கொடுத்து, அற்புதம் செய்து, இஸ்ரவேல் ஜனங்களை பார்வோனின் பிடியிலிருந்து விடுவித்தார்.

தங்கள் சுயபுத்தியிலும், பெலத்திலும் நம்பிக்கையாய் இருப்பவர்கள், சத்துரு கொண்டு வரும் தடைகளைக் கண்டு சோர்ந்து போகிறார்கள். ஆனால் நாமோ, ஆண்டவரையே முற்றிலும் சார்ந்து, அவரிடத்தில் நம் காரியங்களை ஒப்படைத்து, அவருடைய ஆலோசனைக்காகவும், வழிநடத்தலுக்காகவும் காத்திருப்போமாக. அப்பொழுது அவருடைய பிள்ளைகளாகிய நாம் துன்பக்கடலில் சிக்கி கரைசேர முடியாதவர்களாய் கலங்கி நிற்க வேண்டிய அவசியமும் இல்லை, வழிதப்பிய கப்பலைப் போல் தடுமாற வேண்டியதுமில்லை.

ஒருசமயம் வேலைக்காக என் வீட்டிற்கு ஒரு சகோதரி வந்தார்கள். அந்த சகோதரி பயங்கர கட்டுகளிலும், பிரச்சனைகளிலும் சிக்கி இருந்தார்கள். அந்த சகோதரிக்கென்று நெருக்கமான உறவினர் யாரும் இருந்ததாகத் தெரியவில்லை. கணவனை இழந்து, ஒரே மகனையும் இழந்து தனியாய் இருந்தார்கள். பேச்சிலே விரக்தி, எல்லோர்மேலும் வெறுப்போடு காணப்பட்டார்கள். அந்த சகோதரியை நான் பார்த்தவுடன், இந்த சகோதரி நம் வீட்டில் வேலை செய்கிறதோ, இல்லையோ எப்படியாவது இரட்சிப்பிற்குள் வழிநடத்தி, ஆண்டவர் **இயேசு கிறிஸ்து**வை ஏற்றுக் கொள்வதின் மூலம் ஒரு விடுதலையை பெற்றுக்கொள்ள செய்யவேண்டும் என்று நினைத்து வேலைக்குச் சேர்த்தேன். ஆனால் வேலைக்குச் சேர்த்த நாளிலிருந்து

என் சமாதானம் தடைப்பட்டு இருந்ததை உணர்ந்தேன். அந்த சகோதரியை வேலையிலிருந்து நிறுத்திவிடலாம் என்ற எண்ணம் வந்தது. ஆனால் சுயபுத்தியில் யோசித்து எதையும் செய்யக் கூடாது. ஆண்டவரிடம் இந்தக் காரியத்தை ஒப்படைத்து ஜெபிக்கலாம் என்று ஜெபிக்க ஆரம்பித்தேன். கட்டுகளிலும், பிரச்சனைகளிலும் இருக்கும் அந்த சகோதரியை அனுப்பிவிடாமல், அந்த சகோதரிக்காய் ஜெபிக்க வேண்டும் என்ற நிச்சயத்தைக் **கர்த்தர்** எனக்குள் கொண்டு வந்தார். அந்த ஆலோசனைக்கு நான் கீழ்ப்படிந்து கர்த்தரை நோக்கி ஜெபிக்க ஆரம்பித்தேன். ஆண்டவர் **இயேசு கிறிஸ்து**வின் அன்பு பற்றியும், இரட்சிப்பு பற்றியும் அடிக்கடி எடுத்துச் சொல்லுவேன். அவரை விசுவாசித்து ஏற்றுக் கொள்ளும்போது, யாராலும் கொடுக்க முடியாத சமாதானம் கிடைக்கும் என்றேன். அருகிலுள்ள போதகர் ஒருவர், அந்த சகோதரியை சபையிலே மூன்று நாட்கள் தங்க வைத்து உபவாசித்து ஜெபித்தார்கள். மூன்று நாட்கள் கழித்து என் வீட்டிற்குத் திரும்பி வந்தபோது, அவர்கள் முகத்திலே நல்ல தெளிவு இருந்தது. அம்மா, ஆண்டவர் **இயேசு கிறிஸ்து**வை என் ஆண்டவராகவும் இரட்சகராகவும் விசுவாசித்து ஏற்றுக் கொண்டேன். அவரிடம் தொடர்ந்து ஜெபிப்பேன் என்றார்கள். கர்த்தர் அந்த சகோதரியை இரட்சித்து எல்லாகட்டுகளிலுமிருந்து விடுதலை கொடுத்தார். ஒரு சில மாதங்கள் கழித்து ஞானஸ்நானம் பெற்றுக் கொண்டார்கள்.

ஆம் என் சுயபுத்தியில் சார்ந்து, ஆண்டவரை தேடாமல், அவர் ஆலோசனையின்படி நடக்காமல் இருந்திருந்தால், அந்த ஆத்துமாவை இரட்சிப்பிற்குள் வழி நடத்தியிருக்க முடியாது. ஆனால் ஆண்டவரிடம் ஜெபித்து, அவர் ஆலோசனையின்படி நடந்தபோது, கர்த்தர் கிரியை செய்தார். தடையாய் இருந்த கட்டுகள் அறுந்தது. அந்த ஆத்துமா இரட்சிக்கப்பட்டது.

அனபான விவாசிகளே, உங்களுடைய ஒவ்வொரு காரியத்திலும், தேவன் தன்னுடைய ஆலோசனையையும், வழி நடத்துதலையும் தர ஆவலுள்ளவராய் இருக்கிறார். அவ்வாறு நாம் அவருடைய ஆலோசனையின்படி செயல்படும்போது, எப்படிப்பட்ட பிரச்சனையாய் இருந்தாலும், மாற்றிப் போடுவார். எப்படிப்பட்ட தடையாய் இருந்தாலும் நீக்கிப் போடுவார். அல்லேலூயா. ஆமென்.

3 முறுமுறுத்தல் கூடாது

துதிக்கும் விசுவாசிக்கு பொறுமை இருக்கும். பொறுமை இருப்பவனிடத்தில் துதி இருக்கும். இரண்டும் இல்லாதவனிடத்தில் முறுமுறுத்தலே மிஞ்சும். இஸ்ரவேல் ஜனங்கள் தடைகளைப் பார்க்கும்போதெல்லாம் முறுமுறுக்கும் ஜனங்களாய்க் காணப்பட்டனர். **"அவர்கள் அப்படிக் காணப்பட்டதால் அவர்களில் அநேகரிடத்தில் தேவன் பிரியமாயிருக்கவில்லை"** *(கொரிந்தியர் 10:5).*

இஸ்ரவேல் ஜனங்கள் தங்களுக்கு எதிர்ப்பட்ட சிவந்த சமுத்திரத்தைக் கண்டு முறுமுறுத்தார்கள். **"எகிப்திலே பிரேதக் குழிகள், இல்லையென்றா வனாந்தரத்திலே சாகும்படிக்கு எங்களைக் கொண்டு வந்தீர்"** என்றார்கள் *(யாத்திராகமம் 14:11).* கர்த்தர் தம்முடைய ஜனங்களுக்காக சிவந்த சமுத்திரத்தை இரண்டாகப் பிளந்து வெட்டாந்தரையிலே நடப்பதுபோல நடத்திக் கூட்டி வந்தார். அதே சமுத்திரம் பார்வோனையும் அவன் சேனையையும் மூடிப்போட்டது. **கர்த்தர்** செய்த இந்த பெரிய அற்புதத்தை அவர்கள் கண்டும், **மாராவின் நீர் கசப்பாய் இருந்தபோது "என்னத்த குடிப்போம்"** என்று முறுமுறுக்கிறார்கள் *(யாத்திராகமம் 15:2).* கர்த்தர் கசந்த மாராவை மதுரமான தண்ணீராய் மாற்றினார். அடுத்த சில நாட்களில், "நாங்கள்

எகிப்திலே இறைச்சிப் பாத்திரங்களண்டையில் உட்கார்ந்து, அப்பத்தை திருப்தியாய் சாப்பிட்டோமே, இங்கே பட்டினியாய் சாகவா அழைத்து வந்தீர்கள்'' என்று முறுமுறுக்கின்றனர். கர்த்தர் வானத்து மன்னாவை உணவாக அனுப்பித் தந்தார். சாயங்காலத்தில் பாளயத்தைக் காடைகளால் நிரப்பினார்.

இப்படியாய் இஸ்ரவேல் ஜனங்கள் கர்த்தர் செய்த அநேக அற்புதங்களை கண்ணாரக் கண்டும், அநேக வேளைகளில் தேவனுக்கு எதிராய் முறுமுறுக்கும் ஜனங்களாய்க் காணப்பட்டனர். கிட்டத்தட்ட 12 தடவை முறுமுறுக்கின்றனர். வேதம் சொல்லுகிறது **"அவர்கள் கர்த்தருக்கு விரோதமாக முறுமுறுத்ததை தேவன் விரும்பவில்லை. மோசே அவர்களை நோக்கி கர்த்தருக்கு விரோதமாக நீங்கள் முறுமுறுத்த உங்கள் முறுமுறுப்புகளை அவர் கேட்டார். உங்கள் முறுமுறுப்புகள் எங்களுக்கு அல்ல, கர்த்தருக்கே விரோதமாய் இருக்கிறது என்றார்"** *(யாத்திராகமம் 16:8).*

அவர்களுடைய முறுமுறுப்பே அவர்கள் ஆசீர்வாதங்களுக்கு தடையாய் நின்றது. வேதம் சொல்லுகிறது. **"அவர்களில் சிலர் முறுமுறுத்து சங்காரக்காரனாலே அழிக்கப்பட்டார்கள். அதுபோல நீங்களும் முறுமுறுக்காதிருங்கள்"** ***(I கொரிந்தியர் 10:10).***

இன்றும் அநேகர், தங்கள் வாழ்க்கையில் சத்துரு கொண்டுவரும் தடைகள் நீங்க ஆண்டவரிடம் ஜெபிக்கிறார்கள். ஆனால் அவர்கள் எதிர்பார்த்த பதில் வராதபோது அல்லது தாமதமாகும்போது முறுமுறுத்து ஆண்டவரைவிட்டு பின்வாங்கிப் போகிறார்கள்.

ஒரு சமயம் சகோதரி ஒருவரிடம், கர்த்தரிடம் ஜெபியுங்கள். அவர் நிச்சயம் உங்களுக்கு செவி கொடுப்பார். எல்லாத் தடைகளையும் அகற்றிப் போடுவார் என்றேன். உடனே அந்த சகோதரி ''அதெல்லாம் நன்றாய் ஜெபித்து விட்டேன். அதனால் ஒரு பிரயோஜனமும் இல்லை. அவர் தான் செய்ய நினைத்ததைத்தான் செய்கிறார். என் ஜெபத்தை எங்கே கேட்கிறார்'' என்றார்.

ஒருசிலர், ''என் சொத்து, சொந்தம் எல்லாம் விட்டு இவரைப் பின்பற்றினேன்; என்ன பிரயோசனம்'' என சலித்துக் கொள்கிறார்கள்.

அன்பான சகோதரனே, சகோதரியே கர்த்தரைத் தேடுகிற உங்களுக்கு நிச்சயம் பலன் உண்டு. முறுமுறுத்தல் இல்லாமல் துதியோடும் பொறுமையோடும் தேடுங்கள்; அப்பொழுது கர்த்தர் செய்யும் அதிசயத்தை நிச்சயம் காண்பீர்கள்.

4 துதித்தல்

வேதம் சொல்லுகிறது, "**நீங்கள் ஒன்றுக்குங் கவலைப் படாமல் எல்லாவற்றையும் குறித்து உங்கள் விண்ணப்பங்களை ஸ்தோத்திரத்தோடே கூடிய ஜெபத்தினாலும், வேண்டுதலினாலும் தேவனுக்குத் தெரியப்படுத்துங்கள்**" என்று *(பிலிப்பியர் 4:6)* ஆம் நம்முடைய வாழ்க்கையில் எப்படிப்பட்ட பிரச்சனைகள் காணப்பட்டாலும், தடைகள் குறுக்கிட்டாலும், நாம் ஸ்தோத்திரத்தோடு கூடிய ஜெபத்தினால் தேவனை அணுக வேண்டும். துதித்தல் என்பது கர்த்தருக்குப் பிரியமான சுகந்த வாசனையாய் இருக்கிறது. **கர்த்தர்** அதிலே பிரியப்படுகிறார். வேதனையான நேரங்களிலும் கலக்கமான சூழ்நிலையிலும் தான் **கர்த்தரின்** கிருபை அதிகம் தேவைப்படுகிறது. தேவனை ஸ்தோத்தரிக்கும்போதுதான் அப்படிப்பட்ட கிருபை நம்மை சூழ்ந்து கொள்ளும்.

வேதம் சொல்லுகிறது, ஸ்தோத்திர பலி செலுத்துகிறவன் தேவனுடைய நாமத்தை மகிமைப்படுத்துகிறான் *(சங்கீதம் 50:23)* என்று. ஆம் தேவன் பொன்னையும் பொருளையும் மற்ற பலிகளையும் விரும்பவில்லை. அதில் அவர் பிரியப்படுவதுமில்லை. உள்ளத்தின் ஆழத்தில் இருந்து ஏறெடுக்கப்படும் ஸ்தோத்திர பலியின்மீது தேவன் மிகவும் பிரியமுள்ளவராய் இருக்கிறார்.

இஸ்ரவேல் ஜனங்கள் எவ்வளவோ பாடுகளினூடே கடந்து வந்து, இனிப் பிரச்சனை இல்லை என்ற எதிர்பார்ப்போடு காணப்பட்டார்கள். ஆனால் அப்பொழுதுதான் அகற்றவே முடியாத தடையாய் எரிகோ மதில் நின்றது. அப்படிப்பட்ட சூழ்நிலையில் எப்படிப்பட்டவர்களும் சோர்வடைவது நிச்சயம். ஒரு மனிதன் **கர்த்தர்** செய்யும் அற்புதங்களை தன் வாழ்க்கையில் கண்டிருந்தாலும், அநேகரிடமிருந்து சாட்சியாய் கேட்டிருந்தாலும், பிரச்சனைகளும், தடைகளும் ஒன்றன்பின் ஒன்றாய் வரும்போது சோர்ந்து போகிறான். மனமகிழ்ச்சியினால் துதி எளிதில் எழும்பும். துன்பத்தின் மத்தியில் தேவனை துதிப்பது என்பது சற்று கடினம்தான். ஆனால் துதித்துப் பாருங்கள். நிச்சயம் **கர்த்தரிட**மிருந்து அற்புதத்தைப் பெற்றுக் கொள்வீர்கள்.

இஸ்ரவேல் புத்திரருக்கு முன்பாக எரிகோ மதில் பெருந்தடையாய் நின்றாலும், **கர்த்தர்** ஜனங்களிடம் துதியையும் ஆர்ப்பரிப்பையும் எதிர்பார்த்தார். தடை நீங்க துதி அவசியமாய் இருந்தது. வேதம் சொல்லுகிறது, **"கொம்புகளினால் பெருந்தொனி இடும்போதும், நீங்கள் எக்காள சத்தத்தைக் கேட்கும்போதும், ஜனங்கள் எல்லாம் மகா ஆரவாரத்தோடே ஆர்ப்பரிக்கக் கடவர்கள். அப்பொழுது பட்டணத்தின் அலங்கம் இடிந்துவிழும். உடனே ஜனங்கள் அவரவர் தங்களுக்கு நோக ஏறக்கடவர்கள் என்றார்"** (யோசுவா 6:5).

"அப்படியே அலங்கம் இடிந்து விழுந்தது. ஜனங்கள் பட்டணத்தைப் பிடித்தார்கள்" (யோசுவா 6:20). தேவனை நோக்கித் துதிக்கும்போது எவ்வளவு பெரிய அற்புதங்களையெல்லாம் தேவன் செய்ய முடியும் என்பதற்கு இது ஒரு பெரிய சாட்சியாய் அமைகிறது.

HOW TO FACE TRIALS AND TRIBULATIONS என்ற புத்தகத்தை வாசித்துக் கொண்டிருந்தபோது நான் சென்னை சட்டக்கல்லூரியில் என்னுடைய இறுதி ஆண்டின் தேர்விற்காய் ஆயத்தமாகிக் கொண்டிருந்தேன். **கர்த்தர்** தன் பிள்ளைகளின் வாழ்க்கையில் ஒவ்வொரு காரியத்தையும் நன்மைக்கே அனுமதிக்கிறார். நன்மையிலே முடிக்கிறார் என்றும், ஆகவே எந்த சமயத்திலும் நாம் கர்த்தருக்கு ஸ்தோத்திரம் செலுத்த

தயங்கக்கூடாது என்றும், நம் புத்திக்கு எட்டியவரைக்கும் அது நன்மையில்லாத ஒன்றாய் காணப்பட்டாலும், **கர்த்தர்** அதை ஒரு நன்மைக்கே அனுமதித்தார் என்ற விசுவாசம் வேண்டும் என்றும் அந்தப் புத்தகத்தில் சொல்லப்பட்டிருந்தது. அதை வாசித்தபோது, இனிமேற்பட்டு என் வாழ்வில் எந்த நேரத்திலும், எப்படிப்பட்ட தடைகள் குறுக்கிட்டாலும், தேவனுக்கு ஸ்தோத்திரம் செலுத்துவேன் என்ற ஒரு தீர்மானம் எடுத்தேன்.

தேர்வு முடிந்த சில நாட்களில் தேர்வு முடிவுகளும் வெளியிடப்பட்டது. என் வகுப்பில் நன்றாய் படிக்கும் மாணவர்களில் நானும் ஒருவளாகத்தான் இருந்தேன். ஆனால் தேர்வு முடிவுகளை Notice Board- ல் பார்த்தபோது arrears column ல் என் பெயர் இருந்தது. அங்கிருந்த என் வகுப்பு மாணவர்களில் ஒரு சிலர், 'என்ன வான்மதி ஆச்சர்யமாய் இருக்கிறது, உன் பெயர் எங்கள் பெயரோடு காணப்படுகிறது' என்று கிண்டல் செய்தார்கள். எனக்கு ஒரே அதிர்ச்சி. என்னால் அதை ஜீரணிக்க முடியவில்லை. மறுநிமிடம் என்னை சுதாரித்துக் கொண்டு, ஆண்டவரே உமக்கு ஸ்தோத்திரம் என்று சிறிது சத்தமாகக் கூறினேன். என்னுடன் வந்திருந்த என் தோழி என்ன சொல்லிக் கொண்டிருக்கிறாய். உனக்கு என்ன பயித்தியமா? என்றாள்.

மூன்று மாத காலத்தில் மறுபடியும் எழுதி அந்தத் தேர்வில் தேர்ச்சி பெற்றுவிட்டேன். அந்த மூன்று மாத காலம் கர்த்தர் என்னை பிரயோசனப்படுத்தின நாட்களாய் இருந்தது. அந்த நாட்களில்தான் என் சகோதரிக்கு நான் ஆண்டவரைப் பற்றிச் சொல்லி அவள் இரட்சிக்கப்பட அஸ்திபாரம் போட்ட நாட்களாய் இருந்தது. ஒரு ஆத்துமா இரட்சிக்கப்படுவது என்பது அவ்வளவு இலேசான ஆதாயமா? அதற்கு மூன்று மாதகால இழப்பு ஒன்றும் பெரிதல்லவே.

வேதம் சொல்லுகிறது, **“அன்றியும் அவருடைய தீர்மானத்தின் படி அழைக்கப் பட்டவர்களாய்த் தேவனிடத்தில் அன்பு கூறுகிறவர்களுக்கு சகலமும் நன்மைக்கு ஏதுவாக நடக்கிறதென்று அறிந்திருக்கிறோம்”** *(ரோமர் 8:28).*

சில வேளைகளில் நம்முடைய அறிவுக்கு எட்டிய வரைக்கும் கர்த்தர் அனுமதித்த காரியத்தில் எந்த வித நன்மையும் இல்லாதது போலத் தெரியும். ஆனால் நாமோ நம்முடைய புத்தி சொல்லுவதையும், சூழ்நிலை உணர்த்துவதையும் நம்பாமல், விசுவாசத்தோடு தேவனை நோக்கிப் பார்க்க பழகிக் கொள்ள வேண்டும். நிச்சயம் ஒரு கால கட்டத்திலே கர்த்தர் நமக்கென்று ஆயத்தப்படுத்த வைத்திருக்கும் நன்மை வெளிப்படும்.



5 பொறுமை

சத்துரு நம்முடைய வாழ்க்கையில் கொண்டு வந்திருக்கும் தடைகள் நீங்க நமக்கு பொறுமை அவசியம் தேவைப்படுகிறது. நாம் விசுவாசத்தோடும் ஜெபத்தோடும் பொறுமையாக காத்திருக்க பழகிக் கொள்ள வேண்டும். பட்டனைத் தட்டியவுடன் பட்டென்று இயங்கும்படியாய் மனிதன் விஞ்ஞான ரீதியான கண்டுபிடிப்புகளை வைத்திருக்கிறான். இருந்த இடத்திலிருந்தே ரிமோட் கன்ட்ரோலரை இயக்கும்போது, மின் விசிறி, தொலைக்காட்சி, ஏசி எல்லாம் நொடிப்பொழுதில் இயங்குகிறது. இன்றைக்கு ஆண்டவரிடம் மனிதனின் எதிர்பார்ப்பும் அப்படித்தான் இருக்கிறது. முழங்காலில் நின்று ஒரு ஜெபத்தை ஆண்டவரை நோக்கி ஏறெடுத்தவுடன், பரத்திலிருந்து பதில் சட்டென்று வர வேண்டும் என்று எதிர் பார்க்கிறான்.

பூமியின் நற்பலனை ஒருவன் அடையவேண்டுமென்றால், அவன் முன்மாரிக்கும் பின்மாரிக்கும் நீடிய பொறுமையோடு காத்திருக்க வேண்டும். அப்படியே ஜெபத்திற்கான பதிலை நாம் பெறுவதற்கு பொறுமையோடு காத்திருப்பது மிகவும் அவசியமாயிருந்தது.

என்னுடைய வீட்டில் ஒரு அழகான வெள்ளை ரோஜாச் செடி இருந்தது. ஒவ்வொரு நாளும் அதை நான் போய் பார்ப்பேன். அநேக நாட்களுக்கு ஒரு தடவை அழகான வெள்ளை ரோஜா மலரும். அதைக் காலையில் சென்று பார்க்கும்போது மிகவும் அழகாய் இருக்கும். ஆம் அன்பானவர்களே, ஒரு அழகான ரோஜா மலர வேண்டுமானால், நீங்கள் அநேக நாட்கள் பொறுமையோடு காத்திருக்க வேண்டும். முதலில் நிலத்தைப் பண்படுத்த வேண்டும். சரியான அளவு மணல் செம்மண் உரம் வைக்க வேண்டும். செடியை நட்டு தண்ணீர் ஊற்றி பராமரிக்க வேண்டும். சில நாட்கள் கழித்து செடியில் இளந்துளிர் காணப்படும். பின்பு அந்தத் துளிர் கிளையாக உருவெடுத்து, கிளையின் நுனியில் அழகான அரும்பு தோன்றும். சிறிது நாட்களில் அது பெரிதாகி, அதனுடைய வர்ணம் வெளிப்படும். ஒரு நாள் அதிகாலையில் ஒரு அழகான ரோஜா மலராய் மலரும்.

அந்த ரோஜாச் செடியின் செழிப்பான வளர்ச்சி அநேக வேலைகளில் தடைபடுகிறது. வேர்பூச்சி இலைப்பூச்சி என்று தடைகள் வருகிறது. அதை வளர விடாமல் தடைசெய்கிறது. ஆனால் நாம் சோர்ந்து போகாமல் ஏற்ற பூச்சிக்கொல்லி மருந்தை செடியில் தெளித்து, மண்ணில் கலந்து அந்தச் செடியை பராமரிக்கும்போது, எல்லாத் தடைகளும் அகன்று போகிறது.

பாருங்கள் அந்த அழகான மலரை நாம் பார்க்க எத்தனை நாட்கள் காத்திருக்க வேண்டியுள்ளது. அவசரப்பட்டு நாம் அந்தச் செடியை வெட்டிப் போட்டோ, அல்லது கவனிக்காமல் விட்டுவிட்டாலோ அந்த அழகான மலரை நாம் பார்க்க முடியாமற் போகிறது.

அப்படியே அன்பானவர்களே, நம்முடைய வாழ்க்கையில் சத்துருவின் தடைகளைக் களைந்து போட்டு, தேவன் நமக்கென்று ஆயத்தப்படுத்தி வைத்திருக்கும் ஆசீர்வாதத்தை நாம் சுதந்தரித்துக் கொள்ள நமக்கு பொறுமை அவசியம் தேவைப்படுகிறது.

வேதம் சொல்லுகிறது, யோபின் பொறுமையைக் குறித்து கேள்விப்பட்டிருக்கிறீர்கள். கர்த்தருடைய செயலின் முடிவையும்

கண்டிருக்கிறீர்கள். **"கர்த்தர் மிகுந்த உருக்கமும் இரக்கமும் உள்ளவராய் இருக்கிறாரே"** என்று *(யாக்கோபு 5:11)*

யோபுவின் வேதனை பயங்கரமான ஒன்றாய் இருந்தது. ஒன்றன்பின் ஒன்றாக அநேக வேதனைகள் அவரை வாட்டியது. எல்லோராலும் கைவிடப்பட்ட நிலை. ஆனால் யோபுவோ பொறுமையோடு காணப்பட்டான். கர்த்தர் யோபுவின் நண்பர்கள் மீது கோபம் கொள்கிறார். அவர்களைப் பார்த்து சொல்கிறார். **"என் தாசனான யோபு பேசினது போல நீங்கள் என்னைக் குறித்து நிதானமாய்ப் பேசவில்லை"** என்று *(யோபு 42:7)* கர்த்தர் யோபுவின் பொருமைக்கான பலனைக் கொடுத்தார். **"அவன் முன்னிலைமையைக் காட்டிலும் அவன் பின்னிலைமையை ஆசீர்வதித்தார்"** *(யோபு 42:12)*

வேதம் சொல்லுகிறது **"வாக்குத்தத்தம் பண்ணப்பட்டதை பெறும்படியான பொறுமை உங்களுக்கு வேண்டியிருக்கிறது"** என்று *(எபிரேயர் 10:36)* கர்த்தர் நமக்கு வாக்குத்தத்தம் செய்யும் போது நிச்சயம் நிறைவேற்றித் தருவார். அதற்குத் தடையாய் நிற்கும் எல்லாத் தடைகளையும் அகற்றிப்போட அவர் வல்லமையுள்ளவர்.

ஆனால் கர்த்தர் தாம் சொன்னதை நிறைவேற்ற ஒரு காலக் கட்டத்தைக் குறித்து வைத்துள்ளார். அவருடைய அந்த நேரத்திற்கு காத்திருப்பது மிகவும் அவசியமான ஒன்றாய் இருக்கிறது. வேதம் சொல்லுகிறது. **"ஏற்றக் காலத்தில் தேவன் உங்களை உயர்த்தும்படிக்கு அவருடைய பலத்த கரங்களுக்குள் அடங்கியிருங்கள். அவர் உங்களை விசாரிக்கிறவரானபடியால் உங்கள் கவலைகளையெல்லாம் அவர்மேல் வைத்து விடுங்கள்"** *(Iபேதுரு 5:6,7).*

அடிமையாய் விற்கப்பட்ட யோசேப்பு ஒரு காலக்கட்டத்தில் எகிப்து தேசம் முழுவதுக்கும் அதிபதியானான். கர்த்தர் யோசேப்புக்கு இதனைச் செய்ய சித்தம் கொண்டார். ஆனால் ஒரிரு நாட்களில் இந்த அற்புதம் நிகழவில்லை. யோசேப்பு பல வருடங்கள் பொறுமையாய் காத்திருக்க வேண்டியிருந்தது. அப்பாவின் செல்லப் பிள்ளையாக இருந்த அவன் இருபது வெள்ளிக்காசுக்கு அடிமையாக விற்கப்படுகிறான். பிறகு போத்திபார் அவனை விலைக்கு வாங்கினான். அதற்கு பிற்பாடு

அவன் செய்யாத குற்றத்திற்காய் சிறையில் அடைக்கப் படுகின்றான். இவ்வளவையும் அவன் கடந்த பிற்பாடுதான் ஒரு காலக்கட்டத்தில் அவன் உயர்த்தப்படுகிறான்.

கர்த்தர் தம்முடைய பிள்ளைகளின் வாழ்க்கையில் ஒவ்வொன்றையும் திட்டமிட்டு நேர்த்தியாய் அதினதின் காலத்தில் செய்து முடிக்கிறார். நாம் அதை விசுவாசித்து பொறுமையோடு இருந்து பெற்றுக்கொள்ள வேண்டும். அன்பானவர்களே, சத்துரு கொண்டு வரும் தடைகள் நம்மை ஆண்டவரைவிட்டு பின் வாங்கச் செய்யும் ஒன்றாய் இருக்க நாம் ஒரு போதும் அனுமதிக்கக் கூடாது.

கோழிக் குஞ்சுகளை கவனித்துப் பாருங்கள். அவைகளைத் தாயினிடத்து அனுமதியாமல் தடைசெய்து பாருங்கள். இங்குமங்குமாய் தன் தாயைத் தேடி ஓடும். காதடைக்கும் படியாய் கத்தும். எதையும் சாப்பிடாது. எப்படியாவது தன் தாயோடு போய் சேர்ந்து கொள்ளும்.

ஆம் நாமும்கூட கர்த்தரில் எப்பொழுதும் நிலைத்திருக்க வாஞ்சையுள்ளவர்களாய் இருக்க வேண்டும். அப்படிப்பட்ட வாஞ்சை நமக்குள் இருக்குமானால், நாம் கர்த்தரில் நிலைத்திருப்பதை சத்துருவின் எந்தத்தடையும் தடைசெய்ய முடியாது

“வெள்ளம் போல் சத்துரு வரும்போது, கர்த்தருடைய ஆவியானவர் அவனுக்கு விரோதமாய்க் கொடியேற்றுவார்” ***(ஏசாயா 59:19).*** ஆம் சத்துரு வெள்ளம் போல் தடைகளைக் கொண்டு வந்து நம்மை திகைத்து மிரண்டு நிற்க வைக்கலாம். ஆனால் கர்த்தரின் ஆவியானவர் அவனுக்கு விரோதமாய்க் கொடியேற்றும்போது, அவரை எந்த வல்லமையாலும் தடை செய்ய முடியாது.

ஆகவே, அன்பான விசுவாசிகளே உங்கள் வாழ்க்கையிலே சத்துரு கொண்டு வரும் தடைகளைக் கண்டு சோர்ந்து போகாதிருங்கள்.

சத்துரு தடைகளைக் கொண்டு வரும்நோக்கமே, உங்களை ஆண்டவரை விட்டு பின்னுக்கு இழுக்கத்தான். ஆகவே ஒரு போதும் சாத்தானுக்கு இடம் கொடுக்காதிருங்கள். தேவனுக்கு

கீழ்ப்படிந்திருங்கள். **"பிசாசுக்கு எதிர்த்து நில்லுங்கள். அப்பொழுது அவன் உங்களை விட்டு ஓடிப்போவான்"** *(யாக்கோபு 4:7)* கர்த்தரில் எப்பொழுதும் நிலைத்திருந்து அவரை உங்களுக்கு முன்பாக வைத்து அவரையே நோக்கிப் பார்க்கும்போது, அவர் தம்முடைய வாக்குத்தத்தின்படி உங்களுக்கு முன்பாய் நடந்து தடைகள் எல்லாவற்றையும் அகற்றிப் போடுகிறவராய் இருக்கிறார்.

வேதம் சொல்லுகிறது, **"தடைகளை நீக்கிப் போடுகிறவர் அவர்களுக்கு முன்பாக நடந்து போகிறார். அவர்கள் தடைகளை நீக்கி வாசலால் உட்பிரவேசித்துக் கடந்து போவார்கள். அவர்கள் ராஜா அவர்களுக்கு முன்பாகப் போவார். கர்த்தர் அவர்கள் முன்னிலையில் நடந்து போவார்"** *(மீகா 2:13)*

ஆமென்.


குணமாக்கும்
கரங்கள்

குணமாக்கும் கரங்கள்

இங்கிலாந்து தேசத்தில் ஒரு ஏழைக்குடும்பத்தில் பிறந்தவன் ஜிம். ஜிம் மிகவும் சிறியவனாக இருக்கும்போதே அவன் தகப்பனார் நோய்வாய்ப்பட்டு இறந்துவிட்டார். ஆனால் அவன் அம்மா அவனை மிகவும் நேசித்து, கஷ்டப்பட்டு அவனைப் படிக்க வைத்தாள். தினமும் கடவுளைப் பற்றிய காரியங்களை சொல்லிக் கொடுத்து தெய்வபயத்தோடு அவனை வளர்த்து வந்தாள். சிறிது நாட்களில் எதிர்பாராதவிதமாக ஒரு கொடிய வியாதியினால் அவன் அம்மாவும் இறந்து போய்விட்டாள்.

அதன்பின் ஜிம் உறவினர்களால் அநாதை இல்லத்தில் சேர்க்கப்பட்டான். படிப்பை தொடர முடியாத ஜிம் சிறுவயதிலே வேலைக்குப் புறப்பட்டான். ஒரு மில்லில் சிறியவேலையில் சேர்ந்தான். அவன் வேலைக்கு புறப்பட்டும் போகும்போது, காலை 8.00 மணிக்கு சரியாக அங்குள்ள உள்ள ஒரு சின்ன தேவாலயத்துக்கு செல்வான். உள்ளே சென்றதும், இருகைகளையும் கூப்பி, "இயேசப்பா நான் ஜிம் வந்திருக்கிறேன்." என்ற ஒரு வார்த்தையை மட்டும் தினமும் சொல்லிவிட்டு தன் வேலைக்கு போய்விடுவான்.

காலை 8.00 மணிக்கு அந்த தேவாலயத்தில் எப்படியும் ஜிம் இருப்பான். அவன் அங்கு வந்துபோவது ஒரு வழக்கமான செயலாகிவிட்டது. ஒருநாள் எப்போதும் போல ஆலயத்திற்கு வந்துவிட்டு ரோட்டை தாண்டிச்செல்லும் நேரத்தில் வேகமாக அந்தப்பக்கம் இருந்து வந்துகொண்டிருந்த ஒரு பைக்கில் அடிப்பட்டு தூக்கி எறியப்பட்டான். கைகால் அடிப்பட்டு இரத்தம் ஓடியது. அந்த இடத்திலே சுயநினைவை இழந்து மயக்கமடைந்தான். சுற்றியிருந்த மக்கள் அவனை ஆஸ்பத்திரியில் சேர்த்தனர். டாக்டர்களும் உடனே தீவிர சிகிச்சை செய்தனர். ஆனாலும் அன்று முழுவதும் அவன் கண் விழிக்கவேயில்லை.

மறுநாள் காலை ஜிம்மிற்கு சற்று உணர்வு திரும்பியது. ஆனால் அவன் படுக்கையைவிட்டு எழுந்திருக்க முடியாத நிலை

விசுவாசிகளின் வாழ்க்கையிலே இரண்டுவிதமான தடைகள் காணப்படுகிறது. ஒன்று கர்த்தர் விதித்திருக்கும் தடைகள், கர்த்தரின் பிள்ளைகள் தேவன் விதித்திருக்கும் தடைகளுக்கு கீழ்ப்படிய வேண்டும். ஒருபோதும் அவைகளுக்கு எதிர்த்து நிற்கக்கூடாது. மற்றொன்று சத்துரு கொண்டுவரும் தடைகள். சத்துருவின் தடைகளைக் கண்டு தேவ பிள்ளைகள் ஒருபோதும் சோர்ந்து போகக்கூடாது. தேவன் தம்முடைய பிள்ளைகளின் வாழ்க்கையிலே திட்டமிட்டு வைத்திருக்கும் நன்மைகளையும் ஆசீர்வாதங்களையும் சத்துருவின் எந்த வல்லமையும் தடைசெய்ய முடியாது. தடைகளை நீக்கிப் போடுகிறவர் அவர்களுக்கு முன்பாக நடந்து போகிறார். அவர்கள் தடைகளை நீக்கி, வாசலால் உட்பிரவேசித்து கடந்து போவார்கள்; அவர்கள் இராஜா அவர்களுக்கு முன்பாக போவார்; கர்த்தர் அவர்கள் முன்னிலையில் நடந்து போவார் (மீகா 2:13)